ABBEY TRAINING.NET
Off Licence / Restaurant
வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 07 ♦ ISSUE - 133 ♦ 01 FRIDAY OCTOBER 2010

RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




SRINIVASANS SOLICITORS
சகல விதமான சட்டப் பிரச்சனைகளிற்கும் நிபுணத்துவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனம். தற்போது பின்வரும் பிரச்சனைகளுக்கு ஆரம்ப இலவச சட்ட ஆலோசனையை தமிழ் மொழியில் வழங்கி வருகின்றோம்.
- 5ம் திகதி மார்ச் மாதம் 2007 ஆண்டுக்கு முன்னர் அகதி தஞ்ச விண்ணப்பம் கோரி இன்னமும் நிரந்தர விதிவித உரிமை கிடைக்கவில்லையா?
- அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பின்னர், Fresh Application அல்லது மேலதிக விண்ணப்பம் - Home Officeக்கு செய்தும் 12 மாதகாலமாக அல்லது அதற்கு மேலாகியும் எந்தவித பதிலும் கிடைக்கவில்லையா?
- சரியான முறையில் Legacy விண்ணப்பம் செய்தும் இன்னும் உங்களிற்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லையா?
- 9ம் திகதி September 2010ல் வந்த புதிய சட்ட கொள்கைப்படி வேலை செய்வதற்கான உரிமை கோரும் விண்ணப்பம் செய்தீர்களா?
Head Office
2nd Floor, 7A High Street,
Wanstead London E11 2AA
மேலதிக சட்ட ஆலோசனைகளிற்கு அழையுங்கள்:
Mr.சீனிவாசன் அல்லது Mr. கலாதரன்
Call : 020 8989 2956 / 07827 452 683

Ersan & Co
SOLICITORS
Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.
"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"
தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.
உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.
ERSAN & CO SOLICITORS



7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

SAME DAY UK VISA SERVICES
Indefinite Leave to Remain(ILR)
One Day Visa Service From: £299
OISC Registered Immigration Advisor
K. KANDEL
Contact Us for more information
TEL: 0208 572 6386
MOB: 07772 641 180
www.ukvisaexpert.com
NO WIN NO FEE
KAMAL KANDEL OISC N:F200700150
www.ukvisaexpert.com
4 Hazel House, Pownall Road, TW3 1YN

TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S & A/2 Students
All examination boards Covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams.
For further details call
KAMALANATHAN BSC (HONS)
Tel : 020 8883 3126
Mobile: 079 7083 9507
North, East, North-East & North-West London areas

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# VINCENT SOLICITORS

- ✓ இந்த நாட்டில் பல வருடங்களுக்கு மேல் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோருக்கு உத்தரவாதத்துடன் கூடிய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும். (லெஹசி)
- ✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.
- ✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.
- ✓ (Legacy) லெஹசி என்பது நிராகரிக்கப்பட்ட உங்கள் அகதி அந்தஸ்து உரிமையை நிரந்தர வதிவிட உரிமையாக பெறுவதற்கான ஒரு ஏற்பாடு என்பதை அறிவோம்.
- ✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விணிணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
- ✓ மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்
- ✓ PSW, Tier - 1, Tier - 2, Tier - 4 விண்ணப்பங்கள், மற்றும் உறவினர்களை பிரித்தானியாவிற்கு அழைப்பித்தல்
- ✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.



## 020 8574 0666

11-13 Southall Street, Southall, UB1 1SU (ஹிமாலயா சினிமா எதிரே)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.






**Price starts from £1100**

176 Merton High Street
South Wimbledon SW19 1AY
020 8540 0359
077 456 456 45
www.postechnology.co.uk

FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER



# Mass Global Shipping

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing
Serving all the Sri Lankan Communities

Best Rate Guaranteed for Car shipments and 20ft & 40ft Containers



*Most professional Sri Lankan Shipping Company in UK*

* Packers * Movers * Shippers

WE OFFER THE BEST SERVICES
THAN ALL THE OTHER IN THE TRADE!

**FREIGHT ONLY £10.00**
**FREIGHT AND BOX £15.00**
(volume 4.5Cu.ft)

**4 Collection Points**
Harrow,
Watford,
Knightsbridge,
Croydon

**Wooden boxes from £9.00**

## Call 0208 3862314

Local Collection Charge £5.00 up to Hounslow. Within M1 collection charge £15.00 upto Coventry
All other area's we will offer the best rates

*Special rates for Containers and Machinery*

Warehouse address:
1 Bradfield Road (Off Field End Road),
Ruislip HA4 ONU

**Hot Line 24/7**
**079 4010 8177**

E-mail: info@massshipping.com
Web: www.massshipping.com



## ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.
we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.



உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை வீணடிக்காமல் உடனே தொடர்புகொள்ளுங்கள்.



இன்றே எங்கள் சிறப்பான வைத்தியர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
(தமிழ் பெண் வைத்திய நிபுணரிடமும் தொடர்புகொள்ளலாம்)

herbalAid
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
herbalaid@hotmail.co.uk

Tel : 02088430330 Mobile : 07546651898






*Arumbukal Marriage Brokers*

Tel : 02086821057 | 020 3318 8848
Mob:07889 930 130 Fax : 02086821057
E.Mail : info.arumbukal@gmail.com



### ஆசை நிறைவேறவில்லை

வருங்காலப பிரதமருடன் படம் எடுத்துக்கொண்டதாக எண்ணியிருந் தேன். எட் மிலிபான்ட் தொழில் கட்சி தலைவராக வந்து எனது எண்ணத் தில் மண்ணைப் போட்டுவிட்டார். தமிழ்ஸ் போர் லேபர் அவருக்கு ஒரு வரவேற்பு வைபவத்தை ஒழுங்கு செய்து அவருடன் படம் எடுக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தராதா?

*- தவசீலன்*

### முதலமைச்சர் கனவு

மகிந்த மாகாண சபைகளுக்கு அதி காரத்தை குறைத்தாலும் முதலமைச் சர் நாற்காலிக்கான அடிபிடி குறைய வில்லை. அடுத்த வருசம் நடக்க விருக்கும் வடமாகாண சபை தேர்த லில் போட்டியிட கூட்டமைப்புக் குள்ளேயே பெரும் அடிபிடியாம். சுரேஸ் ஒரு பக்கத்தாலை ஆட்களை திரட்ட, வெளிநாடுகளுக்கு வந்து ஆதரவு தேடுகிறார் முன்னாள் ஊடகவியலாளரும் சிறை மீண்ட செம்மலுமான வித்தியாதரன் (அன்னார் உள்ளுக்கு போனதே கோத்தாபையவுடனான செட் அப் கேம் எண்ட கதை வேறு அடிபடுகுது)

*- கோணேஸ்வரன்*

### வைரமுத்து ஆங்கிலத்தில் பாட்டு எழுதுவாரா?

வைரமுத்து வாலி போன்றவர்கள் ஆங்கிலத்தைக்கலந்துதமிழ்ப்பாட்டு எழுதுவது சரி, அவர்களால் தனித்து ஆங்கிலத்தில்பாட்டுஎழுதமுடியுமா? அப்படி எழுதினாலும் அது ரசிக்கத் தக்க விதத்தில் இருக்குமா? முடிந்தால் எழுதிக் காட்டட்டும்.

*- தாமரை ரசிகன்*

### சம்பந்தனுக்கு சுகமில்லையாம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மூன்று மாதம் சுக வீனலீவில் சென்னையில் தங்கியிருக் கிறார். இருப்பினும் சுகவீனத்திற்கும் மத்தியிலும் கடமை தவறாமல் தலை வர்களை சந்திப்புகளை நடாத்தி வருகிறார். இதிலை என்ன சிக்கல் என்றால், நெடுநாளாய் வெளிநாட்டிலை தங்கியிருந்தவர் என்ற காரணத்தை காட்டி அவருக்கு அடுத்த தேர்தலில் சீட் கொடுக்க மறுத்து விடுவார்கள்.

*- ஜே.ரி. தங்கவேல்*

### நான் ஒரு சுழியன்

கடந்த இதழில் வெளிவந்த 'நான் ஒரு சுழியன்' கதை உண்மைக் கதையாகவே தோன்றுகிறது. நகைச் சுவையாக எழுதப்பட்டிருந்தாலும் பலவிடயங்களைபுட்டுக்காட்டுவதாக அமைந்திருந்தது. அதை எழுதிய புத்தன் அவர்களுக்கு பாராட்டு களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- சத்தியன்*

### முதியோர் இல்லங்களை நினைக்க பயமாய் இருக்கு

West Sussex இல் எங்கடை தமிழ் ஆட்கள் நடாத்தி வந்த முதியோர் காப்பகத்தில் முறை கேடுகள் நடந்த தாக பேப்பர்களிலை போட்டிருக்கு. இங்கை வேலைக்கு வைக்கப்பட்டி ருந்தவர்கள் விசா இல்லாத ஆட்க ளாம், அவையளை கிழமைக்கு 90 மணித்தியால் வேலை செய்யச் சொல்லிகட்டாயப்படுத்தினார்களாம் உரிமையாளரான தமிழ் தம்பதிகள். இவையள் 4 வீலருகளிலை ஓடிக் கொண்டு பெரிய பெரிய வீடுகளிலை இருந்து கொண்டு சனத்தை கஸ்ரப் படுத்தியிருக்கினம்.

*- மங்கையர்கரசி*

### இது அழகல்ல

முன்னர் ஒரு பேப்பர் கவரில் போடுகிற படமும் கவிதையும் நன்றாக இருந் தது. எங்களுக்கு உணர்ச்சியையும் தட்டி எழுப்பும். ஆனால் இப்ப வருகிற படமும் வசனங்களும் தமிழரை நக்கல் அடிக்கிற மாதிரியும் கொச் சைத் தமிழிலும் வருகிறது. ஒரு பேப்பர் ருக்கு இது அழகல்ல.

*- அழகு*

### ஒண்டுமா விளங்கேல்ல...

இன் நிலைப்பாடு என்ன? பொறுப் பாசிரியர் கோபி கே.பி யை அறிவுக் கொழுந்து என்று நக்கலடிக்கிறார். ஆசிரியர் குழுவில் இருக்கும் சேயோன் கே.பியை விளங்க வேண் டும் என்கிறார். சென்ற ஒரு பேப்பரில் சேயோனைத் தாக்கி இரண்டு கட்டுரைகள் வந்திருக்கின்றன. ஒரு பேப்பர் க்கு என்ன குழப்பம்?

*- தவசீலன்*

### தேசியப் பத்திரிகை

நானும் தொடர்ந்து கவனித்து வருகி றேன். ஒரு பேப்பர் ஒன்று தான் தமிழ்த் தேசியத்தை அணைய விடாது காத்து வருகிறது. தியாக தீபம் திலீபன் அண்ணாவைப் பற்றி நல்லதொரு ஆக்கத்தை ஒரு பேப்பர் இல் மாத்திரமே கண்டேன். ஏனைய போராளிகள் பற்றியும் மாவீரர்கள் பற்றியும் ஒரு பேப்பர் மாத்திரமே நினைவு கூறுகி றது. ஒரு பேப்பர் ரே தமிழத்தின் தேசியப் பத்திரிகை.

*- திவாகரன்*

### கோள்மூட்டல்

கானா பிரபாவின் கோள்மூட்டல் நல்லா இருக்கு. யாழ்ப்பாணத்தில் நிற்பது போல் இருக்கு. பாலா சேரை அறியத் தந்ததற்கு மிக்க நன்றி.

*- மணிசேகரன்*

### சாவீட்டு செலவு குறையுதாம்

எல்லா பொருட்களினதும் விலை ஏறிக் கொண்டு போகேக்கை, சாவீடு செய்யிற செலவு மட்டும் வருசா வருசம் குறைகிறதாக கணிப்பிட்டி ருக்கிறார்கள். சாகிற ஆட்கள் குறை ஞ்சிட்டுதோ தெரியவில்லை, இது மற்ற இன மக்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். ஆனால் எங்க ளுக்கு ஐயர்மார் ரேட்டை குறை ச்சால்தான் உண்டு.

*- சச்சிதானந்தம்*

### இந்தியாவைச் சுற்றி சீன 'டிராகன்' – பழ. நெடுமாறன்

அட பெரியவர் இந்த வயசான காலத் தில் இதெல்லாம் தேவையா அந்த காலம் முதல் இதே தான் சொல்லி வருகிறீர்கள்... யாரும் கேட்டபாடு இல்லையே... தேசிய பாதுகாப்பு ஆலோசகர்.. பாதுகாப்பு செயலளர் போன்ற பதவிகளெல்லாம் எதுக்கு இதெல்லாம்? பாதிப்பு முதலில் தமிழ் நாட்டுக்குதான் என அனைவருக்கும். எல்லாருக்கும் எல்லாம் தெரியும்.. அதனால்தான் சிரித்து கொண்டு உள்ளார்கள். கிந்தியாவுக்கு ஆலோ சனை சொல்வதை விடுத்து தமிழர் நாட்டுக்கு பக்கம் லைட்டா வாங்கோ இருக்கிற கொஞ்ச காலம் நாங்க ல்லெலாம் சுகமாக வாழ வழி சொல்லுங்கோ.

*- புரட்சிகர தமிழ்த் தேசியன்*

### தொடர்ந்து எழுத...

கடந்த இதழில், வாசகர் ஒருவர் கேட்டதிற்கிணங்க, இந்த இதழுக்கு உலக நடப்பு பற்றிய ஆக்கத்தையும், தகவல் களஞ்சியம் பகுதியில் சேர்த் துள்ளேன். இது பற்றிய வாசகர் களின் கருத்துகளை அறிய ஆவலா யுள்ளேன். ஆக்கத்திற்கு ஊக்கம் கிடைக்குமானால், தொடர்ந்து எழுது வதில் எனக்கு முழுச்சம்மதமே.

*- மகாலிங்கம்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற் கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

## ஏன் இந்த குழப்பம்?

செப்ரெம்பர் 17ம் திகதி வெளிவந்த ஒரு பேப்பரில் 'என்ன சொல்ல வருகிறார் இந்த சேயோன்'? என்ற விமர்சன கட்டுரையை படித்தவுடன் கொஞ்சம் மனதில் சந்தோஷம் ஏற்பட்டது. காரணம், இதற்கு முந்தைய ஒரு பேப்பரில் எழுதிய 'சற்று மாறுதலுக்காக'வை பார்த்து அதிர்ந்து போனேன்.

சில வேளைகளில் நல்லதையே சொல்லி வந்த சேயோனுக்கு புத்திகித்தி குழம்பிவிட்டதா? என்று கூட சிந்தித்தேன். கருணா, கே.பி போன்றவர்களுக்கு வக்காளத்து வாங்குவது போல் எழுதியிருந்தார். கருணா துரோகியாகும் முன்பு அவரை யாரும் துரோகி என்று சொன்னார்களா? அல்லது துரோகி துரோகி என்றுதான் அவரை யாரும் துரோகி ஆக்கினார்களா?

மாறாக விடுதலைப் புலிகளிடமிருந்து தன் தவறுகளை மறைப்பதற்காக தானே பிரிந்து நின்று விடுதலைப் புலிகள் ஏதோ கிழக்குமாகாண மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டார்கள் என்ற தொனியில். கிளிநொச்சி நகரையும் கிழக்கு மாகாணங்களையும் ஒப்பீட்டளவில் காரணம் காட்டி தமிழ் மக்களுக்கு எதையும் ஒப்புவிக்காது பிரதேச வாதத்தை கையிலிருந்து சிங்களத்தின் காலைப்பிடித்து ஈழ மக்களுக்காகப் போராடிய அந்த மி கப்பெரிய இயக்கத்தையும் காட்டிக் கொடுத்து சிங்களத்தின் காலடியில் கிடக்கும் கருணாவை துரோகியென்று சொல்லாமல் எப்படிச் சொல்வது?

சேயோன் அவர்கள் கே.பிக்கு சார்பாக சில கருத்துக்களை எழுதியிருந்தார். சேயோன் அவர்களே கே.பி இத்தனை காலமாக எத்தனையோ நாடுகள் அவரை பிடிக்கத் தேடியும் அத்தனை நாடுகளுக்கும் கண்களிலே மண் தூவி திரிந்த கே.பி ஏன் திடீரென்று சனல் 4 தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுக்க வேண்டும்? நேர்காணல் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே நிருபர் சொல்கின்றார் 130ற்கும் மேற்பட்ட நாட்டு கடவுச்சீட்டுகளுடன் விடுதலைப் புலிகளுக்கு வேலை செய்த கே.பி இவர்தானென்று.

ஆகவே சனல் 4ற்கு நேர்காணல் கொடுப்பதற்கு முன்பாகவே அவர் பிடிபடுவது போல் பிடிபடுவதென்பதும் தமிழ் மக்களை விடுதலைப் பாதையிலிருந்து வேறு பாதையில் திசை திரும்புவதென்பதும் மிகவும் நேர்த்தியான முறையில் உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் சனல் 4 நிருபருக்கு அழைப்பு விடப்பட்டது. இதுதான் உண்மையும் கூட.

இன்றைக்கு இலங்கைத் தீவில் இருந்து கொண்டு சிங்களத்தின் அடாவடித்தனங்களை வேறு பல நாடுகளுக்கும் தெரியப்படுத்துவது இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரே. அவர்களையும் போலி அமைப்பென்று முத்திரை குத்தும் சேயோன் அவர்கள் கருணாவை துரோகியாக்காமல் இருந் திருந்தால் அவரை வைத்தே நிறைய சாதித்திருக்கலாம் என்று எழுதிவிட்டு இன்று அதே கருத்தை மறந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதே போலிச்சாயம் பூசி அவர்களையும் தமிழ்மக்களிடமிருந்து பிரிந்து சிங்களவர்களிடம் சிநே கம் கொள்ள வைகடகப்போகின்றாரா இந்த சேயோன், ஐயா சேயோன் அவர்களே இது எங்கேயோ உதைப்பது மாதிரித்தான் தெரிகிறது.

காரணம் இலங்கையில் EPDPயினர் மற்றும் பிள்ளையான் கட்சியினர் தமிழ் மக்களிடம், கொலை, கொள்ளை, கப்பம், ஆட்கடத்தல் மேலும் சிங்கள ஆட்சிக்கு துதிபாடுதல் போன்ற மிகவும் ஈனமான முறையில் தங்கள் கட்சி நடவடிக்கையை மேற்கொள்கிறார்கள். இவர்களையெல்லாம் போலியென்று கூற மறந்த சேயோன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சாடியிருப்பது வருத்தத்துக்கும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

*- வ. கணேஷ்*

## மக்கள் கருத்து

### மஹிந்தரை ஏற்றுக் கொள்ளுங்கள்! தமிழருக்கு சொல்ஹெய்ம் ஆலோசனை

இவருடைய ஆலோசனை மட்டும் தான் தமிழர்களுக்கு முக்கியமான தேவையா? போங்கையா நீங்களும் உங்கட சமாதானச் செயற்பாடுகளும். உங்கள் சமாதான முயற்சியின் விளைவு 50 ஆயிரம் உயிர்களும் பல கோடி சொத்தழிவுகளும்தான்.

*- புலவர் (யாழில்)*

ஒரு இனத்தை அழித்து பின் எஞ்சியிருப்பதை அடிமைப் படுத்தும் திட்டத்தின் சொந்தக்காரர்களே இந்த வெள்ளையினப் பேய்கள் தான். மூதூரைப் பிடித்து திருகோணமலையை துறைமுகத்தை ஆட்டிலெறி வீச்சுக்குள் கொண்டுவந்த போது இந்த நரி பாய்ந்தடித்து வந்து புலிகளோடு பேசியதும் அவர்கள் பின்வாங்கிவிட்டனரே. இந்த நரியின் சொல்லை கேட்காமல் விட்டிருந்தால் நிலமையே வேறு விதமாகத் திரும்பியிருக்குமோ என்னவோ?

*- காட்டாறு (யாழில்)*




Kerala Ayurveda

TRADITIONAL KERALA AYURVEDIC MASSAGE THERAPY – A HERBAL REMEDY

We are delighted to announce that Kerala ayurveda has opened a new branch in Kenton, Harrow. We hope to see you soon.

Our unique Ayurveda Pancha Karma therapy

- ✓ Reduces aches and pains
- ✓ Reduces stress and tension
- ✓ Cleanses body toxins
- ✓ Refreshes the skin, deep cleans & moisturises
- ✓ Helps Skin allergy and eczema
- ✓ Improves sleep patterns
- ✓ Release muscle tensions
- ✓ Relieve migraine
- ✓ Relieve nasal and sinus blocking



Full BODY Massage
~~£35~~ £25

241, Kenton Lane, Kenton, Harrow HA3 8RP Call: 020 8907 8990

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, OCTOBER 01, 2010, ISSUE 133

## உரிமைகளை மறந்து சலுகைகளுக்காய் கையேந்தும் நிலை

இறுதிப் போரின்போது கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த போராளிகள், அனைத்துலக நியமங்களுக்கு புறம்பாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதனை கண்டித்து அனைத்துலக நீதியாளர் ஆணையம் (ICJ) அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில், சிறிலங்கா அரசாங்கமானது சர்வதேசச் சட்டங்களுக்கு மட்டுமல்ல உள்நாட்டுச் சடடங்களுக்கு ஏற்பவும் நடந்து கொள்ளவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளதோடு, கைதிகளின் விருப்பத்திற்கு மாறான 'புனர்வாழ்வு' நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ள முடியாது என க்குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் இவ்வறிக்கையை புறந்தள்ளி, தம்மை நியாயப்படுத்தி வருகின்ற போதிலும், சர்வதேச நீதித்துறை சார்ந்த அமைப்பு ஒன்றினால் வெளியிடப்பட்ட கனதியான அறிக்கையை சர்வதேச சமூகம் புறக்கணித்து விட முடியாது.

சிறிலங்காவின் 'புனர்வாழ்வு' நடவடிக்கைகளுக்கென நிபந்தனையற்ற முறையில் உதவி வழங்குவதன் பாதகமான விளைவுகளும் இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் போர்க்கைதிகள், அரசியற் கைதிகள் என்போர் சாதாரண குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்ப்பட்டுள்ளவர்களைக் காட்டிலும், அதிகமான உரிமைகளை கொண்டவர்களாக கருதப்படுகிறார்கள். ஆனால் இதற்கு மறுதலையான நிலையே சிறிலங்காவில் காணப்படுகிறது. போர்க் கைதிகள் அடிமைகள் போன்றே நடாத்தப்படுகிறார்கள். அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதுடன் கைது செய்யப்பட்டவர்களில் பலரை தாம் கைது செய்யவில்லை என கைவிரிக்கும் நிலையும் உள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன், திரு. யோகரட்ணம் யோகி, திரு. சசிதரன் (எழிலன்), கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை போன்றவர்கள் கைது செய்யப்பட்டதனை உறுதிப்படுத்தும் கண்ணால் கண்ட சாட்சிகள் உள்ள போதிலும், அவர்கள் தம்மால் கைது செய்யப்படவில்லை என சிறிலங்கா தரப்பு மறுப்புத் தெரிவித்து வருகிறது.

கைதிகளையும், சரணடைந்தவர்களையும் விடுவிப்பதற்கு சலுகை அடிப்படையிலான அணுகு முறைகளை கையாள வேண்டும் என சில தமிழர்களே ஆலோசனை வழங்கி வருகையில், இவ்வகையான அறிக்கைகள் வெளிவருவது தமிழ் மக்களுக்கு சற்று ஆறுதலைத் தருகிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஒரு பேப்பர் ரில் எழுதுகிறவை அதிகமாய் புனை பெயர்களிலை எழுதியினம் என்ற ஒரு புறணி யிருக்கிறது எங்களுக்கு தெரியும். நாங்களும் அவை அவையின்ரை சொந்தப் பெயரிலை ஆக்கங்களை போட விரும்புகிறோம். ஆனால் அவையள் பயப்பிடுகிறார்கள். பிறகு வழி தெருவிலை காணுகிறபோது நிப்பாட்டி நீர் ஏன் இப்பிடி எழுதினனீர் என்று கேட்டு தொந்தரவு செய்வார்களாம். தனிப்பட்ட முறையில் தாக்குதல் நடத்துவார்களாம். இணையதளம் ஈமெயில் என்று அலுப்புத் தாங்கேலாது என்று விளக்கம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லிறதிலையும் நியாயம் இருக்கிறது. இதுபற்றின உங்களின்ரை அபிப்பிராயங்களை எழுதுங்கோ.*

*எவ்வளவுதான் பேப்பர் அடித்தாலும், ஒரு பேப்பரை ஐயும் காணேல்லை என்றுதான் கன பேர் சொல்லுகிறார்கள். நாங்கள் பேப்பரை வைத்துவிட்டு பக்கத்திலை காவல் காத்துக் கொண்டு நிக்கேலாது. ஆனபடியால் நீங்கள்தான் உதவி செய்யவேணும். எங்கை எங்கை பேப்பர் கூடுதலாய் தேவைப்படுகிறது என்று நீங்கள்தான் சொல்லவேணும். கடைக்கார அண்ணாமாரைக் கேட்டால் தம்பி, இயற்கை உபாதைகளையே கவனிக்கேலாமல் இருக்குது, இதுகளைக் கவனிக்கிறதுக்கு எங்களுக்கு எங்கை நேரம் என்று கேட்கிறார்கள்.*

*ஒரு பேப்பர் ரில் சிறுகதைகள் கவிதைகள் இலக்கிய விடயங்கள் பிரசுரிப்பது குறைந்துவிட்டமை கவனிச்சிருப்பியள். இதுகளுக்கு நாங்கள் ஒண்டும் தடை செய்யேல்லை. எழுதிற ஆக்கள் குறைஞ்சு போயிட்டினம் போல இருக்குது. கற்பனை வறண்டு போயிட்டுதோ தெரியவில்லை.*

*சிலர் வசனங்களை அங்கை இங்கை பிரிச்சுப் போட்டு, சில வசனங்களை திருப்பி திருப்பி எழுதிப் போட்டு கவிதை என்று அனுப்புகிறார்கள். அதுகளை நாங்கள் என்னெண்டு பிரசுரிக்கிறது? கவிதை எப்பிடி எழுதிறது எண்டு முன்னம் சபேசன் ஒரு தொடரையே எழுதியிருந்தார், வாசிச்சிருப்பியள்.*

*துயர் பகிரும் அறிவிப்புகளை வெளியிடுவதற்கு எமது வழமையான தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழமையான விளம்பரக் கட்டணங்களை விட குறைவான கட்டணங்களை அறவிடுவதாக எங்கட வர்த்தக விளம்பரப் பிரிவிலிருக்கிற ஆட்கள் சொல்லுகிறார்கள்.*

*இந்தக் கிழமை இரவி அண்ணாவின் ஐம்பதாவது பிறந்தநாள். அதை அவர் எளிமையாகக் கூட கொண்டாடவில்லை. அவரது எழுத்துப் பணியும் கலைப் பணியும் தொடர நலமாக வாழ வாழ்த்துகிறோம். (எங்களுக்கு அவரைப் போலை வயசில்லைத்தான் இருந்தாலும் அவருக்கு வணங்குவது பிடிக்காது என்பதால் வாழ்த்துகிறோம்.)*

*வேறை என்ன...*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# Why the world should be worried about Sri Lanka's deepening ties with China



*IAAF President Diack from Senegal with President Rajapakse*

**By Karunyan Arulantham**

GLOBAL POST

When the voters of war-torn Sri Lanka cast their ballots in last January's presidential election, little did they realize that the winner, incumbent Mahinda Rajapaksa, would take such an expansive view of his victory.

Eight months into his second term, Rajapaksa is engaged in an unprecedented power grab that is marginalizing religious and ethnic groups and endangering the island's fragile democracy. Earlier this month, the country's parliament abolished presidential term limits, effectively creating an imperial presidency.

No doubt Rajapaksa figures he deserves some spoils for being the leader who finally liquidated the Liberation Tigers of Tamil Eelam (LTTE) after a 26-year civil war. But he has given himself the portfolios of defense, finance and planning, ports, aviation and highways, and he has appointed one brother economic development minister and another defense secretary. Add a third brother as Speaker of Parliament, a cousin as deputy minister of water and drainage, and a son in the family's seat in parliament — and it's clear this is dynasty-building run amok.

People around the world greeted the end of Sri Lanka's war with relief. But it is time for Western governments and businesses to recognize the rising threat to freedom and use whatever leverage they have to stop Rajapaksa's divisive and anti-democratic policies, which are dovetailing with island's ever tighter embrace of China.

Dynastic politics is nothing new in South Asia, but the creation of this family juggernaut is particularly troubling. It comes after Rajapaksa and the Sri Lankan military achieved a decisive — and needlessly bloody — end to Sri Lanka's long war, killing as many as 40,000 people in the final weeks of fighting. Most were unarmed Tamil civilians.

In the wake of that campaign, Rajapaksa called an early election and coasted to an easy win, pledging to heal the wounds and divisions that left the country so devastated for so long. Tamils were skeptical, but hopeful.

> West should consider how many more borderline democracies it can afford to watch fall

Two weeks after his re-election, Rajapaksa's government arrested his defeated presidential opponent, who remains in custody on politically motivated charges. As part of a broad campaign to silence opponents, independent organizations report that press intimidation and human rights violations remain rampant.

Instead of embracing democracy, Rajapaksa and his supporters in parliament — where brother Chamal, as Speaker, sets the agenda — have launched a frontal assault on the constitution. In addition to abolishing term limits, other changes have ended independent oversight of appointments to the country's Supreme Court, human rights and electoral commissions — moves that vastly expand presidential powers and leave them unchecked by other branches of government.

The problems with these changes are numerous: Election promises to decentralize authority and grant more autonomy to Tamil areas in the north and east have been tossed out the window. Vital development aid is being poured into building beach resorts for foreigners and new military bases, while Tamil communities destroyed by warfare go without vitally needed new housing, hospitals, schools and churches. Tens of thousands of Tamils are still detained in camps, unable to return to their homes, while the government conducts a campaign to colonize Tamil areas with Sinhalese families, many with ties to the military. Tamil communities, and indeed the entire culture, are threatened with annihilation.

With Rajapaksa himself acting as Defense Minister and his brother Gotabaya serving as Defense Secretary, no one can challenge the use of Sinhalese Army troops to police Tamil majority regions of the island. But the continued military deployment is exacerbating ethnic tensions that originally sparked the civil war, and reports of harassment, plunder, and rape are multiplying. This will only get worse absent a legitimate peace and reconciliation process.

Truth and accountability are critical elements of reconciliation, but when UN Secretary General Ban Ki-moon created a three person panel of experts to look at war deaths in Sri Lanka, Rajapaksa's own housing minister rallied hundreds of protestors outside the UN's headquarters in Colombo, forcing the offices to be closed and the resident U.N. coordinator to be recalled to New York.

Rather than accept an independent probe, Rajapaksa formed his own "Lessons Learnt and Reconciliation Commission," which most outside observers consider is no more likely to uncover the truth about war crimes in Sri Lanka than the nine other government commissions that preceded it, none of which held anyone accountable.

The international community is not blind to what's happening in Sri Lanka, but democratic friends seem impotent as Rajapaksa ignores critics in the West and deepens ties with China. While China may be unfazed by the island's march toward autocratic rule, Sri Lankans should consider what a future with such limited friendships would look like. And the West should consider how many more borderline democracies it can afford to watch fall.

# தமிழ் மக்களின் பெருமூச்சு

இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகள் இன்று இருப்பதைப்போன்ற படுமோசமான பலவீனமான நிலையில் அவற்றின் வரலாற்றில் முன்னொருபோதுமே இருந்ததில்லை. தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு உருப்படியான அரசியல் அணுகுமுறைகளை வகுக்க இயலாமல் இந்தக் கட்சிகள் தடுமாறிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப் பதற்காக முதல் மூன்று தசாப்த காலமாக தமிழ் மிதவாத அரசியல் சக்திகளினால் முன்னெடுக் கப்பட்ட அமைதி வழிப் போராட்டங்களும் அடுத்த மூன்று தசாப்த காலமாக தமிழ்த் தீவிரவாத இயக்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டங்களும் தோல்வியைத் தழுவிய நிலையில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ஒன்று இல்லாமல் அரசியல் வெற்றிடத் தில் விடப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் எமது ஆசிரிய தலையங்கத்தில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் கட்சிகள் மத்தியில் இருந்து தமிழ் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்திருக்கின்ற போதி லும், மேற்கூறிய அரசியல் வெற்றிடத்தை நிரவக் கூடியதாக பயனுறுதியுடைய அரசியல் நடவடிக் கைகளை முன்னெடுப்பதற்கு தங்களைப் போது மானளவுக்கு தயார்படுத்த முடியாதவர்களாக அந்தப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

போரில் வெற்றிபெற்றதன் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் அமோக ஆதரவைக் கொண்டி ருக்கும் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மிகவும் பலம் பொருந்தியதாக மாத்திர மல்ல, தீவிர சிங்கள பௌத்த தேசியவாத சக்தி களின் கடுமையான செல்வாக்கிற்கு உட்பட்ட தாகவும் விளங்குகிறது.

சிறுபான்மை இனத்தவர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளில் எந்தவொன்றையுமே ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத இந்தச் சக்திகளை விரோதித்துக் கொள்ளக் கூடிய எந்த நகர்வையுமே அரச தலைவர் ராஜபக்ஷவின் அரசாங்கம் செய்யப் போவதில்லை.

அதனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை களுக்கான தீர்வு தொடர்பில் அணுக முடியாத தாக அரசாங்கம் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலை தமிழ்க் கட்சிகளை திரிசங்கு நிலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

பலம் பொருந்திய அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ளாமல் இணங்கிச் சென்று' பெறக் கூடியவற்றைப் பெற முயற்சிப்பதுதான் இன்றைய நிலையில் விவேகமான அணுகுமுறையென்று புத்திமதி கூறுகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை உண்மையில் அதிகரித்தே காணப்படுகிறது.

அத்தகைய அணுகுமுறையை இதுவரையில் கடைப் பிடித்தவர்களினால் உருப்படியாகச் சாதிக்க இயலுமாக இருந்த விடயங்களின் பட்டியல் கவலைக்குரிய வகையில் மிகவும் குறுகியதாகவே இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை, தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் அல்ல, அந்த மக்கள் மத்தியில் அதன் முகவர்களாகச் செயற்படக் கூடியவர்களுடனேயே ஊடாட்டங்க ளைச் செய்வதில் நாட்டம் கொண்டிருக்கிறது.

இனத்துவ அடையாளத்துடன் சிறுபான்மை இனத்தவர்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அரச தலைவர் ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் விரும்பவில்லை என்பது வெளிப்படையானது.

ஆனால், அத்தகைய இனத்துவ அடையாள அரசியலை நோக்கி சிறுபான்மையினத்தவர் களைத் தள்ளிவிட்ட படுமோசமான பாரபட்சங் களுக்கும் அடக்குமுறைகளுக்கும் காரணமான பேரினவாத அரசியல் முன்னரை விடவும் கூடுதலான அளவுக்கு தன் முனைப்புடன் இன்று தென்னிலங்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது.

இலங்கையில் சிங்களத் தேசியவாதமும் தமிழ்த் தேசியவாதமும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று போஷித்து வளர்த்து வந்திருக்கின்றன. இறுதியில் போரில் வெற்றிபெற்ற சிங்களத் தேசியவாத த்தின் ஆணைகளுக்குத் தமிழ்த் தேசியவாதம் அடிபணிய வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இதுவே இனத்துவ அடையாளத்துடன ான அரசியலை சிறுபான்மை இனத்தவர்கள் இனிமேல் முன்னெடுப்பது பொருத்தமானதல்ல என்ற வாதத்தின் பின்னணியில் இருக்கக் கூடிய தர்க்கமாகும்.

போர் முடிவுக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை. அவர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருக்கின்றன.

உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த அடிப்படை அரசியல் காரணிகளை இல்லாமற் செய்வதற்கான அரசியல் செயன்முறைகள் தாமதமின்றி முன் னெடுக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

ஆனால், அதில் அரசாங்கத்துக்கோ, தென்னி லங்கை அரசியல் சமுதாயத்துக்கோ எந்த விதமான அக்கறையுமே இன்று இல்லை. அரசியல் தீர்வு நோக்கிய பயனுறுதியுடைய அரசியல் செயன் முறைகள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் இன்று வடக்கு, கிழக்கில் காணப்படக் கூடியதாக இருக்கின்ற அமைதி வெறுமனே மயான அமைதி யாகவே இருக்கமுடியும்.

நிலைவரம் வேண்டி நிற்பதற்கேற்ப தங்களுக்கு இருக்கக் கூடிய வரலாற்றுப் பாத்திரத்தை தன் னுறுதியுடனும் அரசியல் துணிச்சலுடனும் வகிப் பதற்குத் தங்களைத் தயார் செய்யும் முயற்சிகளில் போதுமான அளவுக்குத் தமிழ் அரசியல்வாதிகள் அக்கறை காட்டவில்லை என்பதும் கடந்த கால அனுபவங்களிலிருந்து பெறக்கூடியதாக இருக்கும் முறையான படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரோக்கியமான அணுகுமுறைகளை வகுப்பதில் அக்கறை காட்டுவதாக இல்லை என்பதுமே எமது கவலையாகும்.

போருக்குப் பின்னரான காலகட்டத்தில் அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை அரசாங்கம் புரிந்து கொள்வதற்கு நிர்ப்பந்திக்கக் கூடிய வலு வான அரசியல் சக்திகள் தங்கள் மத்தியில் இல்லை யென்ற குறை நீங்குவதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ என்று ஏங்கிய வண்ணம் தமிழ் மக்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள்

*- நன்றி தினக்குரல்*

*வேருக்குள் உறுதி*
*கொண்ட வேம்பாய்*
*நிமிர்ந்தால்*
*யாருக்கும்*
*அஞ்சுவோமோ?*
*எவரிடமும்*
*கெஞ்சுவோமோ?*

OPINION

# Tamils say 'Adieu' to David Miliband!

**By Periasamy Kanthavel**

Tamils are generally happy and even thrilled to bid 'Adieu to David Miliband, the former British Secretary of State for Foreign and Commonwealth Affairs from 2007 to 2010. The son of late Marxist theorist Ralph Miliband, had a good run with the Labour party.

An Oxford Graduate, at 29 David Miliband became Tony Blair's Head of Policy whilst the Labour Party was in the opposition and was a major contributor to Labour's manifesto for the 1997 general election which brought the party to power. Blair made him head of the Prime Minister's Policy Unit from 1997 to 2001.

The Charge is Genocide and the Struggle is for Freedom!

It is very unfortunate that the baby-faced David Miliband never got the hang of the Sri Lankan ethnic war or may be he was not allowed to. But he could have at least by now read John Pilger, one of the world's renowned investigative journalists and documentary film-makers, for self enlightenment.

**Quote**

*"The great moral citadels in London and Washington offer merely silent approval of the violence and tragedy. No appeals are heard in the United Nations from them. David Miliband has called for a 'ceasefire', as he tends to do in places where British 'interests are served', such as the 14 impoverished countries racked by armed conflict where the British government licences arms shipments. In 2005, British arms exports to Sri Lanka rose by 60 per cent. The distance voices from there should be heard, urgently."*

This was stated by John Pilger in New Statesman of 14 May 2009, under the caption, "Distant Voices desperate lives." During this period the Genocide of Tamils was going on unabated.

He further said, " The catastrophe facing the Tamil people of Sri Lanka , whose distance voices have appealed to the world for almost as long as the Palestinians....The formation of a Tamil resistance, notably the LTTE, the Tamil Tigers, included a demand for a state in the north of the country. The response of the government was judicial killing, torture,disappearances, and more recently, the reported use of cluster bombs and chemical weapons."

He concluded with a piece of advice to the journalists, notably to those of the 'buy me' or cheque book type of journalists.

"It is not enough for journalists to see themselves as mere messengers without understanding the hidden agendas of the message and myths that surround it"

Tamils are clear enough if left alone, I mean away from the gang of Gulam Noon, Keith Waz, Senthil, Kumar and their cohorts. They are blamed and accused of leading the week, shocked, desperate Tamil diaspora in the UK down garden path to doom.

Tamils are smart enough and they don't need any Wikileaks website on 'Vanni War Diary' to conclude that the genocide was well planned and executed by the nasty Indian Government, UK government and other imperialist forces like the US, Canada and Japan. The planning and the strategy were finalised when president Rajapakse visited the alleged war criminal, John Major during his holiday country residence, Chequers in Buckinghamshire, in mid- August 2006. During that time David Miliband was very close to Tony Blair.

**Foresight; Genocide of Tamils & Hindsight; Eelam Nation for Tamils!**

Tamils wish that Edward Miliband with his Marxist-Jewish background will try to make the world a better place to live by listening to intellects and elders rather than being pushed by countries like India, merely for economical reasons at the expense of Tamils' blood. With G8 changing to G20, it is obvious that the economic power hierarchy is changing and it is inevitable. With the due respect for the people of India let me tell the so called traditional Labour loud and clear that the current Indian political class seems utterly incapable of providing the kind of leadership that this moment in India's history demands. It is very timely to remember the words of our great leader;

".. the world is not rotating on the axis of human justice. Every country in this world advances its own interests. It is economic and trade interests that determine the order of the present world, not the moral law of justice nor the rights of people. International relations and diplomacy between countries are determined by such interests. Therefore we cannot expect an immediate recognition of the moral legitimacy of our cause by the international community." Velupillai Pirabaharan, Leader of Tamil Eelam, Maaveerar Naal Address - November 1993

# ஒரு பேப்பர்

ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சாரதா

விளம்பரம்
சோபனா

அச்சு
தர்சினி (கனடா) பானு

வடிவமைப்பு
மயூரன் - விஜி

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
பானு

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# திலீபன் அழைத்தது சாவையா?

ஒரு துயர்மிகுந்த நாளில் இதனை எழுதுகிறேன். எழுதுவது கூட துயரைக் கனக்கச் செய்கிறது. காரணம் நேற்று (26-09-10) திலீபன் அவர்களின் நினைவு தினம். நாங்கள் உரிய பெறுமதி கொடுத்து அவரை நினைவுகூரவில்லையோ என துக்கிக்கிறேன் மகத்தான தியாகம் புரிந்த ஒரு மனிதர் அவர் அத் தியாகத்தை உணரவைக்க தமிழில் எச் சொல்லாலும் முடியாது. காந்தி கூட நீர் அருந்தியே உண்ணாவிரதம் இருந்தார். ஒரு துளி நீர் நாக்கில் படாது உண்ணாவிரதம் இருந்த ஒருவர் திலீபன். நமது தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டமநிகழ்த்தியபோதும் உச்சத்தைத் தொட்டார். அதேபோல் அகிம்சைப்போராட்டிலும் அதன் உச்சத்தை தொட்டதந்கு தலீபனே கர்த்தாவானார்.

தீலீபன் உண்ணாவிரம் இருந்த நாட்களில் என் பணி நிமித்தம் அப் பாதையால் இருமுறை பயணித்தேன். அது காலைப்பயணம், மதியமாகவும் இருபதால் சனம் குறைந்து திலீபனைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. கதிரையில் அமர்ந்து, பிறகு படுத்து, பிறகு துவண்டு, அதன் பிறகு குறுகி, ஒரு கட்டை ஆகிற வரையும் அவரது அத்தனை தோற்றங்களையும் கண்டேன். என் வயதேயான அவர் எம் இனத்துக்காக தான் உருகி தன்னில் இருந்து ஒளிதருகிறார். நான் என்ன செய்கிறேன். என் குடும்பத்தைக் காக்கின்ற குறுகிய வட்டத்தில் உழல்கிறேன். உண்மையைச் சொல்வதானால் அந்த ஒளியில் நான் தொப்பலாய் நனைந்தேன்.

என்னை நினைந்து மறுகிக் கொண்டு சைக்கிள் உருண்ட நேரத்தில் நான் வேறொன்றையும் யோசித்தேன். இதே நல்லூரில் இந்னொரு கோயிலில் (வீரமாகாளி அம்மன் கோயில்) 1982ஆம் ஆண்டில் நமது தமிழ்த் தலைவர்கள் என்று அப்பொழுது அறியப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம, முருகேசு சிவசிதம்பரம் மற்றும் அவர்களது சகாக்கள் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தனர். அவ் உண்ணாவிரத்திற்கான காரணம் என்னவெண்றும் அப்போது நான் அறிந்திருக்கவில்லை. கொழும்பில் சிங்களத் தலைமைகளுடன் கொஞ்சிக் குலாவியதை மறுக்க ஓர் உண்ணாவிரதம். அமர்தலிங்கம் உண்ணாவிரதம் இருக்கிறார். அமிர்தலிங்கம் முன்னர் இதே வீராமா காளி அம்மன் கோவிலில், வாளையெடுத்து வெறும் காற்றைச் சுழற்றி விட்டு சபதமெடுத்திருக்கிறார். அந்தச் சபதமும் என்னவென்று சத்தியமாக மறந்து போனேன்.

சில தமிழ் இளைஞர்களுக்கு இதனை பார்த்துப் பொறுக்கவில்லை. அவர்கள் என்ன செய்கிறார்கள். ஒரு சாப்பாட்டுக் கடையில் சாப்பாட்டுப் பொதிகளை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். 'யாரைப் பேய்க்காட்ட இந்த உண்ணாவிரதம்?' என்று பொதிகளைப் பிரித்து தலைவர்மார் திமிறத் திமிற உணவை ஊட்டிவிடுகின்றனர். இரவுக்குப்போய் நல்ல 'வெட்டு வெட்டலாம்' என்று நினைத்ருந்தவருக்கு இந்த உணவு அமிர்தமாக இருந்திருக்காது. இவர்கள் தான் எமக்கு அப்போது தலைவர்களாக வாய்த்தவர்கள்.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் என் சைக்கிள் உருண்டபோது அந்நினைவுகள் என்னுள் ஒழுகிக்கொண்டிருந்தன. அமிர்தலிங்கம் உண்ணாவிரதம் இருந்த இடத்திலிருந்து 100 மீற்றருக்குள் திலீபன் உண்ணாவிரதம் இருக்கின்றார். இடத்தின் இடைவெளிதான் நூறு மீற்றர். இருவரது மனங்களின் இடைவெளி நூறாயிரம் மைல்களுக்கும் அப்பால். அப்படி ஒரு மகத்தான தியாகியை நாம் எம்முள் வைத்திருந்தோம்.

மேலும் நினைவுகள் என்னுள் அப்போது ஒழுகின. நாம் சாத்வீகம் தான் என்று இருந்தோம். தமிழ் தேசத்துக்கு என்று தனி இறைமை உண்டு. அதை உணர்ந்து கொண்டு. தந்தை செல்வா சமஸ்டி (federal) கேட்கிறார். கேட்டது வெறும் வார்த்தையால். அதனை எழுத்தாலும் பிரகடனப்படுத்தினார். சிங்கள அரசு தனிச் சிங்களம் என்றது. தந்தை செல்வா, கொழும்புக் காலிமுத் திடலில் அமர்ந்து உண்ணாவிரதம் என்றார் சத்தியாக்கிரகம் செய்தார். சிங்களம் வன்முறையால் பதில் கொடுத்தது. வாயால் கேட்டதற்கு கைகளால் மறுமொழி கூறினர். இவ்வாறாக 1958இல் இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது சிங்களம் தன் வன்முறையை காய்ச்சப்பட்ட தாரினாலும் கொதிபட்ட எண்ணெயினாலும் எரிபட்ட பந்தங்களாலும் தீட்டப்பட்ட வாள்களாலும் வெட்டப்பட்ட பொல்லுகளாலும் எழுதியது.

பிறகு 1962ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரியடியில் ஓர் உண்ணாவிரதப் போராட்டம். சத்தியாக்கிரகம். இதனையும் தந்தை செல்வாவே தலைமை தாங்குகிறார். இம்முறை சிங்கள ராணுவம் தன் குண்டாந்தடிகளையும் துப்பாக்கிச் சன்னங்களையும் அதற்கான பதிலாகக் கொடுத்தது. ஆனால் ஒருபோதும் தந்தை செல்வா தன் சாதீவீகப் போராட்டத்தை கைவிடவில்லை. தமிழர்களுக்கு சமஸ்டி முறையிலான தீர்வில் இறுதி வரை உறுதியாக நின்றார். ஒன்றும் இயலாக் கட்டத்தில் ஒன்று சொன்னார். 'தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'.

1972 மே 22 அன்று இலங்கையை சிறீலங்கா வாக்கி சிஙகள பௌத்த சோசலிக ஜனநாயகக் குடியரசு என்று சொன்னது மார்க்சியவாதி என அறியப்பட்ட கொல்வின் ஆர்.டீ. சில்வாவின் சிங்கள யாப்பு. அன்று வைக்கப்பட்டது ஆழ ஊன்றிய நெருப்பு. அப்பொழுதில் தமிழ்க் காங்கிரஸ் தமிழரசு இன்னும் சில தமிழ்க் கட்சிகள் இணைந்து தமிழர் கூட்டணி என்றானது. தமிழீழ தேசம் எங்கும் நெருப்பு பொறிகள் பறந்தன. அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் போன்ற தமிழ்த் தலைவர்கள் நெருப்புப் பொறியை அணைய விடாது ஊர் ஊராக ஏந்திச்சென்றனர். கிராமங்கள் தோறும் உண்ணா விரதங்கள் நிகழ்ந்தன.

1974ஆம் ஆண்டின் ஆனி மாத வெய்யிலுக்குள் ஒரு வெள்ளிக்கிழமை அம்மாள் கோயிலில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். முழுவதும் பெண்கள். தலைமையேற்று இயங்குகிறார் மங்கையக்கா என்று அன்புடன் அழைக்கப்பட்ட மங்கையற்கரசி அமிர்தலிங்கம். எனக்கு அவாவைப் பார்க்கின்ற போது எந்நேரமும் நாட்டியப் பேரொளி பத்மினியின் நளின அழகு நெஞ்சில் படரும் வெண்கலக் குரலில் அவா பாடுகின்றா.

'பட்டினி கிடந்து . . .

மீள நான் திலீபனிடம் வருகிறேன். அந்த ஒடுங்கிய உடல் எதை யாசித்தது. தனக்கு உணவையா? தன் குடும்பத்திற்கு வாழ்வையா? எதை யாசித்தது.

யாவற்றையும் நாம் நெஞ்சில் நிறுத்துவோம்.

# சில அனுமதிகள் ஆபத்தானவை

பழந்தமிழகத்தில் அரசர்கள் தங்கள் வள்ளல் தன்மைக்குப் புகழ் பெற்றவர்களாக இருந்தார்கள். வறுமையில் வாடும் புலவர்கள் தங்கள் கவித்திறமையை அரசர்களிடம் காட்டி பொருள் உதவி பெற்று வாழ்க்கையை நடத்திச் செல்வது அக்காலத்தில் இயல்பான ஒன்றாக இருந்தது. அப்படி வறுமையில் வாடிய ஒரு புலவர் வள்ளலான ஒரு மன்னரை நாடிச் சென்றார். அரசவையில் மன்னரை வணங்கிய புலவர் பாடல்கள் பாட அனுமதி கேட்டார். மன்னரும் மனமகிழ்ந்து 'என்ன பரிசு வேண்டும்' என்று கேட்டார்.

புலவர் சாதுரியமாக மன்னருக்கு எதிரே இருந்த ஒரு சதுரங்கப் பலகையைக் காட்டி சொன்னார். 'பாராளும் வேந்தரே. வள்ளல் பெருமகனே. இந்த சதுரங்கப் பலகையில் முதல் கட்டத்தில் ஒரு அரிசியை மட்டுமே வைத்து விட்டு பின்னர் வரும் ஒவ்வொரு கட்டத்திலும் முந்தைய கட்டத்தில் உள்ளதற்கு இரு மடங்காக அரிசிகளைப் பெருக்கிக் கொண்டே போய் கடைசியில் வருமளவு அரிசிமணிகளைத் தந்தால் நான் பெரிதும் மகிழ்வேன்'

அரசருக்கு ஆச்சரியம். பொற்காசுகள் கேட்கும் உலகில் அரிசிமணிகளை இவர் கேட்கிறாரே, அதுவும் மூட்டைகளாகக் கேட்காமல் எண்ணிக்கையில் கேட்கிறாரே என்று வியந்தவராக மன்னர் கேட்டார். 'புலவரே சரியாக யோசித்துத் தான் கேட்கிறீர்களா? எண்ணிக்கையில் அரிசிமணிகள் போதுமா'

புலவர் பணிவுடன் சொன்னார். 'எனக்கு நான் கேட்டபடி அரிசிமணிகள் கொடுத்தால் அதுவே தாராளமாகப் போதும் அரசர் பெருமானே'

அரசர் வேடிக்கையாகச் சிரித்தபடி 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி அரண்மனை சேவகர்களை புலவர் சொன்னபடியே அரிசிமணிகளை எண்ணி வைக்கச் சொன்னார். சேவகர்கள் அரிசிமணிகளை வைக்க ஆரம்பித்தார்கள். முதல் கட்டத்தில் ஒரு அரிசிமணி, இரண்டாம் கட்டத்தில் இரண்டு அரிசிமணி, மூன்றாம் கட்டத்தில் நான்கு அரிசிமணி, நான்காம் கட்டத்தில் எட்டு அரிசிமணி என வைத்துக் கொண்டு வந்தனர். இருபதாவது கட்டத்திற்கு வரும் போது சேவகர்கள் 5,24,288 அரிசிமணிகள் வைக்க வேண்டி வந்தது.

64 கட்டங்கள் கொண்ட சதுரங்கப் பலகையில் பாதி அளவிலான 32ஆம் கட்டத்திற்கு வருகையில் 214,74,83,648 அரிசிமணிகள் வைக்க வேண்டி வந்தது. பாதியிலேயே 214 கோடிக்கும் மேல் அரிசிமணிகள் தேவைப்பட்டதைக் கண்ட பிறகு தான் அரசருக்கு நிலைமையின் பூதாகரம் புரிய ஆரம்பித்தது. 64வது கட்டத்தை எட்டும் போது கோடிக்கணக்கான கோடிகள் அரிசிமணிகள் தேவைப்படும் என்பது புரிந்த அவர் தன் நாட்டையே அந்த புலவருக்கு பணயம் வைக்க வேண்டியதாய் போயிற்று. இந்த நிலைமை வெறும் ஒரு அரிசிமணியளவில் ஆரம்பித்தது தான். சில ஆரம்பங்கள் பார்வைக்கு இது போல ஆபத்தில்லாத, பிரச்னையில்லாத தோற்றத்தில் தெரியலாம். ஆனால் போகப் போக அவை சிறிது சிறிதாக விசுவரூபம் எடுக்கக் கூடியவையாகவும் இருக்கலாம். சில தீய பழக்கங்கள், சில தீய நட்புகள், சில வழிபிறழல்கள் எல்லாம் இந்த ரகத்தைச் சார்ந்தவையே.

போதை, சூது போன்ற பழக்கங்கள் ஒரு விளையாட்டாய் ஆரம்பிப்பவையே இதில் பெரிதாக என்ன ஆகி விடப் போகிறது என்று ஆரம்பத்தில் தோன்றக் கூடியவையே.

ஆனால் ஆரம்பித்த பின் அந்தப்பழக்கங் களின் கரங்கள் இறுக ஆரம்பித்த பின் தான் விளையாட்டு விபரீதமாகிப் போன விதம் புரியும். எத்தனையோ பேர் தங்கள் வாழ்க்கையையும், தங்களைச் சேர்ந்தவர்களின் நிம்மதியையும் கெடுத்து சீரழிந்து போனதை நாம் சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம்.

சில தீய நட்புகளும் அப்படித்தான். நல்ல குடும்பத்தில் பிறந்து நல்ல சூழ்நிலையில் வளர்ந்தும், கூடாத நட்பால் நல்ல குணங்களைப் படிப்படியாக இழந்து தீயவற்றை படிப்படியாக வளர்த்து பாழாகிப்போன இளைஞர்களும் சமூகத்தில் நிறைய பேர் உள்ளனர்.

போக வேண்டிய பாதையில் சென்று செய்ய வேண்டிய செயல்கள் நிறைய இருக்க அதை விட்டு விட்டு தேவையில்லாத வேறொரு பாதையில் மாறுதலுக்காக சிறிது தூரம் சென்று வரலாம் என்று எண்ணி அந்தப் பாதையில் பயணிக்க ஆரம்பித்து அதிலேயே அலைந்து திரிந்து அடையாளம் இழந்து போன ஆட்கள் ஏராளம் உள்ளனர். ஒரு கட்டத்தில் அவர்கள் அதை உணரும் போது திரும்பி வர இயலாத தூரம் சென்றிருக்கும் வேதனை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

இப்படியெல்லாம் நடக்க முதல் காரணம் நாம் ஆரம்பத்தில் அவற்றிற்குத் தருகிற அனுமதியே. என்ன ஆகி விடப் போகிறது, இதென்ன பெரிய விஷயமா என்று அலட்சியமாக எண்ணி, முழுக்கட்டுப்பாடும் நம்மிடம் இருக்கிறது என்று முட்டாள்தனமாக நம்பி, நம் வாழ்க்கையில் சிலவற்றை நாம் நுழைய அனுமதித்து விட்டால் பின் அதற்கு நாம் பெரிய விலை தர வேண்டி வந்து விடுகிறது.


**எதையும் முளையிலேயே கிள்ளி விடுவது சுலபம். ஆனால் அது மரமாக வளர்ந்து விட்டால் அதை வெட்ட கோடாலி தேவைப்படுகிறது.**

அதை வெட்டி எடுக்க வேறு ஆட்கள் தேவைப்படுகிறார்கள். அப்படியும் வேரோடு எடுத்து விட முடியாமல் போய் விடுவதுண்டு. நம் கையால் சுலபமாகக் கிள்ளி எறிவதைச் செய்யாமல் வளர்த்து ஆளாக்கி அதை அழிக்கப் படாத பாடு படுவது முட்டாள்தனமே அல்லவா?

எனவே ஆரம்ப தோற்றத்தை வைத்து சிலவற்றைக் குறைவாக எடைபோட்டு உங்கள் வாழ்க்கையில் நுழைய அனுமதித்து விடாதீர்கள். சிந்தித்து செயல் படுங்கள். பின் வருந்திப் பயனில்லை.

*- என். கணேசன்*

# தீவிரமடையும் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமா ?



'இராஜபக்சாக்களின் தீவு' (Island of Rajapaksas) என்று தலைப்பிட்டு ' தி எக்கனோமிக்ஸ் ரைம்ஸ்' என்ற ஏடு எழுதிய கட்டுரையில், இலங்கை அரச பொறிமுறையில் சகல அதிகாரக் கட்டமைப்புகளும், இராஜபக்ச குடும்ப ஆதிக்கத்தின் கீழ் இருப்பது மிகவும் ஆபத்தான விடயமென்று எச்சரித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபல்யமான இச்சஞ்சிகை, இப்பிராந்தியத்தின் பொருண்மியப் பார்வையை பிரதிபலிக்கும்.

உலகமயமாதலில், தாராண்மைவாத (liberal) கொள்கைகளும், திறந்த சந்தைப் பொருளாதாரமும், முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதே இவ்வாறான பொருளியல் ஏடுகள் கூறமுற்படும் கருத்துக்களாகும்.

அதிகாரங்கள் ஒரு மையத்தில் குவிக்கப்படுவது, தாராளவாத அரசியல் கோட்பாடுகளுக்கு எதிரானது என்கிற விடயத்தை குறிப்பபிடும்' தி எக்கனோமிக்ஸ் ரைம்ஸ்' இலங்கையில், மேற்குலகம் விரும்பும் பொருளாதாரக் கட்டமைப்பு பலவீனமடைவதனைச் சுட்டிக்காட்டுகிறது.

ஆனாலும் சர்வதேச நாணயச் சபை வழங்கும் கடனுதவிகளை, இம் மேற்குலகம் நிறுத்துவதில்லை என்கிற விவகாரத்தையும் கவனிக்க வேண்டும்.

உலகப்பொருளாதார கேந்திர முக்கியத்துவம்மிக்க மையமாக இலங்கையை மாற்றுவோமென, ஐ.நா சபையின் 65வது ஆண்டு நிகழ்வில் உரையாற்றிய இலங்கை வெளியுறவு அமைச்சர் பேராசான் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் மையத் தரிப்பிடம் பாதுகாப்பு நீதியிலான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்ற உண்மையை மறைத்து விட்டார்.

அது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த மையம் என்று குறிப்பிட்டு, அமெரிக்காவையும் இந்தியாவையும் சீண்டிப்பார்க்க ஆசான் பீரிஸ் விரும்பவில்லை.

இலங்கையில் காலூன்றுவதற்கு இந்த வல்லரசுகள் போடும் ஆட்டங்கள், பாதுகாப்பு வியூகம் தொடர்பானது என்பதை தெளிவாக உணரும் சிங்கள தேசம், தற்போது தேவைப்படும் நிதிஉதவிகளை, வெளிநாட்டு முதலீடுகளை, எவ்வாறு பெறுவது என்பதிலேயே, தமது இராஜதந்திர நகர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது.

பெரும் பரிவாரங்களோடு, நியூயோர்க்கின் உல்லாச விடுதிகளை நிரப்பிய மகிந்த கம்பனியினர், திறைசேரியின் அடிச்சட்டியைச் சுரண்டிச் சேர்த்த பணத்தில், கேளிக்கைகளில் ஈடுபட்டதாக, அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அபிவிருத்திக்கும், புனர்வாழ்விற்கும், உலக நாடுகளிடம் கையேற்றும் இலங்கை அரசின் ஊதாரித் தனமான செயற்பாடுகளையிட்டு, 50,000 வீடுகளைத் கட்டிக்கொடுக்க முன் வந்திருக்கும் இந்தியாவும் கவலைப்படவில்லை.

புலம்பெயர் தமிழ்மக்களை இலங்கைக்கு வரச் சொல்லும், புதிய அரசியல் வாதிகளும், அரசினரின் கேளிக்கை செலவீனங்கள் குறித்தும் அக்கறை கொள்ளவில்லை.

அமெரிக்க திறைசேரி முறி(bond)யில் 846 பில்லியன் டொலர்களையும், ஜப்பானின் 27 பில்லியன்களையும், தென்கொரியாவின் 3.4 பில்லியன் டொலர்களையும் வாங்கி, கடனுதவி செய்த சிவப்புச்சீனா, தனக்கும் ஏதாவது நிதியுதவி செய்யுமென்று மகிந்த கம்பனி காத்திருக்கிறது.

## அரசியல் அலசல்

**இதயச்சந்திரன்**

தனது சந்தையை விரிவு படுத்துவதற்கு, இவற்றையெல்லாம் செய்யும் சீனாவின் மூலோபாயத்தை சிங்களம் புரிந்து கொள்ளவில்லை போல் தெரிகிறது.

அபிவிருத்திச்சங்கங்களுக்கு வாசலைத் திறந்து, புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் நிதியில், வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி முடித்துவிடலாமென்கிற பேரினவாத மகிந்த சிந்தனை வியூகத்தை, சூழ்நிலைக் கைதிகள் உணர்வதற்கான வாய்ப்பில்லை.

போராளிகளை அடைத்துவைத்திருக்கும் விவகாரத்தில், அனைத்துலக மனித உரிமை நியமங்களை இலங்கை அரசு மீறுவதாக, சர்வதேச நீதியாளர் குழுவினர் தெரிவிக்கும் கண்டனத்தை, இந்த சங்கச் செயற்பாட்டாளர்கள் வேண்டுமென்றே மறைக்கின்றனர்.

ஒன்றரை வருடத்திற்கு மேலாக, செட்டிக்குள வதைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னி மக்களை விடுதலை செய்யுமாறு கோரி, உண்ணாநிலைப்போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனோடு இணைந்து போராட, இந்த சூழ்நிலைக் கைதிகளும், இளைஞர்களை அணிதிரட்டப்போவதாக புலம்பெயர் நாடுகளில் அறைகூவல் விடுத்த எதிர்கால வடமாகாண முதலமைச்சர்களும் முன்வரவேண்டும்.

தற்போது நிலவும் மிக ஆபத்தான களச்சூழல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்கிற நில அபகரிப்பு என்பதாகும்.

குடியிருப்பு நிலங்களும், கிராமிய வாழ்வின் ஆதாரமாக திகழும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களும், பேரினவாதப் பூதங்களால் விழுங்கப்படும் போது, இடம்பெயர்ந்த மக்களை எங்கே மீளக்குடியமர்த்துவது , புனர்வாழ்வளிப்பது என்கிற விவகாரங்களை எவ்வாறு கையாள முடியும்?

அபிவிருத்திச் சங்கத்துக்கு 100 ஏக்கரை தானமாக வழங்கி, முரளிதரனுக்கு (அந்த கிரிக்கட் வீரர் அல்ல) அரிசி ஆலையைக் கொடுத்து, புனர் வாழ்வுப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக, தமிழ் மக்களின் காதைத் திருகும் சிங்கள தேசம், பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், இராணுவத்தினருக்கான குடியிருப்புக்களை நிர்மாணிப்பதாக, கூட்டமைப்பின் நா.உ. சுரேஸ் பிரேமச்சந்திரன் புகைப்பட ஆதாரங்களை முன்வைக்கிறார்.

இந்நிலையில், மே 18வரை, புலம்பெயர் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முகவர்(ஏஜெண்ட்).அரசியலை கைவிட்டு, இலங்கைக்கு வந்து அரசியலில் இணைந்து கொள்ளுமாறு, முன்னாள் ஊடக நண்பர் ஒருவர், புலம்பெயர் ஈழத்தமிழரிடம் வேண்டுகோள் விடுத்த சோகத்தையும் கவனிக்கவேண்டும்.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில், இத்தகைய துன்பியல் நிகழ்வுகளும், அறிவுரைகளும் நிரம்பி இருப்பதை இன்னும் காணக்கூடியதாகவுள்ளது.

விடுதலைக்கான ஆயுதப்போர், பிராந்திய வல்லரசாளர்களின் அணுசரணையுடன் முறியடிக்கப்பட்டவுடன், போராட்டமும் முடிவடைந்து விட்டது என்கிற கருத்து நிலையே இவர்களிடம் எஞ்சி நிற்கிறது.

தீவிரமான நில ஆக்கிரமிப்பில், சிங்கள தேசம் ஈடுபடும் போது, மீள்குடியேற்றம் எவ்வாறு நடைபெறுமென்பதை இவர்கள் விளக்க வேண்டும்.

யூதக் குடியேற்றங்கள் நிறுத்தப்படாவிட்டால், பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதில் பயனில்லை என உறுதியாகக் கூறும், பாலஸ்தீன அதிபர் முகமட் அப்பாசின் நிலைப்பாட்டினை, அபிவிருத்திச் சங்க அறிவாளிகள் புரிந்து கொள்வார்களா?

பூர்வீக மண்ணை இழந்த கிழக்கு மக்களின் மீது அதிகாரமற்ற மாகாணசபையைத் திணித்து, பிள்ளையானை முதலமைச்சராக்கி அழகு பார்க்கும் சிங்களத்தின் சதி வியூகம், வடமாகாணத்திலும் நீட்சியடையப்போகிறது.

தம்பலபட்டுணவ (கீரிமலை தீர்த்தப் பிரதேசம்) கந்துறுகொட (கந்தரோடை) இற்கு ஒரு தமிழ் மாகாண முதலமைச்சர் தேவையா என்கிற கேள்வியை மக்கள் எழுப்புவார்கள்.

அதனைக் கூறுவதால் இந்தக் கட்டுரையாளர், களயதார்த்தம் புரியாத புலம்பெயர்ந்த மக்கு என்றும் சிலர் விமர்சிக்க முற்படலாம்.

**சிங்களதேசம் எமது அரசியல் வாதிகளை நாடாளுமன்றக் கதிரைக்குள் முடக்கி, கல்லோயாவிலிருந்து ஆரம்பித்து அம்பாறை வரை கால்களைப் பரப்பி, கென்ட்பாம்-டொலர் பாம் வரை கையகப் படுத்திய வரலாற்றினை நாம் அறிவோம்.**

இன்று மன்னார் முதல் நாயாறு வரையிலான கரையோரப் பிரதேசங்களில் கடற்படை மற்றும் இராணுவ முகாம்களை நிறுவி, தமிழ்க் கடல் தொழிலாளர்களை, தென்னிலங்கை சிங்கள தேசிய முதலாளிகளின் ஆளுமைக்குள் கொண்டுவரும் பேரினவாதச் செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கிறது.

வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள முதிய மரங்கள் வெட்டப்பட்டு, அத்தோடு மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு, அநுராதபுர இராஜதானிக்கு கொண்டு செல்லப்படுகிறது.

போரினால் சிதைவடைந்த தமது வீடுகளைத்திருத்தியமைக்கச் செல்லும் தமிழ்மக்கள், வேலிக்குக் கதியால் வெட்டினால், 50,000ருபாய் தண்டமாக, சிங்கள இறைமைக்கு வழங்கவேண்டுமென, கிளிநொச்சி நீதிமன்றம் திர்ப்புக் கூறுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இலங்கை அரசிற்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடாத்தப் படவேண்டும், பொருளாதாரத் தடை கொண்டுவரப்படவேண்டும், அங்கு சர்வதேச அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் பூர்வீக தமிழ்பேசும் மக்களிற்கான அரசியல்தீர்வு வழங்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கைகளை முன்வைத்துபோராடும் புலம்பெயர் ஈழத்தமிழ் சமூகம், மிக முக்கியமாக, தாயக மண்ணில் சிங்களத்தின் நில ஆக்கிரமிப்பு தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்கிற விடயத்தை முன்னிலைப்படுத்தி போராட முன்வரவேண்டும்.

ஏனெனில் இன அழிப்பின் (genocide) உச்ச பரிமாணத்தில், மக்களை அபகரிப்பதும் நிலத்தை அபகரிப்பதும் உள்ளடங்குகிறது.

மனிதரின் வாழ்வோ மரணத்தில் முடிகிறது


மாவீரர் வாழ்வோ மரணத்தில் தொடங்குகிறது

ஒரு பேப்பர்
ORU PAPER



www.gold-factory.co.uk
GOLD FACTORY
Importers & Manufatures of 22ct Gold jewellery
Visit us for the latest designs and best prices in 22ct gold and Diamond Jewellery
22ct gold jewellery sold at the best prices WE BUY GOLD for CASH
We LOAN cash against GOLD for small interest rates.
All types of jewellery made and repairing.
Importers and exporters of gold and diamond jewellery.
No VAT for overseas visitors
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும் பழைய தங்கத்திற்க்கு புதிய தங்கம் கொடுக்கப்படும்
உடனடியாகப் பணம் தேவையா? சிறிது வட்டியுடன் உங்கள் நகைக்கு ஈடாகப் பணம் கொடுக்கப்படும்.
நகைகள் யாவும் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும். அதிஷ்டக் கற்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Please come to us for all your jewellery requirement
Gold Factory Limited
149, The Broadway, SOUTHHALL, UB1 LP
Also at 294 Farnham Road, SLOUGH, SL1 4XL
Tel : 01753 536 800
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
TEL: 020 8813 8979

# அபிவிருத்தி என்ற பேரில் மறுக்கப்படும் அரசியல் உரிமைகள்



கோபி
*ஒரு பேப்பர்*

'சிலர் இன்றைய பொருளாதாரச் சரிவு நிலையில், மனிதவுரிமைகள், சுதந்திரம் போன்றவற்றை புறந்தள்ளவிட்டு குறுகிய கால ஸ்திரத்தன்மையைப் பற்றி மட்டுமே கவனம் செலுத்த முற்படுகிறார்கள். சுதந்திரத்தை பறிகொடுத்துத்தான் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற போலி எண்ணக்கருத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். சிலதலைவர்கள்தமதுபதவிக்காலத்தினை நீடிப்பதற்காக, அதற்கிருக்கும் கட்டுப்பாடுகளை அகற்றுவதனை நாம் காண்கிறோம். குடியியல் சமூகத்தை சிதைப்பதனைக் காண்கிறோம். வர்த்தகத்திலும், ஆட்சி முறையிலும் ஊழல் கவிந்திருப்பதை நாம் காண்கிறோம். சனநாயக சீர்திருத்தங்கள் காலவரையின்றி பிற்போடப்படுவதனையும் நாம் காண்கிறோம்.

அமெரிக்கா இவ்வுலகத்திலிருந்து எதிர்பார்ப்பது இவைதான். ஒடுக்குமுறையின் காரணமாக அவலப்படுபவர்களுக்கு மனிதவுரிமைகள் கிட்ட வேண்டும். உங்களது குரல்கள் அவர்களுக்காக உயரவேண்டும். மாற்றுக் கருத்துள்ளவர்கள் சிறையிலடைக்கப்படுவதனையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்கள் தாக்கப்படுவதனையும் பார்த்துக்கொண்டு அமைதி காக்கவேண்டாம் என ஒடுக்குமுறையிலிருந்து மீண்டெழுந்த நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் தனித்து நிற்கவேண்டாம். உங்களது வரலாற்றை திரும்பி ப்பாருங்கள். எங்களது சுதந்திரத்திற்காக நாங்கள் கொடுத்த விலையில் பாதியளவு மற்றவர்களின் சுதந்திரத்தினை பாதுகாப்பதற்காகவும் என்பதை மறந்துவிடாதீர்கள்'

இவை தீவிரவாதத் தலைவர் ஒருவரது பேச்சு அல்ல., மாறாக, அண்மையில் நடந்த ஐ.நா. சபையின் 65வது கூட்டத்தொடரில் உரையாற்றுகையில் சனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்த கருத்துகள். இக்கருத்துகள் சிறிலங்காவுக்கு பொருந்தக் கூடிய வகையில் அமைந்திருப்பதால், இது சிறிலங்கா மீதான விமர்சனம் என சில அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இவை சிறிலங்காவை நோக்கிய குற்றச்சாட்டுகளா? இல்லையா? என்பதற்கு அப்பால் மேற்குலக தாராளவாத அரசாங்கங்களின் வெளிப்படையான எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நிலையில் சிறிலங்கா அரசாங்கம் இன்று உள்ளது என்பதனை அடையாளப் படுத்துவதாக அமைந்துள்ளன. இன்னொரு விதத்தில் கூறுவதானால், போருக்குப் பிந்திய சிறிலங்காவின் நடவடிக்கைகளை, குறிப்பாக அதன் அரசியல் நடவடிக்கைகள ஆதரிக்க முடியாத நிலைக்கு மேற்குலக அரசுகள் தள்ளப்பட்டுள்ளன. இதனை நிச்சயம் ஒரு அனுகூலமான நிலவரமாக நாம் எடுத்துக் கொள்ள முடியும்.

மேற்படி கூட்டத்தொடரில் உரையாற்றிய மகிந்த இராஜபக்ச இதற்கு முரணணான கருத்துகளையே வெளியிட்டிருந்தார். இறைமையுள்ள நாடு என்ற வகையில், உள்நாட்டில் பயங்கரவாதப்பிரச்சனையைக் கையாளும்போது, மனிதவுரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டங்களை அனுசரிக்க முடியாது என அவர் குறிப்பிட்டிருந்தார். இன்னமும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற போர்வையுடன்? பயணிக்க முயலும் மகிந்தவிற்கு, ஜோர்ஜ் டப்பிள்யு புஷ் இன் இந்த அணுகுமுறை இன்று மேற்குலகில் வெறுக்கப்படும் ஒரு விடயம் என்பது தெரியாதிருக்க நியாயமில்லை.

புஷ் இன் பயங்கரவாதத்-திற்கு எதிரான போருக்கு பங்காளிகளாக இருந்தவர்கள் மக்களின் நம்பிக்கையை மீளப்பெறமுடியாது அவதிப்படுவதனை முன்னாள் பிரதமர் ரோனி பிளேயரின் சகாக்கள் நன்கு அறிவார்கள். கடந்தவாரம் பிரித்தானிய தொழிற்கட்சிக்கான தலைவர் தெரிவில் ரோனி பிளேயரின் கொள்கை நிலைப்பட்ட (Blairite), முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலர் டேவிட் மிலிபாண்ட் தோற்கடிக்கப்பட்டு அவர் தீவிர அரசியலிலிருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டமையும் இதனையே உணர்த்துகிறது.

நாகரீக சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படும் தோற்றுப்போன நடை முறையையே இன்றைக்கும் சிங்கள தேசியவாதிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். இதனடிப்படையில் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருகிறார்கள். இனவாதச் சகதியில் நன்கு அமிழ்ந்திருக்கும் இவர்கள், மகிந்த இராஜபக்சவின் குடும்பத்திடம் ஆட்சி அதிகாரத்தை குவிப்பதில் எதுவித தயக்கம் காட்டுவதாகத் தெரியவில்லை. இங்குதான் சிங்கள தேசத்தின் கோர முகம் வெளிப்படுகிறது.

இலங்கைத் தீவில் இடதுசாரிகள் என தங்களை அழைத்துக் கொள்பவர்கள், அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும் இராஜபக்சகளின் அதிகார துஸ்பிரயோகங்களையிட்டு அலட்டிக் கொள்ளாமல் தமது பதவி நிலைகளை காத்துக் கொள்வதிலேயே கருத்தாக உள்ளார்கள். சமாதான காலத்தில் திடீரென முளைத்த சிறிலங்கா சனநாயகப் பேரவை Sri Lanka Democracy Forum) போன்றவை, சனநாயக விழுமியங்கள் மீறப்படும்போது உறங்கு நிலைக்குச் சென்று, தமது உடனபடு தன்மையை (embedded) இனங்காட்டியுள்ளன. அடக்கு முறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டிய தரப்பினரே அடக்கு முறையாளர்களுடன் கைகோர்த்துக் கொள்ளும் வரலாறு இலங்கைத் தீவில் காணப்படும் முரண்நகையாக உள்ளது.

## ஒடுக்குமுறையின் காரணமாக அவலப்படுபவர்களுக்கு மனிதவுரிமைகள் கிட்டவேண்டும். உங்களது குரல்கள் அவர்களுக்காக உயரவேண்டும். மாற்றுக் கருத்துள்ளவர்கள் சிறையிலடைக்கப்படுவதனையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்கள் தாக்கப்படுவதனையும் பார்த்துக்கொண்டு அமைதி காக்க வேண்டாம் - *ஒபாமா*

இதற்கிடையே தெற்காசியாவிற்கு தாராளவாத சனநாயகம் பொருந்தாது ஆகவே அங்கு நடைமுறையில் உள்ளவற்றுடன் சமரசம் செய்துகொள்ளவேண்டும் என்ற கருத்துகளும், புலம்பெயர் தமிழர் தரப்பிலிருந்து, அதுவும் தாராளவாத சனநாயகத்தின் சுதந்திரத்தை அனுபவிப்பவர்களால் வெளியிடப்படுகின்றன. இவை ஒன்றில் தோல்வி மனப்பான்மையின் வெளிப்பாடாக அல்லது தனிப்பட்ட நலன் சார்ந்த கருத்துகளாகவே கருத வேண்டியுள்ளது.

இன்னொருபுறத்தில், சில மேற்கு நாடுகள் சிறிலங்காவின் அரசியல் விடயத்தில் தலையிடாது, மென்போக்காக நடந்து கொண்டு, வர்தக ரீதியில் தொடர்புகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்வதனை அவதானிக்க முடிகிறது. ஏற்கனவே நோர்வே அரசு தரப்பு சிறிலங்கா சனாதிபதியுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

சனாதிபதி ஒபாமா தனது உரையில் குறிப்பிட்டது போல், சுதந்திரம் அரசியல் உரிமைகள் போன்றவற்றில் விட்டுக் கொடுப்புகளை ஏற்படுத்தி பொருளாதார விடயங்களில் மட்டும் கவனத் செலுத்துவதன் மூலம் நிலையான சமாதானத்தையோ, பேணத்தக்க வகையிலான அபிவிருத்தியையே ஏற்படுத்தி விட முடியாது என்பதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இது சில குடும்பங்களுக்கு, தமக்குரிய மித மிஞ்சிய அதிகாரத்தைப் பயன்படுத்தி குகியகாலத்தில் பொருள் சேர்த்துக் கொள்வதற்கு மட்டுமே வழிவகுக்கும்.

இங்கு பொருளாதார விடயங்கள் எனக் குறிப்பிடும்போது, புனர்வாழ்வு, அபிவிருத்தி என்பனவும் அவற்றுள் அடங்குகின்றன. ஆகையால் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் புனர்வாழ்வினைக் கருத்திற் கொண்டு, அரசியல் நடவடிக்கைகளை கைவிடுமாறு புலம்பெயர் தமிழ்மக்களைக் கோருவது அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கையாக மட்டுமே கருத வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் சர்வதேச மட்டத்தில் இயங்கும் சில சமாதான, முகவர் நிறுவனங்களும் சிறிலங்கா அரசிற்கு துணை புரியும் நடவடிக்கைகளில் இறங்கியுள்மையை அவதானிக்க முடிகிறது.

கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழ் மக்கள் மீது வசதியாக பிரயோகிகப்பட்டு வந்த பயங்கரவாத முத்திரை நாட்பட்டு போய் காலவதியாகி விட்டதால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்துபவர்கள் கடுங்கோட்பாட்டாளர்களாகவும், நடைமுறை யதார்த்தத்தை புரியாதவர்களாகவும் இனங் காணப்படுகிறார்கள். இருப்பினும் இச்சதி வலையை முறியடிப்பது அப்படியொன்றும் சிரமமானதாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் மேற்குலகம் தாம் பின்பற்றுவதாகக் குறிப்பிடும் தாராளவாதக் சனநாயகக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்க சிறிலங்கா தயாரகவில்லை.

சர்வதேச சட்டவிதிகளுக்கு மாறாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போராளிகளை விடுவிக்கிறோம், புனர்வாழ்வு அளிக்கிறோம் என்ற போர்வையில் புலம் பெயர் தமிழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களிடையே பிளவுகளை ஏற்படுத்த முனையும் சிறிலங்கா அரசு அடுத்த கட்டமாக வடக்கு-கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ளுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களை குறிப்பாக வர்த்தகர்களை தம்வசப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளபோதிலும், ஏற்பட்டுவரும் வாய்ப்பான நிலமைகளை பயன்படுத்தி, புலம்பெயர் நாடுகளில், அரசியல் உரிமைகளை முன்னிலைப்படுத்திய செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில், காலத்தின் தேவை கருதி, நாடு கடந்த அரசாங்கம், மக்களவைகள், இங்கு செயற்படும் பல்வேறு குழுக்கள் என்பன தமக்கிடையாலான மோதல்களைத் தவிர்த்து கொள்கையளவில் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டியது இன்றியமையாததாக அமைந்துள்ளது.




## Properties and Houses for Sale!

- Commercial , Leasehold shop ( Off Licence ) in Norwich.
  £89,950 + SAV
- Commercial, Leasehold fish and chip shop in Croydon.
  £84,950 + SAV ( Comes with 2 bed flat above the shop )
- Residential – Elmstead Lane, Chislehurst, 5 double bedroom detached house to rent for 646pw. ( Excellent Condition)

Bairstow Eves
Countrywide

Contact Details:
Lee high Road, Lee Green, SE12 8RU.
TEL: 0208 852 5234 | MOB: 07791988863

# வரலாற்றுக் கடமை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகளின் அரங்கம் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வுப் பொதியினை முன் வைக்க வேண்டுமென்ற கோக்கையை முன் வைத்திருந்தேன்..

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தையும் தவிர பல தரப்பினரும் இந் தக் கோக்கை குறித்து சாதகமாகவே பசீலித்தனர். கருத்துக்களையும் தெவித்திருந்தனர்.

அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் உள்ளது என்ற ஒரு கோக்கையின் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் சார்பில் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டதே. யன்றி அவர்களைச் சங்கடத்திற்குள்ளாக்குவதற்காக அல்ல என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

வெளிநாட்டு தூதுவர்களையோ அல்லது தூதரகங்களின் உயர் அதிகாகளையோ அல்லது வெளிநாட்டு ஆய்வாளர்களையோ ஏன் சிங்களத் தரப்பினர் கூட தமிழர்கள் எதிர்பார்ப்பது என்ன என்று கேட்கும்போது அதற்கான பதிலைக் கொடுப்பது சிரமமாகவே உள்ளது.

ஏனெனில், தனிநாட்டுக்குப் பதிலீடாக இதுதான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதைக் கூட கூற டியாத நிலையில் நாம் அனைவரும் உள்ளோம் என்ற கசப்பான உண்மையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்க் கட்சிகளின் அரங்கம் உட்பட அனைத்துத் தமிழ் மக்களும் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும். இதற்கும் அப்பால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை என்ன? எதிர்பார்ப்பு என்ன? என்ற கேள்விக்கு வெறுமனே பிரச்சினைகளைத் தான் நாம் அடுக்கிக் கொண்டு போகின்றோம். திட்டவட்டமான தீர்வு என்பது எம்மிடம் இல்லை.

எனவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை எதிர்பார்ப்பு என்பவற்றை "அரசியல் தீர்வு" என்ற ஒரு பதத்துடன் முடித்து விடாது அதற்கு உயிர், உருவம் கொடுத்தாக வேண்டும்.

**அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் உள்ளது**

பொதுத் தேர்தலுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு "அரசியல் தீர்வுப் பொதி" குறித்து நிறையவே பேசியது. "தீர்வுப் பொதி" விரைவில் தயாராகும்? இந்தியாவிடம் சமர்ப்பிக்கப் போகின்றோம் என்றும் கூறியது. ஆனால், இப்பொழுது அனைத்தையும் கிடப்பில் போட்டு விட்டு அமைதியாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாத்திரமல்ல அவர்களை ஆதத்து நின்ற தமிழ் மக்களுக்கும் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளை உலகம் அறியும். இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கணி சமான தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரித்து நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைத்தனர். அந்த வகையில் தமிழ் மக்களின் அபிலாஷையைத் தீர்வுப் பொதியாக முன் வைக்க வேண்டிய கடப்பாடு கூட்டமைப்புக்கு உண்டு.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் போர் நடைபெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருத்தியல் ரீதியாக மாத்திரமல்ல, செயல் ரீதியிலும் அரசுடன் இணைந்து பங்காற்றியவர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை அரசியல் தீர்வுக்கு சாத்தியமில்லை என்று கூறியவர்களும் இவர்களில் உள்ளனர்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை. புலிகள் இல்லாத மண்ணில் அரசாங்கத்தை இசைய வைத்து அரசியல் தீர்வை ன்வைத்து நடைமுறைப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பை தமிழ்க் கட்சிகளின் அரங்கம் கொண்டுள்ளது.

அந்த வகையில் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கு தீர்வுப் பொதியை முன் வைப்பதுடன், தமது ஆதர்சன அரசை அந்தத் தீர்வுப் பொதியை நடைறைப்படுத் தும் பெரும் பணியையும் தலைமேல் கொண்டுள்ளதையும் இவ்வேளையில் நினைவுப்படுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை ஒப்புக்காகவேனும் அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து பேசி வந்தது. தற்போது அரசியல் தீர்வு குறித்த பேச்சையே அரசாங்கம் எடுப்பதில்லை.

அது மாத்திரமல்ல காலத்துக்குக் காலம் தமிழ் தரப்பு பலவீனப்படும் பொழுது அல்லது கையறு நிலையில் நிற்கும் போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஆளுந்தரப்பு தமது நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப தமிழ்த் தரப்பை ஆட வைத்து விடும் அல்லது தவிர்க்க முடியாத நிலையில் ஆளுந்தரப்பின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் உள்வாங்கப்படும் சூழ்நிலையை ஆட்சியில் இருப்போர் தமிழ் தரப்புக்கு உருவாக்கி விடுவதும் வழக்கமான நாடகமாக உள்ளது.

அத்தகைய ஒரு நாடகத்தை இன்றைய ஆளுந்தரப்பும் இன்று அரங்கேற்றியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியுடன் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு தமிழர் தரப்பில் காத்திரமான சக்தியாக எவரும் இல்லை என்று அரசாங்கம் திடமாக நம்புகின்றது. அது உண்மையும் கூட ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியுடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளும் வீழ்ந்து விட்டதாக சிங்களத் தரப்பு நினைக்கலாம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை ஒப்புக்காகவேனும் அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து பேசி வந்தது. தற்போது அரசியல் தீர்வு குறித்த பேச்சையே அரசாங்கம் எடுப்பதில்லை.**

ஆனால், தமிழ் மக்கள் அவ்வாறு நினைக்கவில்லை. "அரசியல் அபிலாஷை" என்பது தகர்க்கப்படக் கூடியதோ, குழிதோண்டிப் புதைக்கப்படக் கூடியதோ அல்ல என் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

இந்த உண்மையை அரசாங்கத்துக்கும், உலகத்திற்கும் உணர்த்த வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், தமிழ்க் கட்சிகளின் அரங்கிற்கும் உள்ளது. தமிழ் மக்கள் கேட்பதை ஆளுந்தரப்போ அல்லது சிங்களத் தரப்போ கொடுக்காது என்பதற்காக கேட்காமல் இருப்பது நியாயமில்லை, நியாயமானதை, நீதியானதை கேட்பது தவிர்க்க முடியாதது. தவிர்க்கப்படக் கூடியதும் அல்ல.

அந்த வகையில் தற்போது தமிழ் மக்களின் சார்பில் தீர்வுப் பொதியை முன்வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகளின் அரங்கம் சுமந்துள்ளன. தமது வரலாற்றுக் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து இவர்கள் செயற்படுவார்கள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

- வி. தேவராஜ் (வீரகேசரி)



# யாழ்ப்பாணத்துப் புதினங்கள் - கோள் மூட்டல் 4

கானா பிரபா
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

## நல்லூர்ப் பக்கம் உலாத்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கொடியேற்ற நாளில் கோயிலுக்குப் போய் கொடியேற்ற நிகழ்வைக் கண்டு தரிசித்தேன். அருச்சனை செய்ய இன்னும் 1 ரூபா தான். கோயில் சுற்றுப் புற வீதியில் செருப்பு, சப்பாத்தோடு திரிய முடியாது. பாதணிகள் பாதுகாப்பு றாக்கைகளை இரவோடிரவாக யாழ் மாநகர சபை செய்து வைத்திருக்கிறது. தென்னிலங்கையில் இருந்து கம்பாயம், சாரத்துடன் வரும் கூட்டம் நல்லூரில் எல்லாப் பக்கமும். களு தொதல் வியாபாரியும் வந்து விட்டார். சேலை, வேட்டி கட்டிக் கொண்டு தான் பக்தர்கள் வரவேண்டும் என்ற நல்லூர்க் கந்தன் ஆலய அறிவிப்பைக் கண்டித்து சில முற்போக்கு இணையத்தளங்கள் கிழித்துக் காயப்போட்டிருந்தன. ஆனால் கந்தனின் அந்த அறிவிப்பு கம்பாயத்தையும் சாரத்தையும் தடுக்கவே அன்றி வேறொன்றுமில்லை என்று கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.

நல்லூர் வீதியைச் சுற்றிக் கொண்டிருக்கையில் பிரான்சில் இருந்து வந்திருந்த T.R.T வானொலி இயக்குனர் குகநாதனை முன்னர் இணையத்தளங்களில் கண்ட புகைப்பட அடையாளத்தை வைத்து இனங்கண்டு பேச்சுக் கொடுத்தேன்.

'நீங்கள் தானே குகநாதன்?'

'ஓம் தம்பி, நீங்கள்....'

'நான் அவுஸ்திரேலியாவில் இருக்கிறனான் விடுமுறையில் வந்திருக்கிறேன்'

'என்னை எப்படித் தெரியும்'

'நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது ரஜனி பதிப்பகம் வெளியிட்ட நாளில் இருந்து தெரியும்'

ஆச்சரியத்தோடு பக்கத்தில் நின்ற நண்பரோடு அவர் பார்த்துக் கொண்டிருக்க,

'சரியண்ணை வாறன்' என்று விட்டு நடையைக் கட்டினேன்.

## வலம்புரி இருக்கு உதயன் இல்லை

சிட்னியில் இருக்கும் போது காலை ஏழு மணிக்கெல்லாம் மொபைல் போன் அலாரம் அலறியடித்துக் கொண்டு 'எழும்பு மேனை எழும்பு மேனை' என்று தலையணிக்கு கீழிருந்து கத்தினாலும் அதை அழுத்தி விட்டு குறட்டைக்கச்சேரி நடத்துபவன் யாழ்ப்பாணம் போன நாள் தொடங்கி காலை ஐந்து மணிக்கெல்லாம் எழும்பி அள்ளிக் குளித்து விட்டு மடத்துவாசல் பிள்ளையாரடிக்குப் போய் முதல் பூசை ஆறரைக்குப் பார்த்து விடும் பழக்கம் தொற்றிக் கொண்டுவிட்டது. அதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. வீட்டுக்குச் சமீபமாக உள்ள காளி கோயிலில் காலை ஐந்து மணிக்கெல்லாம் கே.பி.சுந்தராம்பாள் எழும்பி லவுட்ஸ்பீக்கரில் இருந்து கொண்டு 'தக தகவென ஆடவா' என்று கத்திக் கொண்டிருந்தால் அவவுக்கு முந்தியே என்ரை அம்மா நாலரைக்கு எழும்பிக் குசினியில் பாத்திரங்களைத் துயில் எழுப்பும் சத்தமும் கேட்க ஆரம்பித்து விடும். அம்மா ஆசிரியையாக இருந்த காலத்தில் எல்லாம் காலையில் பிட்டு அவிச்சு, மத்தியானத்துக்கான சோறு, கறிகளையும் ஆக்கும் அந்தத் தொட்டில் பழக்கம் அவர் ஆசிரியைப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னும் தொடர்கிறது. அப்பாவும் ஒருபக்கத்தால் யோகர்சுவாமிகளின் நற்சிந்தனையோடு சுவாமி அறைக்குள் ஐக்கியமாகி விடுவார்.

காலைப் பூசை பார்த்துவிட்டு என் லுமாலாக் குதிரை வெங்காயச் சங்கப் பக்கமாக இருக்கும் கடைக்குப் போகும். 'சொன்னாப்போலை இந்த வெங்காயச் சங்கம் எண்ட பெயர் எப்படி வந்தது என்று நீங்கள் பேந்தப் பேந்த முழிக்கலாம். எங்கள் இணுவில் பகுதியில் விளையும் வெங்காயச் சாகுபடிகள் எல்லாம் மொத்தமாகக் கொண்டு வரப்பட்டு இங்கே உள்ள வெங்காயச் சங்கத்தில் தான் களஞ்சியப்படுத்தப்படும். சரி மீண்டும் விஷயத்துக்கு வாறன். அந்தக் கடைக்கு காலை ஆறேமுக்கால் வாக்கில் போய்

'அண்ணை! உதயன் பேப்பர் இருக்கா' என்று கேட்டால் 'இல்லைத் தம்பி வலம்புரி தான் இருக்கு, உதயன் முடிஞ்சு போச்சு' என்று ட்ரேட் மார்க் பதில் வரும்.

வலம்புரியை வாங்கிக் கொண்டு, கூடவே மானிப்பாய் தினேஷ் பேக்கரியில் இருந்து இறக்குமதியாகும் கொம்பு பணிஸ் ஒன்றும், கிறீம் பணீஸ் (இரண்டு





பணிசுக்கு நடுவில் ஒருவிதக் களி போன்ற இனிப்புத் திடப் பொருள்) வாங்கிக் கொண்டு கிளம்புவேன். அந்தக் கடை மாத்திரமல்ல பக்கத்துக் கடைகளிலும் இதே புராணம் தான். என்னடா கொடுமையா இருக்கு இந்த அதிகாலை வேளையிலேயே உதயன் பேப்பர் தீர்ந்து போய் விடுகிறதா யாழ்ப்பாணச் சனம் நான்கு மணிக்கே கடைப் பக்கம் வருகுதோ அல்லது வலம்புரிக்கு இவர்கள் செய்யும் தார்மீக ஆதரவோ என்று நினைத்துக் கொள்வேன். உண்மையில் வலம்புரி பத்திரிகை யாழ்ப்பாண மக்களின் இதயத்துக்கு மிக நெருக்கமாக இருப்பதற்குரிய சமாச்சாரங்கள் அந்தப் பத்திரிகையில் நிறையவே இருப்பதைக் கண்டு கொண்டேன். சாம்பிளுக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் வந்த செய்தி இது.

*'சனீஸ்வரன் தலைமையில் இலங்கை வந்த தமிழக எம்.பிக்கள் குழு? யாழ்.வலம்புரி நாளிதழ்'*


பொருள் விளக்கம்: சனீஸ்வரன் ஸ்ரீ டி.ஆர்.பாலு

## ஈ ஓட்டும் இந்தியன் வங்கிகள்

சொந்த நாட்டிலேயே ஈ ஓட்டும் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகள் முந்திரிக் கொட்டைக் கணக்காய் யாழ்ப்பாணத்தில் கிளை பரப்பி யாழ்ப்பாணத்து ஈ ஓட்டுவதைப் பற்றிச் சொல்லி நண்பர் ஒருவர் விசனப்பட்டார். இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் வன்னியில் கடந்த வருஷம் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதை யாழ்ப்பாணத்துச் சனம் இதயத்துக்கு நெருக்கமாக வைத்துக் கொண்டு இன்னும் இருக்கிறார்கள். இதனால் தான் மேற்கண்ட விமர்சனம் போன்ற விசனங்களைப் பல சந்தர்ப்பங்களில் அங்கிருக்கும் போது கண்டேன்.

தேடி வந்து வாள் கொடுத்துச் சாத்வீகத்தை நிலை நாட்டியதன் பலனாக வன்னியில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட சமூகம் ஒன்று அநாதரவாக யாழ் வீதிகளில் அலைந்து திரிகையில் யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் அமைத்தும், பலாலி சர்வதேச விமான நிலையம் அமைப்பதில் முழுமையான பங்களிப்பை வழங்கத் தயாராக இருக்கும் இந்தியாவை ரோம் நகரத்து நீரோ மன்னன் ரேஞ்சில் யாழ்ப்பாணப் பொது ஜனம் ஒப்பிட்டு மன நிறைவு கொள்கிறது.

இது ஒரு பக்கம் இருக்க, கொழும்பில் கூடக் கண்டறியாத இன்சூரன்ஸ் கம்பனிகள், வங்கிகள் என்று ஒருபக்கத்தால் முளைத்திருக்கின்றன. ஹற்றன் நஷனல் வங்கி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் சேமிப்புத் திட்டத்தை ஆரம்பித்திருப்பதைக் காண முடிகிறது. இலங்கை வங்கி ஒரு பிரயாண முகவர் நிலையத்தையும் ஆரம்பித்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இன்னும் 2 நாள் நிற்போமே என்ற ஆசையில் என் விமானப்பயணத்தைத் தள்ளிப் போடுவதற்காக இலங்கை வங்கியின் பிரயாண முகவர் நிலையத்தின் கதவைத் தட்டினேன். 500 ரூபா சேவைக் கட்டணத்தோடு 2 நிமிடத்தில் காரியத்தை முடித்து என்னை வீட்டுக்கு அனுப்பிய துரித வேகம் கண்டு பிரமித்தேன்.




Experienced Expertise
only a phone call away

One-off specific instructions are welcome, You can keep your own accounts, but we can provide extra help to tackle problems with Inland Revenue and Customs & Excise.

We are specialists in solving Tax Investigations, Negotiations & Settlements.

- Tax Solutions
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation

- Chartered Accountants & Registered Auditors
- Accountancy / Audit / Business Startup & Consultancy
- Solicitors Rules Audit

- IT Solutions Supply
- Install, Advice / Train & Support
- IRIS, SAGE, MYOB, DELL
- **up to 40% discount** on retail prices*

- Licensed Insolvency Practice, Liquidation and for all insolvency advice.

For FREE initial consultations,
contact: **David Beckwith, Sabia Sahota** or **Ananthan Arnold**

**BBK Partnership**
Chartered Accountants & Business Strategic Solutions

1 Beauchamp Court, Victors Way, Barnet, Herts EN5 5TZ
Telephone: **020 8216 2520** Fax: **020 8216 2521**
Web: **www.bbkca.com**

# கிழக்கில் உதித்த தேசியச் சுடர் லெப். பரமதேவா



*எமது தேசத்தின் ஆன்மாவில் மாவீரர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.*

- தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்-

தமிழர்களிற்கும் தமிழ் மாணவர்களிற்கும் எதிரான சிங்களத்தின் அடக்குமுறை வடிவங்கள் எப்போதும் மிகக் கொடூரமாகவே இருந்து வந்துள்ளது. அதனால்தான் பாடசாலை மாணவப் பருவத்திலேயே சிங்களத்தின் அடக்குமுறைகளிற்கெதிரான கொதித்தெழுந்த தமிழ் மாணவர்கள் சிங்களத்திற்கு எதிரான பல எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு மாணவப் பருவத்திலேயே சிங்களத்திற்கெதிராக பொங்கியெழுந்த தன்மானத் தமிழன் லெப்.பரமதேவா வீரச்சாவடைந்து 25 ஆண்டுகள் கழிந்து விட்டன. முன்னர் கோட்டமுனை மகாவித்தியாலயம் எனவும் தற்போது மட்டு இந்துக் கல்லூரி எனவும் அழைக்கப்படுகின்ற பாடசாலையிலேயே பரமதேவா கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

1975ம் ஆண்டு வைகாசி மாதம் 22 ம் திகதி சிறிலங்கா குடியரசு தினத்தை பகிஸ்கரித்து மாணவர்களை அணிதிரட்டி போராடியதற்காக சிங்கள அரசாலும் அந்நாளில் சிங்களத்தின் அடிவருடியாக செயற்பட்ட இராஜன் செல்வநாயகம் போன்றவர்களின் முயற்சியாலும் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பரமதேவா பின்னர் வடக்கு கிழக்கெங்கும் பரமதேவாவின் இடைநிறுத்தத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மாணவர் எழுச்சிப் போராட்டத்தினைத் தொடர்ந்து மீண்டும் பாடசாலையில் இணைக்கப்பட்டார்.

இதனால் 1977ம் ஆண்டிலிருந்தே பரமதேவா தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி இருந்தது. அக்காலகட்டத்திலே தமிழர் தாயகப்பகுதியெங்கும் சிங்களத்திற்கெதிரான எதிர்ப்பு பல வழிகளிலும் வெளிப்பட்டுக் கொண்டு இருந்தது. மட்டக்களப்பில் சிங்களத்திற்கெதிரான நடவடிக்கைகளிற்கு தேவையான பணத்தைப் பெறுவதற்காக 1978ல் செங்கலடி மக்கள் வங்கிப்பணத்தைப் பறித்தெடுப்பதில் ஈடுபட்ட பரமதேவா அச்சம்பவத்தில் பொலிசாருடன் ஏற்பட்ட மோதலில் கையில் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

காலங்காலமாகவே தமிழர்க்கு எதிராக செயற்படும் சிங்களத்தின் நீதித்துறை தமிழினத்தின் விடுதலையை நேசித்த குற்றத்திற்காக 1981ல் பரமதேவாவிற்கு 8 வருட கடுங்காவல்த் தண்டனையை வழங்கியது. எதுவித பதற்றமோ குழப்பமோ இல்லாது புன்னகை சிந்திய முகத்துடன் இத்தண்டனையை ஏற்ற பரமதேவா தாய்மண்ணிற்கான போராட்டத்தில் நீண்டகால சிறைவாசத்தை அனுபவித்தார். போஹம்பர, வெலிக்கடை, நியூமகசீன், மகர ஆகிய சிறைகளில் எல்லாம் சிறைவாசம் அனுபவித்த பரமதேவா 1983 யூலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிங்கள அரச காடையர்களால் கொடூரமாகக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டார்.

மட்டக்களப்பு சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிறையை உடைத்துக் கொண்டு தப்பி ஓடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்காக மட்டக்களப்பை சேர்ந்தவராகப் பரமதேவா இருந்ததனால் அவரிடமே அதிக உதவிகளை எல்லோரும் எதிர்பார்த்தனர். 1983 புரட்டாதி 22ம் திகதி பரமதேவாவின் பெரும் பங்களிப்புடன் மட்டு சிறையை உடைத்துதமிழ்க்கைதிகள் தப்பிஓடினர். தனது தண்டனைக்காலம் முடிவடைய குறுகிய காலமே இருந்த போதும் அனைத்துத் தமிழ் அரசியல்க் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்பதற்காக சிறையுடைப்பில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்தி தானும் தப்பிப்போனார் பரமதேவா.

சிறையிலிருந்து மீண்ட பரமதேவா தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் மீதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டத்தின் மீதும் அந்த ஆயுத போராட்டத்தின் மூலமே தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெறமுடியும் என்று மிகத் திடமாக நம்பியதால் தலைவர் பிரபாகரனின் தலைமையை ஏற்று ஒரு விடுதலைப் போராளியாக தனது வாழ்வைத் தமிழ் மண்ணில்த் தொடங்கினார். இந்தியாவிலே முதலாவது அணியில்ப் பயிற்சியை முடித்த பரமதேவா ஒரு கொரில்லா வீரனாகத் தமிழீழம் திரும்பினார்.

தாயகம் திரும்பிய பரமதேவா ஒட்டிசுட்டான் பொலிஸ்நிலையம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல், கொக்கிளாயில் இராணுவத்தின் மீதான கொரில்லா தாக்குதல் போன்றவற்றில் முன்னின்று பணியாற்றினார்.

இதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தாக்குதல்ப்பிரிவு தளபதியாக மட்டக்களப்பு சென்ற பரமதேவா விசேட சிங்கள பொலிஸ் கொமோண்டோக்களைக் கொண்ட களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலிற்கு தலைமை தாங்கி உறுதியுடன் முன்னணியில் நின்று போரிட்டு அக்களத்திலேயே அவ்வீரன் வீரச்சாவை அணைத்துக்கொள்கிறார். அவருடன் சேர்ந்து இத்தாக்குதலில் முன்னின்று போராடிய மகிழடித்தீவைச் சேர்ந்த ரவி எனப்படும் தம்பிப்பிள்ளை வாமதேவன் என்ற இளம் கொரில்லா போராளியும் வீரச்சாவடைந்தார்.

1983 புரட்டாதி 23ல் தாம் கற்பனையில் மேற்கொண்ட சிறை உடைப்பிற்காக சிலர் அதன் ஓராண்டு நிகழ்வுகளை ஆரவாரப்படுத்திக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் சிறையுடைப்பில் பெரும் பங்காற்றிய பரமதேவா ஒரே வருடத்திற்குள் தன்னை ஒரு முழுமையான போராளியாக மாற்றி தாய் மண்ணிற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்கிறார். ஒரு மனிதன் பிறந்து சாதாரணமாக வாழ்ந்து இறந்து போகின்றான் அவனின் வாழ்வு அத்துடன் முடிவடைகிறது.

பொலிஸ் நிலையத் தாக்குதலில் பொலிசாரின் குண்டுபட்டு காயப்பட்ட பரமதேவாவைத் தூக்குவதற்காக சென்ற போராளியிடம் எனது அம்மாவிடம் சொல்லுங்கள் உங்கள் மகன் பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது வீரச்சாவடைந்து விட்டார் என்று சொல்லி இருந்தாராம். இறக்கும் தறுவாயிலும் அந்த வீரனுக்கு இருந்த உறுதியும் வீரமும் எப்போதும் மெய்சிலிர்க்க வைக்கும். சிங்களத்தின் தமிழர்கள் மீதான அடக்கு முறையும் இன சுத்திகரிப்பும் கிழக்கில் தமிழ்மக்களை எப்போதும் மிக மோசமாக பாதித்தே வந்துள்ளது.

குறிப்பாக மட்டு அம்பாறை மாவட்டத்தில் சிங்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடூர வன் தாக்குதல்கள் அம்மக்களிற்கு சுதந்திரத்தின் பெறுமதியையும் விடுதலையின் மீதான வேட்கையையும் எப்போதும் உணர்த்தியே வந்துள்ளது. அதுவே பல உன்னதமான விடுதலைப் போராளிகளை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மட்டு மண் வழங்கக் காரணமாக இருந்துள்ளது.

1984 புரட்டாதி 22ம் திகதி மட்டுமண்ணின் முதல் விதையாக மண்ணில் விழுந்த பரமதேவாவின் விடுதலைக்கனவை சுமந்தபடி விடுதலைப்போராட்டம் இன்று மிகப்பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. மட்டு மக்களால் வளர்க்கப்பட்ட விடுதலைப் பயிரில் சில விசச் செடிகளும் மறைந்து வளர்ந்து இன்று தமது விசக்குணத்தை மக்களிற்கு காட்டுகின்றது. மட்டுமண்ணின் பல்லாயிரம் போராளிகளின் தியாகத்தாலும் குருதியாலும் வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட தமிழரின் உரிமைப் போர் பணத்திற்கு விலைபோன கயவர்களால் இன்று காட்டிக் கொடுக்கப்பட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இம்மக்களின் துன்பங்கள் நீங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. தமிழீழமே தமிழர்க்கான தீர்வு என்பதை அனைத்துலகமே ஏற்றுக் கொள்ள வேண்டிய காலம் மிக விரைவில் வரும்.

## மறக்காத தேசம் மறந்த தலைவர்களும்

நாளுக்கு நானூறு
ஈழத்தில் செத்தது,
தமிழக தலைமைகள்
வாக்குக்கு செத்தது!

ஆயிரம் பேருக்கு
அவயங்கள் போச்சுது,
ஆளான கலைஞரோ
அவதூறு சொன்னது!

மகிந்தனின் ஆட்சியில்
மரணங்கள் மலிந்தது,
அம்மாவின் வாதமோ
சண்டையில் செத்தது!

பாரதம் ஆயுதம்
அள்ளிக் கொடுத்தது,
தமிழகத் தளபதி
வியாபாரம் என்றது!

ஈழத்தில் தமிழினம்
இரத்தத்தில் மிதந்தது,
இந்திய பிராமணம்
பாராட்டு சொன்னது!

வன்னியில் தமிழினம்
உணவின்றி சாகுதாம்,
ஓட்டை நினைத்தம்மா
உண்டியில் குலுக்கினா!

தமிழக மீனவர்
தினசரி சாகிறார்,
அவரது தலைமைகள்
அரசியல் செய்யுது!

தாயக உறவுகள்
தணலாய் வெந்தனர்,
அவரிழவில் கொடிதூக்கி
வாக்குக்காய் அலைந்தனர்!

ஈழமே செத்தாலும்
இரங்காத அம்மாச்சி,
தேர்தலைக் கண்டதும்
தின்னாமல் கிடந்தது!


நெடுமாறன் ஐயாதான்
நிரந்தர உணர்வாளர்,
அது பொறுக்கா கலைஞரோ
கவிதையால் திட்டினார்!

சிங்கள தளபதி
கோமாளி என்றது,
அதனாலோ வைத்தியர்,
அம்மாவை நாடினார்!

வ. கணேஷ்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்..

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ




creative artwork from concept to design

EDITORIAL: EELAM NATION

# Rajapakse restores despotism in Sri Lanka







Deserving of a despotic monarchy if not just short of it, in its traditional sense, the overwhelming majority of Sri Lankans both directly and through their parliament in the latest constitutional amendment have either wittingly or unwittingly endorsed Mahinda Rajapakse restoring an autocratic rule over them in its almost absolute sense in the Democratic Socialist Republic of Sri Lanka, within a matrix of unresolved contradictions peculiar only to Sri Lanka. This was coming to them from 1972. They would rather have despotic governance and be its subjects than give what is rightfully due to the Tamil people. Indeed, the Sinhala polity has finally got the governance they deserve for which they had worked hard and they will have to bear with it unless it is thrown out either constitutionally or through violence. The question is: will they ever have the moral strength to do so?

In their increasing political immaturity and the lack of vigilance and ignorance the overwhelming majority of the Sinhalese polity could not have aspired for anything better for their own welfare than to make the Tamil people second class citizens and keep them oppressed, a trend begun in 1956. For them, it is not the escalating price of food, the rising cost of transport and fuel that are the threats to their livelihood but the demonised Tamil menace constantly made out to be their greatest enemy, a mindset, having come down for centuries and manipulated by their leadership. This, they are made to believe has now been finally eradicated by the great liberator, Mahinda Rajapakse who has been given a free hand in consolidating his destiny and along with it his dynasty in return, to be rewarded with the sky as the limit. It is in the interests of the Rajapakses to keep the people politically ignorant for their own survival. This is easily done with the complete suppression of the free media, having now been accomplished.

Former Prime Minister Sirimavo Bandaranaike's Constitution of 1972, regarded illegal by many experts, while making Sri Lanka a Sinhala Buddhist State, took away, amongst other things, the meager safeguards provided to the minorities by the one preceding it. The separate judicial power that had been vested in the judicature was abolished and along with it the separation of powers. Its successor, the 1978 Constitution, an amalgam of the US, Gaullist constitutions and the Westminster system, tailor made by his brother, a brilliant Queen's Counsel to suit the whims and fancies of a megalomaniac JR Jayewardene (JR) whose childhood dreams of emulating the autocratic British colonial governors of prior 1900 and early 20th, century was made possible by an unprecedented 5/6th majority afforded to him at the 1977 elections.

Jayewardene's overwhelming victory in 1977 was made possible by the misrule and the short sighted economic policies of Mrs. Bandaranaike exceeding her powers through her political ignorance, leading to starvation and the abject inconveniences of the poor, and above all, the monumentally rising popularity of Dudley Senanayake, the leader of the United National Party (UNP), who predeceased the 1977 elections making his despised deputy JR, inherit an illegitimate victory that was least meant for him. The other was the electoral support given by the Jathika Vimumthi Peramuna (JVP) in the belief that it would be easier to defeat the UNP than the Sri Lanka Freedom Party (SLFP) underestimating JR's ruthless cunning, and ironically, it was the UNP regime that summarily executed Rohana Wijeweera the leader of the JVP in the most obscene manner.

JR sustained himself in power by State sponsored anti-Tamil racist Pogroms put in train in 1977 and carried on periodically until 1983, the draconian Prevention of Terrorism Act of 1979 a piece of legislation that was without any question aimed principally against the Tamils to punish them for agitating for their legitimate rights comparable only to the most obnoxious Terrorism Act of the Apartheid South Africa of 1967, the torture, disappearances and deaths of Tamils suspected of militancy and by the burning of the public library in Jaffna, an irreplaceable icon of Tamil culture, supervised by three of his cabinet ministers.

Often referred to as Hitler within his party circles but imagining himself to be another Napoleon Bonaparte, JR went about the countryside masquerading also as a true Sinhala king. For example, he would tell the starving Sinhalese villagers in the drought stricken areas that he would bring them rain, resurrecting a belief that a good and righteous king could bring them rain for farming and thereby prosperity. Judiciary and the public service were under threat and his first chief justice who had stated that the executive action had eroded the position of the Chief Justice and the judges of the Supreme Court (Ceylon Daily News, 18 November, 1982) had to flee to Australia in November 1982. The steady and rapid decline in the justice system and the working of independent commissions had already begun.

## It is in the interests of the Rajapakses to keep the people politically ignorant for their own survival

It is in a culture of misplaced beliefs and the deification of a saviour against the Tamils that the mediocrity in Rajapakse has succeeded in emerging as the great protector of the Sinhalese to be an absolute autocrat.

To complete the picture of Rajapakse as the true antagonist of the Tamils has to be seen in the image of king Dutu Gemunu of 2300 year vintage, who according to the Sinhala Buddhist chronicle, Mahavamsa written, 6th. Century AD, by a Buddhist monk was forgiven by the Gods for killing thousands of Tamils "for they were all were men of evil", beginning the culture of impunity for crimes against the Tamils.

We cannot say for certain whether Dutu Gemunu was responsible for the killing of innocent civilian Tamils to qualify to be a war criminal in the modern sense but we can certainly say that in the 2009 war more than 30,000 Tamil civilians paid the supreme price for being Tamils.

Both at the Presidential and the general elections, Rajapakse kept the people confused and guessing as to what his intentions were in regard to the future of the of the Head of State. He then unilaterally and conveniently chooses to be a true despot, a reflection on the declining political consciousness of the Sri Lankan body politic so as to be so debased. The voting by the government members and some members of the opposition including some so called Marxists, and Tamils given to traditional political begging is evidence of this. Opportunism, corruption, greed, racism, the psychosis of fear, all permeate the Sri Lankan political scene making the constitution in the present form a national disgrace.

## Abusing his powers, Rajapakse has converted their trust into absolute dictatorship.

Here is a leader who underestimates the intelligence of his own people who reposed in him complete freedom and their unqualified trust to use his powers in the hope that these would be reciprocated to be used with responsibility for their benefit, while of course, providing the security to keep the Tamils at bay as against consolidating himself and his dynasty. Abusing his powers, Rajapakse has converted their trust into absolute dictatorship.

If this is the plight of the Sinhalese people one can imagine that of the Tamils and their basic aspirations. Considering the fact that immediately after the conclusion of the war in May 2009, thousands of Tamils in the IDP camps and outside were summarily killed by the Sri Lankan soldiers at their own whim leads us to believe that the Tamil people can in no way expect any justice under the new system. The latest example is the refusal by the farcical Reconciliation Commission to hear the evidence of the Tamils in the north as to the plight of their relatives taken into custody who have now disappeared without a trace. Tamils have therefore to be on the lookout. There is more to come and they, the Diasporas included, have to play their cards with caution.



# Investors and multinationals should take the constitutional amendment as a signal to "Sell Sri Lanka" investments

The following article has been written by an informed non Sri Lankan businessman who has interests in Sri Lanka - he is concerned about the implications of the constitutional amendment passed last week. His identity is concealed to ensure his safety.

I have read many pleas from concerned citizen groups, journalists, policy groups and the opposition parties about the dangerous amendments to our country's constitution. But one in particular stood out - a strong call to action made by the Anglican Bishop of Colombo, "It is therefore imperative that Parliament rejects this Bill, and that all who value democratic freedom in the country voice their objection to it." Now, how often do you hear the most senior Bishop of a country use the word "imperative"?

Indeed, there are several disastrous sections of the amendment (a neat summary is made by Charu Latta Hogg from London's Chatham House) and I support the Bishop's call to reject the Bill and urge others to do the same.

[By the way, one wonders why the array of (very well paid) international advisors to the GoSL haven't been able to exert their influence and avert this damaging course of action. Bell Pottinger, the PR agency to past "bully boys" (such as General Pinochet) are one such organisation].

So why am I, a businessman concerned? What is the cost of the constitutional amendment, and who is going to pay? Well, I am concerned, because one by one, all the measures of a civilized society are being abandoned. This creates a huge risk for potential foreign investors, at a time when the country desperately needs economic growth and to tackle the debt crisis. The weak judicial system should be noted by investors to avoid the kind of problems that BP had in Russia (the chief executive had to leave the country without the backing of the local judiciary). In these situations, companies need significant benefits to outweigh the disadvantages of the lack of a rule of law. I'm not sure Sri Lanka can offer those benefits. Just ask Siemens or BAE. Before long, mid range players will also back out. (Local businesses who want to continue trading, have to adapt to the situation by bribing government officials. For Global 500 companies this is not a viable way to do business).

Last week, Forbes speculated on a decline in the Sri Lankan economy, highlighting the policies of the current president as the culprit. Some investors are becoming worried about the recent constitutional amendments. One analyst, Benjamin Griffith, Caravan Capital Management, a global frontier fund for high net worth individuals is now looking at Sri Lanka as a long term risk.

The same article recounts past volatility in the Sri Lankan stock market during intense periods in the civil war. It quite rightly points out that the war came to a bloody an end last year, but the root causes of the conflict have not been addressed. Some say that a future insurrection could be on its way including bombings in the Capital, Colombo.

My fear is that the economic future looks bleak for all Sri Lankan's (not just the ethnically and politically marginalized) due to a re-think on foreign investment and having to pay for the huge debts that the government has built up; Greece will tell you about the problems of large debts and pilfered assets. My last thought is for the ordinary men, women and children who will bear the brunt of the impending economic crisis in Sri Lanka.

*srilankacampaign.org*

# "UN Blatantly Turns Blind Eye As Sri Lanka Becomes Nation of Totalitarianism"

**By Heike Winnig**
THE SEOUL TIMES


Sri Lankan President Mahinda Rajapaksa not only failed to show any magnanimity towards its Tamil citizens stripped everything from a disastrous war that killed 40,000 Tamil civilians and maimed 50,000 more including thousands of children in the last days of May 2009 in the dirty war conducted with the military and economical assistance from the regional hostile powers like, China, Iran, Pakistan, etc. while keeping the rest of the civilized world including the UN out, independent media out, aid workers out and keeping its border tight. Ironically Sri Lankan still continues with its complete disregard for the human life, Tamils are fleeing in droves to escape the clutches of a monstrous regime and they need protection from the civilized and more humane world.

While, Tamils' serious plight multiplying into many folds even after the war ended almost two years ago, Sri Lankan president became as an elected dictator as he used intimidation, bribery and forced opposition Members of Parliament to push through self serving 18th Amendments into the Sri Lankan constitution. E.U., USA and many other world democracies raised their concerns on the above amendment saying that it weakens checks and balances and it will further erode the independence of crucial commissions meant to safeguard the democratic rights of the people of Sri Lanka. The amendment also undermines the principles of constitutional democracy where the Judicial Services Commission, Public Services Commission, Elections Commission, National Policy Commission, Bribery Commission, Human Rights Commission operates independently.

The Sri Lankan President and his regime should not be allowed to further hoodwink the UN and the rest of the civilized world. Considering the inadequate national concern for the violence, implementing international humanitarian and human rights laws in the country for all its citizens, the international community including the U.N. should do its utmost intervene to bring about peaceful, long lasting and dignified solution based on the U.N accepted norms of Tamils also do have the right to self – determination. He also should be given stern message by the civilized world that, they are no longer ready to tolerate his authoritarian behaviours and there will be serious consequences for the injustice, war crimes, and violation of international humanitarian and human rights laws against the Tamil citizens of his country.


TrainingConnect
Tel: 0208 538 0248 WWW.TRAININGCONNECT.CO.UK
Centres across London - Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Aldershot, Birmingham, Bedford, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Wolverhampton
Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow - TW4 6JQ
We are an 'Accredited College' as per UKBA new rule.

ESOL with Citizenship
For All Those Applying for:
✓ Extension of Stay Visa
✓ Indefinite Leave to Remain (ILR)
✓ British Passport / Naturalisation
OR
✓ Those failed Life in the UK Test
✓ Below Entry Level 3 of English
International ESOL Diploma
For All Those Applying for:
✓ Tier 1 (Highly Skilled Migrants)
✓ Tier 2 (Skilled Migrants)
Applicants Also Include
* Religious Ministers *Engineers Chefs *Investors*Sports Persons *Entrepreneurs
Special Offer!!!




Online ESOL Courses Available

Your nearest centre in London:
Hounslow: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
Kenton: 208 Kenton Road, Harrow HA3 8BX
Wembley: 116 Ealing Road, Wembley HA0 4TH
Holloway Road: 266 – 268 Holloway Rd. N7 6NE
Whitechapel: 4th Floor, 46-92 Whitechapel Rd, London, E1 1JX
Citizenship Courses from only £200

RAM
SALES LETTINGS MANAGEMENT MORTGAGES



" We are looking for all sorts of properties for our awaiting professional tenants"
LANDLORDS
" Are you looking for a professional agent who would be able to assist you with selling or renting your property?"



" We are currently looking for a properties in East London"
Call Us On: 020 8550 8788
E-Mail: contact@ramestateagent.com
Log on: www.ramestateagent.com
713 Cranbrook Road, Gants Hill, Ilford, Essex, IG2 6RJ

# KIDS பேப்பர்

*Aesops Fables*

## The Boy who cried wolf



There once was a shepherd boy who was bored as he sat on the hillside watching the village sheep. To amuse himself he took a great breath and sang out, "Wolf! Wolf! The Wolf is chasing the sheep!"

The villagers came running up the hill to help the boy drive the wolf away. But when they arrived at the top of the hill, they found no wolf. The boy laughed at the sight of their angry faces.

"Don't cry 'wolf', shepherd boy," said the villagers, "when there's no wolf!" They went grumbling back down the hill.

Later, the boy sang out again, "Wolf! Wolf! The wolf is chasing the sheep!" To his naughty delight, he watched the villagers run up the hill to help him drive the wolf away.

When the villagers saw no wolf they sternly said, "Save your frightened song for when there is really something wrong! Don't cry 'wolf' when there is NO wolf!"

But the boy just grinned and watched them go grumbling down the hill once more.

Later, he saw a REAL wolf prowling about his flock. Alarmed, he leaped to his feet and sang out as loudly as he could, "Wolf! Wolf!"

But the villagers thought he was trying to fool them again, and so they didn't come.

At sunset, everyone wondered why the shepherd boy hadn't returned to the village with their sheep. They went up the hill to find the boy. They found him weeping.

"There really was a wolf here! The flock has scattered! I cried out, "Wolf!" Why didn't you come?"

An old man tried to comfort the boy as they walked back to the village.

"We'll help you look for the lost sheep in the morning," he said, putting his arm around the youth, "Nobody believes a liar...even when he is telling the truth!"

meeting of all the army chiefs, and sought their suggestions for a solution.

## Fun Facts

1. Did you know that dolphins always sleep with one eye open?

2. Did you know that there are 206 bones in the adult human body and there are 300 in children (as they grow some of the bones fuse together).

3. Horses and cows sleep while standing up.


4. Unbelievable fact: A goldfish has a memory span of 3 seconds.

5. The lion has the smallest heart of all beasts of prey.

6. A jellyfish is 95 percent water.

## MOVIES TO WATCH!

1. TOY STORY 3
2. UP
3. 3D G-FORCE
4. SHREK FOREVER AFTER
5. THE KARATE KID






## Dear Kids...

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

The winner will be published in the next issue!

## Jokes

1. What dog loves to take bubble baths ?

2. What kind of dance do you do on a trampoline?

3. What has two humps and is at the North Pole?

4. What do ducks have with soup?

5. What day of the week do chickens hate?

6. Where do you find a dog with no legs?

***Answers***

1. A shampoodle.
2. Hip-Hop!
3. A Lost Camel
4. Quackers!
5. FRY-day!
6. Right where you left it!

## Riddles

1. What never gets any wetter, no matter how much it rains?

2. A man went outside in the pouring rain with no protection, but not a hair on his head got wet...how come?

3. There is a one story blue house. Everything is blue, the kitchen is blue, the living room is blue, even the bathroom is blue. What colour are the stairs?

4. I'm not an airplane, but I can fly through the sky. I'm not a river, but I'm full of water. What am i?

5. If you have it, you want to share it. If you share it, you don't have it. What is it?

Answers

1. The sea 2. he was bald 3. there are no stairs in a one story house. 4. A cloud 5. A secret

## Tongue Twisters!

1. Red lorry, yellow lorry.

2. Unique New York

3. Freshly-fried flying fish.

4. Peter Piper picked a peck of pickled peppers.Did Peter Piper pick a peck of pickled peppers. If Peter Piper Picked a peck of pickled peppers, Where's the peck of pickled peppers Peter Piper picked?


5. She sells seashells by the seashore.The shells she sells are surely seashells.

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.



## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| U | F | U | V | T | A | B | L | A | N |
| B | R | A | I | I | N | W | S | O | H |
| I | Q | Y | O | Z | A | I | B | I | L |
| M | A | F | L | D | V | E | E | N | A |
| G | P | L | I | E | O | E | N | I | L |
| H | M | U | N | M | E | L | A | M | A |
| A | P | T | O | D | E | L | J | E | U |
| D | A | E | R | S | M | R | D | V | F |
| A | T | N | G | E | Q | Y | Z | A | I |
| M | U | W | S | O | H | I | B | N | J |

**Hidden Words:**

**Subject: Tamil Festival Items**

VEENA, MELAM, VIOLIN, GHADAM, TABLA, FLUTE

*Submitted by;*

***By: Aarani Aravinthan (Age 5) (New Malden)***

# South London Tamil Welfare Group

## தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு

## குடும்பக் கல்வி வாரம் 2010

- பூமாலை கட்டுதல்
- ஆரோக்கிய உணவு வகை தயாரித்தல்
- உதாரணம் : சலாட் சுண்டல்
- கேக் ஐஸ்சிங் : அலங்கார மலர் தயாரித்தல்.
- மருதோண்றி கலை: ஹென்னா : கைகள் அலங்காரம்.



**ஒக்டோபர் 9**
சனிக்கிழமை

**இடம்: குரொய்டன் குளொக் ரவர் கத்தரின் ரோட்.**

11.00 முதல் 4.00 மணி வரை

தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பும், குரொய்டன் குடும்பக் கல்வி அமைப்பும் ஒருங்கிணைந்து பெற்றோர்களையும் பிள்ளைகளையும் அன்புடன் அழைக்கின்றது.

உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து, மகிழ்ந்து, உபயோகமுள்ள நல்ல திறமைக்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டு, குடும்ப உறவுகளை மேம்படுத்துங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு:**
**ராஜி** 020 8542 3285
07814 399 152
**பத்மா** 07747 126 952
**யோகா** 07756 100 024

South London Tamil Welfare Group
36, High Street, Colliers Wood,
London, SW19 2AB
Email: reception@sltwg.org.uk

South London Tamil Welfare Group
82 London Road,Croydon, CR0 2TB
Tel : 020 8253 7066

Registered Charity No: 1077602 Registered Company Ltd by Guarantee No: 3816209

www.sltwg.org.uk

LOTTERY FUNDED

# HAIR LOSS? NOT ANYMORE!

WHITE CLIFFS®
HAIR STUDIO

" There is a Better Way... Welcome to White Cliffs ... "

Whether you are experiencing hair loss or desire hair improvement, we offer you state-of-the-art solutions that are world renowned!






Hair Transplants:
WHITE CLIFFS offers surgical hair replacement with top US surgeons with unbelievable results




Volumizers:
For those with thinning hair or wanting thicker, fuller hair- a need for instant volume.




Hair Replacement & Wigs: Ultra custom non surgical hair. replacement that looks so natural no one can tell!




Hair Therapy: WHITE CLIFFS' offers industry-leading Products and Programmes *which can help re-grow, restore, improve, and beautify your hair.*




Extensions:
Extensions are the finest available in the world, applied with the safest and most natural technique available.

Solutions which are guaranteed to work by **White Cliffs**

Australia United Kingdom India United States Canada Europe

14 Dufferin Street,
London EC1Y 8PD

**Tel: 020 7250 0650**
Tamil Number: 07958 407 643
www.wchairstudio.com


2 for 89p
49p Each
Made using milk powder imported from New Zealand
Niru BRAND ®
Lemon Puff
WITH
REAL LEMON
CREAM
சுவைத்துப் பாருங்கள் உண்மையான
லெமன்கிறீம் சுவையை.
SGS
SGS

# குற்றாலம் வெங்கடாச்சலம் நாகராஜன்



**தோற்றம்: 16.05.1966 மறைவு: 28.09.2010**

மிகக் கனத்த மனத்துடன், இக்கடினமான செய்தியை எழுதும் துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்.

குற்றாலம் என்றவுடன் எமக்கெல்லாம் மனதில் குதித்தோடும் எண்ணம், இந்தியாவிலுள்ள குளுமையான இடமான குற்றாலமும், அதில் சில்லென்று ஓடும் அருவியும், மலையும் அதன் சூழலும். ஆனால் அதே குளுமையுடனும் அதே பெயரில் வாஞ்சையுடனும் எம்மிடையே ஒரு மாமனிதன் நேற்றுவரை நடமாடினான், ஆனால் அம்மாமனிதன் இன்று எம்முடன் இல்லை.

நாட்டியப் பாடலில் 'இமயம்' என்று அழைக்கப்பட கூடிய குற்றாலம் வெங்கடாச்சலம் நாகராஜன் செவ்வாய் (28/09/2010) மாலை 06.30 மணியளவில் தனது இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டார்.

தன்னிகரற்ற ஒரு பாடகன், பாடலாசிரியன், இசையமைப்பாளன். இம்மூன்றும் ஒரு சேர அமைவது மிக அபூர்வம், ஆனால் இவை அனைத்தின் சொந்தக்காரன் குற்றாலம் நாகராஜன். இவரது பாடலில் மயங்காதவரே இலர். சிறுவர்களிலிருந்து முதியோர் வரை இவரது இசைப்பிரியர்கள்.

ஒருமுறை பழகினால் காந்தம் மாதிரி இழுக்கும் அதீத மனோபாவம். இவரது உன்னத மனித குணத்தால், இவரது குறைகளை எல்லாம் மறந்து மீண்டும் மீண்டும் நாடி ஓடும் அக அழகு கொண்டவர்.

1992ஆம் ஆண்டளவில் திரு. கணேசனால் இலண்டனிற்கு அறிமுகம் செய்யப்பட்டார். நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான என்று கூடச் சொல்லக் கூடிய நாட்டிய அரங்கேற்றங்களில் பாடிய முடிசூடா மன்னன். பாடல் வடிவமைப்பதிலும், இசையமைப்பதிலும் ஈடு இணையற்ற தனித்திறன் கொண்டவர்.

ராஜாஜின் 'குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா' என்ற பாடலுக்கமைய யாரையும் குறை கூறமாட்டார். எல்லோரிலும் ஒரு நிறைவு காணும் ஒரு உன்னத மனிதப்பிறவி. இவரது குழந்தை உள்ளத்தால் யாராலும் வெறுக்கப்பட முடியாதவர்.

இசைப் பரம்பரையில் தோன்றிய காரணத்தால் சிறுவயதிலிருந்தே இயற்கை ஞானம் கொண்டவர். ஆனாலும் 20 வயது வரை சங்கீதத்தை முறையாகக் கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. பின்னர் சங்கீத மேதை V.R.கிருஸ்னன் என்பவரிடம் இசையை பயிலும் அரிய வாய்ப்பைப் பெற்றார். இவரது குரு V.R.கிருஸ்னன் தியாகராஜ சுவாமிகள் இசைப்பரம்பரையில் வந்த செம்மாங்குடி சீனிவாச ஐயர் அவர்களின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. காலம் தாழ்த்தி 20 வயதில் இசையைப் பயின்றாலும், மிகக் குறுகிய காலத்திலேயே, நாட்டியப் பாடலுக்கு குற்றாலம் நாகராஜன் என தன் முத்திரை பதித்து, தனக்கென்று ஒரு அசையா இடத்தை சென்னை மக்களிடம் பிடித்துக் கொண்டார்.

இவரது இசைத்திறன் கண்டு தனது சரித்திரத்தில் முதன் முறையாக 'சிறந்த பரத நாட்டிய பாடகன்' என்று பட்டமளித்து Music Acadamy Of Madras கௌரவித்தது.

இசையின் உச்சத்தை தொட்ட இவர், நினைத்திருந்தால் பணத்தின் உச்சத்தையும் தொட்டிருக்கலாம். மூன்று தலைமுறைக்குத் தேவையான சொத்துக்களை இவரால் தேடியிருக்க முடியும். ஆனால் ஆயிரக்கணக்கான இளம் இசைப்பயிர்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டிய இவர், பணத்தின் பக்கம் கவனம் செலுத்தாதது, இவரது மகனும் மனைவியும் செய்த துர்பாக்கியமே.

வல்லவன் வகுத்ததே வாய்க்கால் என்பது இயற்கை நியதி. இருப்பினும் காலத்திற்குக் காலம், நல்லவர்களும் தோன்றத்தான் செய்கிறார்கள். வல்லவர்களைக் காலம் மறந்துவிடும். வரலாறு இருக்காது, ஆனால் நல்லவர்களிற்கு வரலாறு உண்டு. இவர்களை காலம் மறக்காது.

குற்றாலம் நாகராஜாவின் இசைச்சேவை, சாதனை மிகப் பெரியது. அவரது வெற்றிடம் இலகுவில் நிரப்ப முடியாது.

அவரது பிரிவால் வாடும் மகன் சங்கீதத்திற்கும், துணைவி கோமதிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இவரது பூதவுடல் ஈமைக் கிரிகைகளுக்காக சென்னைக்கு அனுப்பப்பட இருக்கிறது. இலண்டனில் இறுதி மரியாதை செய்வதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*தகவல்: பதஞ்சலி நவேந்திரன்*
*07916 134 976*

மேலதிக தொடர்புகளுக்கு:

திரு. கார்த்திகேசு - 020 8924 2148

திரு. சிவரூபன் - 020 8551 6162

திரு. பாலசந்தர் - 020 8569 6174

திரு. ரவீந்திரன் (Lewis) - 07702 404 531

திருமதி. கோமதி நாகராஜன்
- 0091 988 435 9929

# Madame Tusssauds இல் தீபாவளி கொண்டாட்டம்



லண்டனில் உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் Madame Tusssauds மெழுகுப் பொம்மை காட்சியகத்தில் இவ்வருடம் முதற் தடவையாக தீபாவளி கொண்டாடப் படவிருக்கிறது. ஒக்ரோபர் 16ம், 17ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இக்கொண்டாட்டத்தின்போது இந்துஸதானி இசைக் கருவிகளான தபேலா, சித்தார் மற்றும் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சிகளும், நடனங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனி ஞாயிறு தினங்களில் நடைபெறும் கொண்டாட்டங்களின்போது, இக் காட்சியகத்தில் மெழுகுப் பொம்மைகளாக வைக்கப்பட்டிருக்கும் பொலிவூட் நடிகர்கள் அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய், சாருக் கான், சல்மான் கான் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இக்காட்சியகத்திற்கு வரும் தெற்காசிய பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் அவர்களை மகிழ்விக்கு முகமாக தாம் தீபாவளி கொண்டாட்டத்தை நடத்துவதாக காட்சியகத்தின் மக்கள் தொடர்பாளர் லிஸ் எட்வேர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.




AYNGARAN INTERNATIONAL (UK) Ltd.

Unit 19 Riverside Business Park, Lyon Road, Wimbledon, London SW19 2RL United Kingdom
Web: www.ayngran.com ■ E-mail: sale@ayngaran.com ■ Tel: +44(0) 20 85434477 ■ Fax: + 44 (0) 20 85434466

AYNGARAN

ஐங்கரனின் பிரமாண்ட வெளியீடாக உலகம் முழுவதும் ஒக்டோபர் 1ம் திகதி முதல் "எந்திரன்" திரையரங்குகளில் காணத்தவறாதீர்கள்

Directer : S. Shankar Producer : Kalanidhi Maran
Starring: Rajinikanth, Aishwarya Rai, Santhanam, Karunas, kalabavan Mani and others Music : A. R. Rahman

UK (ஐக்கிய ராஜ்ஜியம்)இல் 50க்கும் மேற்பட்ட திரையங்குகளில் ஒக்டோபர் 1ம் திகதி முதல் தினமும் 3க்கும் மேற்பட்ட காட்சிகள்

Cineworld திரையரங்குகளில் Ilford, Wandswoth, Feltham, Staples Corner, Wood green, Enfield, o2 Greenwich, Bexleyheath, Birmingham, Milton Keynes, Rugby, Liverpool, Glasgow Renfrew, Boldon, Stockport, Sheffield, Crawley, Cardiff, Aberdeen, High Wycombe, Bristol, Edinburgh, Brighton, Cambridge, Hull, Didcot, Swindon மற்றும் Harrow Safari, East Ham Boleyn Cinema, Vue Harrow, Vue Croydon, Odeon Kingston உட்பட இன்னும் பல திரையரங்குகளில் ஒக்டோபர் 1ம் திகதி முதல் "எந்திரன்" காணத்தவறாதீர்கள்

காட்சி நேரங்களிற்கு அழையுங்கள்

□ Ayngaran Telephones - 020 85434477, 020 84713133, 020 85434322 □ Cineworld Cinema - 08712002000
Vue Cinemas- 08712240240 □ Odeon Cinema- 08712244007 □ Harrow safari - 020 84260606 □ Boleyn Cinema, East Ham- 0208 471 4884

Ayngaran : Specialist in Screen Entertainment and Market Leaders in Original Home Video
Ayngaran International (UK) Ltd: Registered in England & Wales. Registered No 5957372

# கலைவிழா - வட இலண்டன் தமிழ்ப்பாடசாலை












கடந்த 25-09-2010 சனிக்கிழமையன்று இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கத்தின் (LATA) கீழ் இயங்கும் வட இலண்டன் தமிழ்ப்பாடசாலையின் 21வது ஆண்டுக் கலைவிழா நிகழ்வுகள் Leavalley High School மண்டபத்தில் எமது வெகுசிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக திரு.என்.செல்வராஜா அவர்களும் சிறப்பு விருந்தினர் London Boriugh of Enfield Councillor Christiana During அவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வுகளில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடாத்திய 2010ம் ஆண்டுக்கான தமிழ்ப் பரீட்சையில் அதி சிறப்புப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது. தொடர்ந்து இயல் இசை நாடகம் என முத்தமிழ் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# தியாக தீபம் திலீபன் நினைவுநாள்








லண்டனில் கடந்த 26-09-2010 அன்று தியாக தீபம் திலீபனின் நினைவு வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. மாலை 6:00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வு இரவு 9:30 மணிவரை மண்டபம் நிறைந்த மக்களுடன் மிகவும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானிய ஐக்கிய தமிழர் செயற்பாட்டுக் குழுவால் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு மீண்டும் மக்கள் மனங்களில் ஒரு நம்பிக்கையை கொடுத்துள்ளது.


A KEY TO WEIGHT LOSS & KEEP FIT

A surprisingly easy way to burn fat quickly without an diet or exercise




Contact : S.Haria

07861 672 963

காலை உணவின் முன் இரண்டு மாத்திரைகளை எடுக்கவும்.
இருபது நிமிடங்களின் பின் காலை உணவை உண்ணலாம்.
ஆனால் உங்களுக்குப் பசி எடுக்காது.

'கொலஸ்ரறோல்' நீரிழிவுப் பிரச்சனையா? தீர்விற்கு எம்மை அணுகவும்.

Another full supplement available to control your cholestrol and Diabetics



## ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தீர்த்தத் திருவிழா நிகழ்வுகள்








ஆவணி விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வோல் தம்ரோ அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தீர்த்தத் திருவிழா நிகழ்வுகள் அண்மையில் Clacton On Sea இல் இடம்பெற்றன.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Oct 03 SUNDAY @ 17:30**

எழுச்சி வணக்க மாலை

தியாக தீபம் திலீபன், குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளுக்கும் மண்ணுக்காய் தம்முயிர் நீத்த அனைவரினதும் நினைவாக இடம்பெறும் வணக்க நிகழ்வு.

இடம்: Merton Hall, 78, Kingston Road, London, SW19 1LA

**Oct 02 SATURDAY @ 09:30**

வருடாந்த மாநாடு

சர்வதேச தமிழ்ச் செய்தியாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடு.

நேரம்: காலை 9.30

இடம்: University of Westminster, Harrow Campus, Watford Road, Northwick Park, Harrow, HA1 3TP.

**Oct 23 SATURDAY @ 18:00**

ஆனந்த ராகங்கள் இன்னிசை நிகழ்வு

போரின் அழிவுக்குள்ளான வன்னியின் தாரகை வித்தியானந்தா கல்லூரியின் மீள்கட்டுமான நிதிக்காக பிரபல தென்னிந்தியப் பாடகர் மனோ அவர்கள் கலந்துகொள்ளும் இன்னிசை நிகழ்ச்சி.

நேரம்: மாலை 6:00 மணி

இடம்: ZOROASTRIAN CENTER 440, Alexandra Avenue, Harrow, HA2 9TI

**Oct 30 SATURDAY @ 12.00**

கற்க கசடற - 2010

சாவதேச சிறுவர் நாளை முன்னிட்டு தமிழ் இளையோர் அமைப்பு வழங்கும் திருக்குறள் போட்டி.

விண்ணப்பமுடிவு திகதி : 27-10-10

தொடர்புகளுக்கு : katkakasadara@tyouk.org Mob - 07401094874


திருமண பிறந்தநாள் வைபவங்களுக்கு

# Sarasas Restarurant

(Sri Lankan & South Indian)

Specialist in Dosa

Lunch Offer Starts From £3.25 (Monday - Thursday 12.00 - 15.30)

தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டிநாட், தந்தூரி மற்றும் சைனீஸ் உணவு வகைகளை சுவையுடன் உண்டு மகிழ வாருங்கள்.

We do out door Catering for wedding & other parties

South Indian
North Indian
Srilankan
Tandoori
Chettinad
Chinese

Tel: 020 08561 8188

630- 634 Uxbridge Rd, Hayes, Middlesex UB4 0RY, UK

web:www.sarasasrestaurant.co.uk



16 வருட கால அனுபவம்

# Linga & Co Solicitors

Legal Advisors & Commissioners for Oaths

**We Specialise in:**

- Asylum and Immigration Matters
- Human rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Judicial Reviews
- Work Permits
- EEA Application(Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled migration Programme
- Naturalisation Applications

V.P. Lingajothy
LLB (Hons), M.Sc., Dip Fms, A.PLL
Principal
Immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்

முதல் ஆலோசனை இலவசம் (Initial Consultation Free)

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007ம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்கள்ளாயின் உடன் தொடர்பு கொள்ளவும்

மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்.

General Line : 020 8544 9285
Fax : 020 8452 9530

46, High Street
Colliers wood
London SW19 2BY

OISC

Emergency Line : 07771 646 441

# என் இனமே என் சனமே என்னை உனக்கு தெரிகின்றதா?



**சுந்தரி**
*(ஒரு பேப்பருக்காக)*

சமீபத்தில் அரங்கத்தால் அமைக்கப்பட்ட 'படிப்பினை மற்றும் நல்லிணக்கத்திற்கான குழ' என்றழைக்கப்படும் குழு முன்னிலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் முன்பிருந்த இடங்களில் உள்ள பொதுமக்கள் மீது, பொதுமக்கள் முன்னிலையில் விசாரணைகள் நடைபெறுகின்றன. இவ்விசாரணைக்கு வந்து செய்தி சேகரிக்க அரசாங்கம் அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளரான எழிலனின் மனைவி, ஆனந்தி சசிதரன் நேரடியாகவே பி.பி.சி தமிழோசைக்கு பேட்டியளித்துள்ளார்.

அவரது பேட்டியில் தனது கண் முன்னால் கடந்த வருடம் 18 ம் திகதி மே மாதம் போர் முடிந்தபின் முல்லைதீவு வட்டுவாகல் பாலம் தாண்டி உள்ள வெட்ட வெளியில் இருந்த கட்டிடம் ஒன்றில் அவரது கணவர் எழிலன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், பிரியன், இளம்பரிதி, விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜாவும், அவரது மூன்று பிள்ளைகளும், லோரன்ஸ் திலகர், ஜீவன், குட்டி, கோல்சர் பாபு உட்பட நூற்றுக்கும்மேற்பட்ட போராளிகள் சரணடைந்ததாகவும், இராணுவம் தனது கணவரை அடையாளம் கண்டு மாவிலாறு எழிலன் என்று அழைத்ததாகவும் கூறியுள்ளார்.

கணவரோடு போன தன்னையும் பிள்ளைகளையும் இராணுவம் மறித்து, அவர்களை விசாரித்து விட்டு தாம் விடுவதாகவும், தான் ஒரு அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால் பொதுமக்களோடு, தன்னையும் தன் மூன்று பெண் பிள்ளைகளையும் பஸ்சில் ஏற்றி ஓமத்தை முகாமில் இறக்கி விட்டதாகவும், அன்றில் இருந்து இன்று வரை தனக்கு ஒரு தொடர்பும், தகவலும் அரசு தரப்பில் இருந்து கிடைக்கவில்லை என்றும் தான் இன்னும் அவர் பற்றிய தகவல் அறிய முயன்றுவருவதாகவும், எதுவித பயனும் கிடைக்கவில்லை என்றும், அவரோடு சரணடைந்த மற்றவர்களின் குடுப்பத்திற்கும் இதே நிலைமைதான் என்றும் குறிப்பிட்டுளளார்.

அரசு சரண் அடைந்த குடும்பத்தினருக்கும், தாம் பிடித்தவர்களினது குடும்பத்தினரிடமும் யார் யாரை நாம் வைத்திருக்கின்றோம் என்ற விபரத்தை அறிவித்து விட்டதாக கூறிவருகின்றது ஆனால் ஆனந்தி தனக்கு எவரிடம் இருந்தும் இதுபற்றி ஒரு தகவலும் வரவில்லை என்றும், தான் டி.யு.குணசேகராவை மூன்று பிள்ளைகளுடன் போய் கிளிநொச்சியில் நேரில் கண்டு கொடுத்த கடித்தத்திற்கு, தனக்கு ஒரு மாதத்தின் பின் அக்கடித்தின் பிரதியோடு டி.யு.குணசேகரா இன்னொரு அமைச்சுக்கு இது பற்றி கேட்டு எழுதிய கடிதத்தை வைத்து அனுப்பியிருந்தார்கள், அதன் பிறகு இன்று மட்டும் ஒரு தகவலும் வரவில்லை என்று குறிப்பிட்டிருந்நதார். கொமிசன் முன் சாட்சியம் சொன்னதின் பின் நிலைமையில் ஏதும் மாற்றத்தை எதிர்பார்கிறீகளா? என்று கேட்டபோது 'ஜனதிபதியாலேயே ஒன்றும் சொல்ல முடியவில்லை அப்பிடியிருக்க இந்த கொமிசன் மட்டும் என்ன... சும்மா என்னுடைய மன.ஆறுதலுக்காக போய் சொல்லிவிட்டு வந்தது போல்தான் எனக்குள்ளது' எனறார்.

விடுதலை புலிகள் கடைசி நேரத்தில் பல அத்து மீறல்களை செய்ததாகவும், சிறார்களை படையில் சேர்த்ததாகவும் போர் பிரதேசத்தில் இருந்து வெளியேறியவர்களைச் சுட்டதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி ஏதும் விசாரணையின் போது கேட்க பட்டதா என்று கேட்டபோது 'அது பற்றி எதுவும் கேட்கவில்லை. அந்த நேரம் நாம் ஒரு திறந்த வெளி பங்கருக்கில் தான் இருந்தோம். நாம் இவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருக்கவில்லை. முன்னைய நேரத்தில் எல்லோரும் விடுதலைப் புலிகளை ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். இப்போ எப்பிடியோ இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் வந்தால் இனி இராணுவத்திற்கு சார்பான கதைகளைத்தான் கூறிக் கொண்டிருப்பார்கள்' என்றார்.

கடைசி நேரத்தில் என்னதான் நடந்தது என்ற கேள்விக்கு' கடைசி நேரத்தில் என்ன நடந்தது, நாங்கள் ஏதோ ஒரு நாட்டில் இருந்து ஏதாவது ஒரு தீர்வு எமக்கு கிடைக்கும், இவ்வளவு கஷ்டப்பட்டதற்கும், அவலப்பட்டதற்கும் ஏதோ ஒரு விடிவு வரும், ஏதாவது மத்தியஸ்தில் தீர்வு வரும் என்றுதான் நாம் எதிர்பார்த்தோம். ஆனால் ஒன்றும் வரவில்லை. கடைசியில் எல்லாம் கை மீறிப் போய் ஒரு நடைபிணமாகத்தான் நாம் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்தோம்' என்றார்.

எழிலன் போன்றவர்கள் எல்லாம் தப்பிச்சு வேற நாட்டுக்கு போக முயற்ச்சிக்கவில்லையா என்ற கேள்விக்கு 'அவர்கள் தாங்களும் போக முயற்ச்சிக்கவில்லை. எங்களையும், குடுப்பத்தையும் போக விடவில்லை. ஏனென்றால் தங்கட விசுவாசம் மற்றவர்களுக்கு இதாக இருக்கக் கூடாது என்றும், வாறது இவ்வளவு சனத்தோட சேர்ந்து வாறதுதான் எமக்கும் வரும் வாழ்வோ, சாவோ சனத்தோடையே போகட்டும் என்று சொல்லித்தான் எங்களையும் வைத்திருந்தவை தங்களோடை, நாங்களும் அவையளை விட்டு வெளியேற நினைக்கவில்லை, அவரை விட்டுவிட்டு நாங்கள் மட்டும் என்னென்று வாறது' என்றார்.

பிள்ளைகளின் நிலையைப் பற்றிச் கேட்ட போது 'அவர்கள் நிறைய சாவைப் பார்த்தவர்கள் ஏராளமான சடலங்களை கடந்து வந்தவர்கள், உளவியல் ரீதியாக நிறைய பாதிக்கப்பட்டுள்ளார்கள். தந்தையில்லை என்றெரு பிரச்சனை உள்ளது அப்பாவை பார்க்க வேணும் என்பதை மட்டும் என்னால் பூர்த்தி செய்ய முடியவில்லை' என்றார்.

எழிலன் எங்கு இருக்கிறார் என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 'அவருக்கு ஒன்றும் நடந்திருக்க வாய்ப்பில்லை, போர் எல்லாம் முடிந்த பின் 18ம் திகதி என் கண்முன்னால் இராணுவத்திடம் சரணடைந்தவர். அவரை எங்கையோ மறைத்து வைத்திருக்க வேண்டும், இது இலங்கை ஜனாதிபதிக்கு தெரியாததொன்றல்ல ஏனென்றால் இங்கு ஒரு ஈ அசைந்தாலும் அவருக்கு அது பற்றி தெரிந்திருக்கும் எனவே எங்கையோ மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்., இதே நிலைமைதான் மற்றைய போராளி குடும்பத்தினருக்கும், அவர்களும் ஐ.ஆர், சி க்-கு போகிறேன், Human Right க்கு போகிறேன் என்று போய்க் கொண்டிருக்கிறார்களே தவிர ஒருவரும் ஒருவரையாவது கண்டதாகச் சொல்லவில்லை.

ஊடகத்தில் தைரியமாக பேசுகிறீர்கள், இன்றைக்கு சாட்சியம் அளித்துள்ளீர்கள் இதனால் பின்விளைவுகள் ஏதாவது ஏற்படும் என்று அச்சம் உள்ளதா? என்று கேட்டதற்கு 'இல்லை இல்லை நான் பயப்படவில்லை. வந்தால் எதையும் எதிர்கொள்ள நான் தயாராக உள்ளேன். நான் வாழவேண்டும் என்ற விருப்பத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. இதை நான் இன்றும் ஆணைக்குழுக்கு முன்னாலும் சொன்னேன்' என்றார்.

அவரின் செவ்வியை கேட்டபோது அவரின் குரலில் ஆதங்கமும், எல்லாம் முயன்றும் ஒன்றும் முடியவில்லை என்ற கையாலாகாத் தன்மையும், விரத்தியின் உச்சத்தில் எதையும் எதிர்கொண்டு தனது கணவரின் இருப்பை அறிய துடிப்பது தெரிகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டு தமது பாதுகாப்பை பணயம் வைத்து, குழந்தைகளோடு இந்த ஏதலிகள் தமக்காக தாமே குரல் கொடுக்க வேண்டிய அவலத்திற்கு, யார் அவர்களைத் தள்ளினார்கள்?

புலம்பெயர் சமூகம் என்ற மாபெரும் சக்தியான நாம் என்ன செய்கிறோம்?

ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது. நாம் இது வரை காலமும் செய்த வேலைகளையும், சிறையில் அடைப்பட்டுள்வர்களை மீட்பதற்காக செய்த முயற்சிகளையும் சீர்தூக்கி பார்போம்.

அங்குள்ளவர்கள் எம் சனத்திற்கும், எம் இனத்திற்கும் எம்மை நன்றாகத் தெரியும் அவர்கள் எம்மை கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இருப்பார்கள்.

இதில் என்ன கவலைக்குரிய விடயம் என்றால், ஆனந்தி போன்றவர்கள் உலகுக்கு தெரிவிக்கிறதிற்குத்தான் இப்படி உயிரை கொடுக்கிறார்கள் என்றில்லை, தமிழனுக்கு தமிழனின் பிரச்சனையை விளங்கப்படுத்தவும் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

கேணல் திலீபன் தனது உயிரை உருக்கியது இந்தியாவை பற்றி உலகிற்கு காட்ட மட்டும் அல்ல. இந்தியாவை கண்மூடித்தனமாக நம்பியிருந்த எமது மக்களின் மாயை நீக்கி எழுச்சி கொள்ளவற்காகவும்தான்.

இப்போது 20 வருடம் தாண்டிய பின்னும் அதே கதை தொடர்கிறது. அவர்கள் தமது உயிரையும் பார்க்காது குரல் வளை நசிவுக்குள்ளாலும் நமது குரலைக் கொடுக்கின்றார்கள்.

நாமோ இங்கு எல்லா விதமான பேச்சுரிமையுடனும் வாளாதுள்ளோம்.

அங்கு நடக்கும் அவலங்களை வெளிக் கொணர்வதற்கு உரிய உபாயங்கள் எவை என ஆக்க பூர்வமானவற்றைப் பற்றி கதைப்போம், அது பற்றிச் சிந்திப்போம்.

இப்போ நாம் நெருப்பில் நின்று கொண்டிருக்கின்றோம். இங்கு நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் அங்கு நமது நிலமும், மொழியும், உயிரும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இனியும் காலம் தாழ்த்தாது களத்தில் இறங்குவோம். அடுத்தது என்ன எம்மால் இயலக் கூடியது யாது. சிந்திப்போம். சிந்தித்த வழி செயற்படுவோம். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமிழ் இனம் மொழி பண்பாடு அழிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து செயலில் இறங்குவோம்.



## புதிய வாழ்வு பூக்கட்டும்

அழகிய மண்டபம். அலங்கரித்த மேடை. வர்ண வர்ண சேலைகளில் பவனிவரும் ஆரணங்குகள். தலை தொடக்கம் கால்வரை அணிந்துள்ள தங்க நகைகள், விலை உயர்ந்த பட்டு வேட்டிகளிலும், சூட்டுகளிலும் நடமாடும் கனவான்கள், வாசலில் இருந்து மேடைவரை வியாபித்திருக்கும் விசாலமான அலங்காரச் சோடனைகள். அரங்கத்தின் உள்ளேதான் இந்த ஆடம்பரங்கள் என்று அவசரப்பட வேண்டாம். வெளியே கூட, றோல்ஸ் றோய்ஸ் கார் தொடக்கம், பி.எம் டபுள்யூ, பென்ஸ் ஈறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் பகட்டும் கண்களைக் கவர்ந்தது. இவை அத்தனைக்கும் மத்தியில், இளஞ் சிரிப்புடன், அதிகம் அலட்டிக் கொள்ளாத நிறைந்த புன்முறுவலுடன் மேடையில் நின்ற தமிழ்ப் பெண் தனது பருவம் எய்திய செய்தியை பறைசாற்றி நின்றார்.

இந்த வைபவம் தமிழ்க் கலாசாரத்தில் ஊறிய பெற்றோரால், தமது ஒரேயொரு மகளுக்கு, சைவசமய முறைப்படி ஒழுங்கு செய்த ஒரு அழைப்பு. இதில் பங்கு கொண்ட எனது சிந்தனை தாயகத்தில் தவித்துக் கொண்டிருக்கும் எமது உடன்பிறப்புக்ளை நோக்கி நகர்ந்தது.

போரின் அழிவுகளால் அல்லலுறும் எமது மக்களில், கால்கள், கைகள் இழந்து, அன்றாடம் அவதிப்படும் மக்களை எமது கண் முன் நிறுத்திப் பார்க்கிறேன். இரண்டு கால்களையும் இழந்து நடமாடவே முடியாது தவிக்கும் ஒருவருக்கு ஒரு காலுக்குப் பதிலாக செயற்கைக் காலொன்றைப் பொருத்திக் கொடுக்க தேவைப்படுவது குறைந்த பட்சம் £121 பவுண்கள் மாத்திரமே. இந்தத் தொகையை ஒருவர் கொடுத்துதவினால், ஒரு அனாதரவான உடன்பிறப்பு எழுந்து நடமாட முடியும்.

அன்று நான் பங்குபற்றிய வைபவத்திற்கு உத்தேசமாக £5000 பவுண்களுக்கு குறைவில்லாமல் செலவு கண்டிருக்கும் என்பது எனது ஒரு கணிப்பு. இந்தத்தொகை, கால்கள் இழந்த எத்தனை ஆட்களுக்கு செயற்கைக் கால்களை வழங்கியிருக்குமென நினைப்போமானால், வருங்காலத்திலாவது இத்தகைய ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, அனாதரவாவர்களுக்கு உதவ வழி செய்யும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

சுனாமியின் அகோர அனர்த்தத்தால் வாழ்விழந்துதவித்த தமிழ் மக்களை தாயகத்தில் புனர்வாழ்வளிக்க, அரசாங்கம் தவறினாலும் தம்மால் முடியும் என்று ஆரம்பித்து தொடர்ந்து சேவையாற்றிவரும், மன்னார், திருக்கேதீஸ்வரத்தில் இயங்கும் 'சிவன் இல்லம்' இன்று வரை புனர்வாழ்வளித்த மக்களின் தொகை ஏராளம். எதுவித புகழ்ச்சிக்கோ, பகட்டுக்கோ, இலாபத்துக்கோ இடம் கொடுக்காமல் தன்னலமற்ற சேவை செய்யும் இவர்களின் தொண்டை நேரினில் சென்று பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். அள்ளிக் கொடுக்கிறார்கள் அவர்களுடைய உதவியை. இவர்கள் தருவது புனர்வாழ்வு அல்ல புதுவாழ்வு.

## கைகளைக் கழுவியபின் துடையுங்கள், தேய்க்காதீர்.

கை கழுவும் இடங்களிலெல்லாம் Hand Dryer இருப்பதுஎதற்கு? கைகளைச் சுத்தமாகவைத்திருப்பதற்குத் தானே? அதே Hand Dryer உங்கள் கைகளில் கழுவுவதற்கு முன்பு இருந்த கிருமிகளைவிட (Batteria) கூடுதலான கிருமிகளைச் சேர்ப்பதாக இருந்தால் அதனால் என்ன பிரயோசனம். இரண்டு கைகளையும் உரசித் தேய்க்கும்போது, தோலின் நுண்ணிய மயிர்த் துவாரங்கள் மூலம் அதிகமாக வெளியேறும் கிருமிகள் மிகவும் ஆபத்தானது என Bredford பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Anna Shelling கூறுகின்றார். குறிப்பாக சுகவீனமானவர்களை இவ்விதமாக தொற்றும் கிருமிகள் பற்றிக் கொள்வது இலகுவானதென எச்சரிக்கின்றார்.

தொண்டர்கள் 14 பேரைத் தெரிவு செய்து, 15 செகண்டுகள் வரை தமது கைகளை மூன்று வெவ்வேறு Hand Dryerஇல் காயவைக்குமாறு கேட்டுக்கொண்டார். இவ்வாறு காயவைக்கும் போது, இரண்டு கைகளையும் நன்றாக உரசித் தேய்த்தும், சில நேரம் தேய்க்காமலும் பரீட்சித்த போது, ஆடாமல் அசையாமல் இருந்த கைகளில் 37 விகிதம் குறைவாகவே கிருமிகள் காணப்பட்டன. கைகளைக் கழுவிய பின் Hand Dryerல் தேய்த்துக் காயவைத்த கைகளில் 18% கூடுதலாக கிருமிகள் பற்றியிருந்ததை, இந்தப் பரிசோதனை நிருபித்துள்ளது. அதே சமயம் பேப்பர் ரவல்களால் துடைக்கப்பட்ட கைகள் ஒன்றோடொன்று உரசித் தேய்த்திருந்தாலும் கிருமிகளின் எண்ணிக்கை சரி அரைவாசி குறைவாகக் காணப்பட்டது. உண்மையில், பேப்பர் ரவல்களால் துடைக்கும் போது கிருமிகள் சுரண்டி எடுக்கப்படுகின்றன.

தொற்றும் கிருமிகள் மீது அசட்டையாக இருந்து விடாமல் கைகளை நன்றாக கழுவியபின் பேப்பர் ரவல்கள் மூலம் துடைத்து சுத்தம் செய்வதை வேதவாக்காகக் கருதுவது ஆரோக்கியத்துக்கு நல்லதல்லவா?

## இரும்பாக மாறும் அலுமீனியம்.

எடை குறைவாகவும் இருக்க வேண்டும். உறுதியாகவும் இருக்க வேண்டும். இந்தக் கோட்பாடு உடலுக்கு மட்டுமல்ல, உலோகத்துக்கும் தேவைப்படுகிறது. விமானங்களுக்கு பயன்படுத்தும் அலுமீனியம், போக்குவரத்துச் சாதனங்களுக்கும் ஆயுதங்களின் உடல் கோர்ப்புக்கும், அதன் இலேசான பாரத்தினால் உபயோகப் படுத்துவது தெர்ந்த விடயமே. அதே நேரம், இந்த உலோகத்தின் வலுத்தன்மை அதிகரிக்க முடியாதா என்ற ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டன.

உலோக மாற்றங்களில் ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் ரிற்றானியத்துக்கு (Titanium) ஈடாக, அலுமினியத்தை உருவாக்க புதியதோர் கண்டுபிடிப்பு உதயமாகியுள்ளது. இந்த நடைமுறையை High Pressure Torsion (HPT) என விஞ்ஞானிகள் பெயரிடப்பட்டுள்ளனர். இரண்டு பட்டறைக்கல்லின் (Anvil) இடையிலே ஒரு சதுர சென்ரிமீற்றர் அளவிலான மெல்லிய அலுமீனியத் தகட்டை வைத்து 60,000 கிலோகிராம் எடையை ஒத்த அமுக்கத்தைப் பிரயோகித்து இப்புதிய உலோகத்தை உருவாக்கியுள்ளனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட உலோகத் தகட்டை ஒரு மாதத்துக்கு மேலாக, அறையின் சாதாரண வெப்பத்துக்கு ஏற்றவாறு இயற்கையாக உறுதியடைய பரீட்சிக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அலுமீனிய உலோகத்தை Aluminium 7075 எனப்பெயரிட்டுள்ளனர். பரீட்சிக்கப்பட்ட இப்புதிய உலோகம் 1 Gigapascal வலுவுடையதாகவும், அதிக வலுவுடைய இரும்புக்கு நிகராக மாற்றமடைந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதாவது, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சதுரமீற்றர் அளவிலான அலுமீனியம் பயணிகள் நிறைந்த ஒரு விமானத்தின் நிறைக்குத் தாக்குப்பிடிக்குமென ஆதாரபூர்வமாக நிருபித்துள்ளனர்.

இத்துடன் விஞ்ஞானிகள் திருப்தியடையவில்லை, எப்படித்தான் இந்த அபாரசக்தி அலுமீனியத்துக்கு உண்டாகியது என்பதை C.T. Scanner மூலமும் Electron Microscope மூலமும் பரீட்சித்தபோது, HPT அணுகுமுறையில் ஏற்பட்ட அணுக்களின் மாற்றமே புதிய வடிவிலான அலுமீனியம் இரும்பு போன்ற அபார சக்தியை எட்டியதாக Los Angeles லுள்ள தென் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் Terenoe Langdon அவர்களும் அவரது குழுவினரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

எடையில் இலேசாகவும், சக்தியில் இரும்பு போன்றும் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களுக்கும், செயற்கை உடலுறுப்புகளுக்கும் தேவைப்படும் உலோகத்தை உருவாக்க இப்புதிய அலுமீனியம் உதவப்போவது நிச்சயமென வட கரோலினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி Yuntian Zhu கூறும்போது நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.






நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

# 020 7183 0367






**புதிய சட்டிலைட்**
**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தாற்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# புரட்டாதிச் சனி



காலகாலமாக இந்துக்களிடையே புரட்டாதிச் சனி பயபக்தியுடன் கடைப்பிடிக்கப்படும் ஒரு விரதம். ஊரில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளிலும் இந்தத் தினங்களில் காகத்தை தேடுவதும் களைப்பதும் வாடிக்கை. எங்கள் வீட்டுப்பக்கம் இடையிடையே காகம் வருவதுண்டு என்ற எண்ணம் புலம்பெயர் நாட்டில் காகத்தை எங்கள் தேவைக்காக அன்றய தினங்களில் தேட வைக்கின்றன. பறவைகளுக்கு உணவு தருவதை நியதியாகக் கொண்ட வேற்று இனத்தவரைக் கண்டதும் பறவைகள் நாடி ஓடி தேடி வருகின்றன. திருக்கழுகுக்குன்றத்தில் பகல்பூசை முடிந்ததும் ஐயர் வைக்கும் அமுதைத் தேடி நாளாந்தம் குறித்த நேரத்துக்கு ஓடி வர ஒரு காலத்தில் ஓரிரு கழுகுகள் இருந்தன. விரதத்தை மட்டும் வழமையாக்கிக் கொண்ட ஏனைய நாட்களில் காகத்தின் பக்கமே திரும்பிப் பார்க்காத எமக்குத்தான் இந்த காகத்தை தேடும் புரட்டாதிச்சனி அவலம்.

எமது வாழ்க்கைச்சிரமங்கள், அலைவுகள், கஷ்டங்கள் அனைத்தக்கும் சனிக்கிரகமே காரணமென நம்புகின்றோம். சனி பகவானுக்குரிய புரட்டாதிச்சனி சந்ததி சந்ததியாக விரதத்துக்குரிய தினம் என்ற நம்பிக்கையை எமக்குள் ஐக்கியமாக்கியுள்ளது. புனிதமாகச் சமைத்த உணவை முதலில் காகத்திற்கு வைத்து அது ஒரு கவளமேனும் அருந்திய பின்பே நாம் உணவு அருந்தி விரதத்தை முடிக்கலாம் என்று இது குறித்து நிலவும் நியதி.

ஆவணி நீண்ட விடுமுறையில் அரங்கம் காணமுடியாத அரங்கேற்றங்கள், கலைநிகழ்வுகள் புலம்பெயர் நாட்டில் சனிக்கிழமைகளில் தான் நிரை நிறையாக நிறையும். அவற்றில் கூட வழமைக்கு மாறாக சைவ உணவே கூடுதலாக மணக்கும். தமிழ்பாடசாலை, பிறந்ததின விழாக்கள், அரங்கேற்றங்கள், ஊர் ஒன்றிய விழா அல்லது பழைய மாணவர்சங்க கலைவிழா என நிறைந்த நிகழ்வு அட்டவணையை கொண்டுள்ள சனிக்கிழமைகளில், கோயிலுக்கு சென்று நல்லெண்ணை எரிப்பதும், குடும்பத்தோடு விரதம் அனுஷ்டிப்பதும், சிட்டி, எள்ளுப்பொடி, நல்லெண்ணை எல்லாம் தயாராக இருக்கும் கோயிலில் அவற்றை வாங்கி நாங்கள் எரிப்பதும் ஒரு வழமையான நிகழ்வாக அமைகின்றது.

ஒரு சிட்டி எரிக்க இரண்டு பவுண்கள் வரையான கட்டணத்தை கோயில்கள் அறவிடுகின்றன. மேல் வரிசையில் நின்று அவற்றை கையிலேந்தி நிறைந்த சனசந்தடிக்குள் எள்ளெண்ணெய் புகை கவிழும் ஆலயங்களில் இந்த நேர்த்தியை நிறைவேற்ற நிறைகின்ற சனங்கள் ஆயிரமாயிரமாக புலம்பெயர் நாட்டிலும் அமைகின்றன.

அன்றைய அமைதி நிரம்பிய கிராமிய வாழ்கையில், எம் பள்ளிப்பிராய நாட்களில், ஊரிலும் புரட்டாதிகால சனிகள் கலகலப்பான சிறப்பான விரதநாட்களாகத்தான் கழிந்தன. தெருச்சந்தைகளில் காகத்துக்கு படைக்கவென கீரை வகைகள் உட்பட மரக்கறிகள் அன்று அதிகம் விற்பனையாகும். நல்லெண்ணெய், சிட்டி, கறுப்புத்துணி என்பன தனித்தனி கடைகளிலேயே விற்பனைக்கிருக்கும். சமைத்த உணவுக்குள் தலைமயிர் விழுந்துவிடக்கூடாது என்பதிலும் அம்மா அன்று அதிக கவனமெடுப்பார். மினுக்கிக் கழுவிய சைவப்பாத்திரங்கள் மட்டும் அன்றைய சமையலுக்கு பயன்படுத்தப்படும? மரக்கறிகள் வீட்டுக்கு வீடு நிறையும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

விரதத்தன்மைகள் ஒவ்வொரு வீட்டிலும் அன்று நிலவும். சின்ன வாழையில் வெட்டிய தலைப்பு வாழையிலையில் சோறை அளவாக இட்டு நல்லெண்ணெய் முதலாக கறிகளையும் சுத்தவர வைத்து காகத்தை தேடுவது சனிக்கிழமைகளில் ஊரிலும் நமது வேலையாக சிறு பிராயத்தில் இருந்தது. அதிலும் அண்டங்காகத்திற்குதான் உணவு வைக்க வேண்டும், அரிசிக் காகம் சனிபகவானின் வாகனமல்ல என்பதும் நம்பிக்கையாக இருந்தது. எல்லோரும் காகங்களை அன்று உபசரிப்பதால் ஊரிலும் காகத்தை நாமாக தேடித்தான் புரட்டாதிச்சனி தோறும் அலையவேண்டிய நிலைப்பாடு இருந்தது.

எள்ளெண்ணை எரிக்க சிவன் கோயில்கள் தான் சிறந்தன என்பதும் ஒரு வரையறை. கீரிமலை தீர்த்தக்கரை, சிவன்கோயில் என்று ஆடி அமாவாசையை அடுத்து அதிகசனம் கூடும் திதி புரட்டாதிச்சனிகள்தான் எனலாம். அதிலும் கடைசிச் சனிக்கிழமைகளில் அதிக களை கட்டும். கயிறுகள் கட்டி எல்லையிட்ட வழியாக வரிசையாகச் சென்று எள்ளெண்ணெய் எரிக்க வேண்டிய நிலைப்பாடு ஊர் ஆலயங்களிலும் இருக்கின்றன.

நவக்கிரகங்களுக்கு 9 குடம், 27 குடம் என்று நேர்த்தி தண்ணீர் வார்ப்பதும் அன்றய நம்பிக்கைச் சடங்குகளில் ஒன்று. ஒரு குடத்துக்கு இவ்வளவு சதம் என்ற கட்டண நிர்ணயம், எள்ளெண்ணெய் எரிப்பதற்கும் சிட்டிக்கு ஒரு குறித்த தொகைக்கட்டணம். காகத்திற்கு வைப்பதற்கும் பூவரசம் இலையில் எள்ளுடன் சேர்த்து சமைத்த ஒரு கவள அமுது விற்பனைக்கு இருக்கும். அன்று அதன் விலை ஒரு இலை் ஐந்து சதம். நீல நிறப்பூக்களுக்கும் அன்று அதிக மதிப்பு. சனிபகவானுக்கு எள்ளு, நீலோற்பலமலர், கறுப்புஆடை என்பனவே பிடித்தமானவை என்ற நம்பிக்கை இதற்கு காரணம். சனி பகவானுக்கு ஏற்ற வழிபாட்டுடன் அவரை குளிர்வித்தால், நம் வாழ்வு நலப்படும் என்ற நம்பிக்கை இவற்றை செய்ய வைக்கின்றன.

**தமிழ் மொழியை எம்மிடையே நிலைக்க வைக்கமுடியுமா என்பதில் சந்தேகம் இருந்தாலும், சமய நம்பிக்கைகளும், சடங்குகளும் அழியாது தொடரும் என்பதை புரட்டாதிச்சனிகளும் காட்டி நிற்கின்றன.**

சனிபகவானுக்கு அர்ச்சனைக்காக செய்யும் தேங்காய்ப்பாதி, பழம், பாக்கு, வெற்றிலை, தட்டம் என்பன திரும்பி வராது. அதற்காக சனி பகவான் அர்ச்சனைக்கு மட்டும் பழப்புளி போட்டு மினுக்கி பளபளக்கும் வட்டவடிவான பித்தளைத் தட்டம் தவிர்க்கப்படும். நம்பிக்கை தான் வாழ்க்கை. நம்பிக்கை சமயசடங்குகளை இவ்வாறு நிலைபெறச் செய்கின்றன. சந்ததி சந்ததியாக தொடர வைக்கின்றன.

புலம்பெயர்நாட்டிலும் சமயசடங்குகள் பின்பற்றப்படுகின்றன. தமிழ்மொழியை எம்மிடையே நிலைக்க வைக்கமுடியுமா என்பதில் சந்தேகம் இருந்தாலும், சமய நம்பிக்கைகளும், சடங்குகளும் அழியாது தொடரும் என்பதை புரட்டாதிச்சனிகளும் காட்டி நிற்கின்றன.






# ராஜ ராஜ சோழன் நான்...



**பாமரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நமக்கும் மாமன்னன் ராஜராஜ சோழனுக்கும் அப்படியொன்றும் தனிப்பட்ட பகை கிடையாது. பள்ளிக் கூட பாட புத்தகத்தில் மதிப் பெண்களுக்காக ‘சோழர் வரலாறு’ படித்ததோடு சரி.

சிறு வயதில் அம்மா கூட்டிப் போன ஏ.பி.நாகராஜனின் 4975 மீட்டர் நீளமுள்ள ‘ராஜராஜ சோழன்’ படத்தினைப் பார்த்து வாயில் ஈ போவது கூட தெரியாமல் வியந்திருக்கிறேன். தமிழில் வெளிவந்த முதல் சினிமாஸ்கோப் படம் அதுதான்.

பின்னர் பல வருடங்கள் கழித்து தஞ்சை மண்ணில் கால் வைத்தபோது பிரமிப்பு விலகாமல் அணு அணுவாக ரசித்த இடம் ஒன்று உண்டென்றால் அது தஞ்சை பெரிய கோயிலாகத்தான் இருக்க முடியும்.

பதிமூன்று அடுக்குகள் கொண்ட அதன் வேலைப்பாடுகளும் அழகும் நம்மை வியக்க வைக்கின்றன. நேற்று கட்டிய காமன்வெல்த் விளையாட்டிற்கான பாலமே குப்புறக் கவிழ்ந்து பலபேர் குற்றுயிராய்க் கிடக்கும்போது பத்து நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த கோபுரம் இன்னமும் கம்பீரமாய் காட்சி தருகிறதே என்ன காரணம்?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பி.இ படிப்பும் இல்லை.. எம்.இ.படிப்பும் இல்லை.. பெற்றோரது அடிவயிற்றில் கட்டியிருக்கும் பணத்தைக் கூட அடித்துப் பிடுங்கும் பொறியியல் கல்லூரிகளும் இல்லை... அப்புறம் எப்படிக் கை வந்தது இந்தக் கலை?

அதுதான் பட்டறிவுக்கும் பாட அறிவுக்கும் உள்ள வேறுபாடு.

பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அந்த மக்களது அயராத உழைப்பும்.. தொழில் நுட்ப அறிவும்... கலை நயமும்தான் இன்று அது விண்ணுயர எழுந்து நிற்கக் காரணம். கூடவே மன்னனது ரசனையும் கூடுதல் பலம் சேர்த்திருக்கும்தான்.

சரி... இப்படி சோழர் காலத்து அரண்மனைகள்... வழிபாட்டுத்தலங்கள்... சிற்பங்கள்... ஓவியங்கள்... அவர்களது வீர தீர பராக்கிரமங்கள் எல்லாம் அற்புதம்தான். ஆனால் மக்கள் எப்படி இருந்தார்கள் அவர்கள் காலத்தில்.. அதுதானே முக்கியம்?

‘மாதம் மும்மாரி பொழிகிறதா மந்திரியாரே?’ எனக் கேட்டுவிட்டு உப்பரிகையில் ஓய்வெடுக்கப் போய் விட்டார்களா? அல்லது மக்களோடு மக்களாக நின்று அவர்களது துயரங்களைத் துடைக்க துணை நின்றார்களா? இதுதான் இன்று நம் முன் உள்ள கேள்வி.

தஞ்சை பெரிய கோவில் கம்பீரமாக நிற்கிறது வெளிப்புறத்தில். ஆனால் மக்கள் வழிபாடு நடத்துவதற்கும்... வழிபடுவதற்கும் சமத்துவம் நிலவியதா உட்புறத்தில்...

இல்லை... இல்லை... இல்லை... இல்லை... இல்லவேயில்லை என்கின்றன சோழர் காலத்திய கல்வெட்டுகளும் ஆய்வு நூல்களும்.

சமயத் தலத்தில் சமத்துவமின்மை மட்டுமல்ல சோழப் பேரரசில் மக்கள் நிலை எவ்வாறிருந்தது? அவர்களது கல்வி எவ்வாறு இருந்தது? பெண்களது நிலை எவ்வாறு இருந்தது? நிலம் யார் வசம் இருந்தது? பாழாய்ப்போன சாதி என்ன பங்கை ஆற்றியது? இதுவெல்லாம் முக்கியமில்லையா நமக்கு?

சரி... மக்கள் எப்படி இருந்தார்கள்? அதை முதலில் பார்ப்போம். சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காவிரி ஆற்றின் தென் கரையில் இருந்த இரு ஊர்களை தங்களின் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட அறிஞர்கள் அதிர்ந்து போனார்கள். ஊரே சாதியால் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து.

ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலயசோழன் தஞ்சையைக் கைப்பற்றி சோழப் பேரரசின் உருவாக்கத்திற்கு அடித்தளம் இடுகிறான். அதன் பின்னர் வந்த சோழப் பேரரசர்களும் வைதீகம் செழித்து வளர பொன்னையும் பொருளையும் நிலத்தையும் தானமாக அள்ளி வழங்குகிறார்கள். எல்லோருக்கும் அல்ல. சிலருக்கு மட்டும். இதனை துல்லியமாகப் போட்டு உடைக்கிறார் கே.கே.பிள்ளை என்கிற வரலாற்று ஆய்வாளர்.

‘வேத நெறி தழைத்தோங்குவதற்காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடி புகுந்த பிராமணருக்கு பொன்னையும் பொருளையும் வழங்கினர். பிராமணர்களுக்குத் தனி நிலங்களும், முழு கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் என பல பெயரில் வழங்கின. இக்குடியிருப்புகள் அனைத்தும் பிராமணரின் நிர்வாகத்திற்கே விடப்பட்டன. அரசனுடைய ஆணைகள் கூட அவற்றினுள் செயல்பட முடியாது. அக்கிராமங்களுக்கு எல்லா விதமான வரிகள்... கட்டணங்கள்.. கடமைகள்... ஆயங்கள்... என அனைத்தில் இருந்தும் முழு விலக்கு அளிக்கப்பட்டன. என்று சோழர்களது கல்வெட்டுக்களில் இருந்தே எடுத்துக் காட்டி அம்பலப்படுத்துகிறார் கே.கே.பிள்ளை.

நிலமும் இலவசம்...

வரிகளும் கிடையாது...

கட்டணங்களும் இல்லை...

அரசன் கூட கேள்வி கேட்க முடியாது...

அதாவது இன்றைக்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்காக ஏகப்பட்ட வரிச்சலுகைகளுடனும், ஏகப்பட்ட வரி விலக்குகளுடனும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள ‘சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப்’ S E Z – Special Economic Zone போல...

அன்றைக்கு ராஜராஜ சோழன் அமைத்துக் கொடுத்தது ‘சிறப்புப் பிராமண மண்டலங்கள்’.

அதாவது (SBZ – Special Bramanical Zone).

இதிலென்ன தவறு? தனக்கு எவரைப் பிடிக்கிறதோ அவருக்கு விருப்பமானவற்றையெல்லாம் வாரி வழங்குவதுதானே மன்னர்களது விருப்பம்.. குற்றமில்லைதான்.

ஆனால் அதே சோழ சாம்ராஜ்ஜியத்தில் மற்ற மக்கள் எப்படி வாழ்ந்தார்களாம்? அதற்கும் இருக்கிறது கல்வெட்டு.

‘வேதம்’ ஓத வந்தவர்களுக்கு சோழ அரசு சலுகை காட்டிய அதே வேளையில் உழவர்கள், கைவினைக் கலைஞர்கள், பிறதொழில் செய்வோர் மீது கடுமையான வரிகளை விதித்தது. இவற்றுள் அடித்தள எளியமக்களான சலவையாளர்கள், குயவர், தறி நெய்பவர், தட்டார், ஓடங்களைச் செலுத்தியோர் மீது முறையே... வண்ணார்பாறை பயன்பாட்டு வரி... குசக்காணம்... தறிக்கூரை... தட்டார்பாட்டம்... என வரி மேல் வரி போட்டுத் தள்ளியதோடு நிறுத்தாமல் உழவர்கள் ஒரு பயிருக்கு ஊடாக இன்னொரு பயிரை வளர்த்தால்கூட அதற்கும் ஊடுபோக்கு என வரி போட்டு பரிபாலனம் செய்தவர்கள்தான் இந்த ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ பராக்கிரம ராஜ கெம்பீர மன்னர்கள்.

நிர்வாகமும் நீதியும் இப்படியிருக்க?.. பெண்கள் நிலை எப்படி இருந்ததாம்? அதற்கும் இருக்கிறது ஆப்பு. எண்ணற்ற பெண்கள் பொட்டுக் கட்டுதல் என்கிற பெயரால் கோயில்களில் தேவரடியார்களாக ஆக்கப்பட்டதும் இக்காலத்தில்தான்.

அது சரி... கல்வி?

அதுவும் குலத்துக்கொரு நீதிதான். அப்புறம் எங்கு போகும் எல்லோருக்கும் கல்வி?

இதையெல்லாம் பாமரன் சொன்னால் தப்பென்று சொல்லலாம். ஆனால் பண்டிதர்கள் சொன்னால்? அதுவும் இவைகளை தமிழக அரசே வெளியிட்டால்... ஆம் தமிழக அரசே வெளியிட்டது.. இப்போதல்ல. 1976 இல். அதுவும் தி.மு.க. அரசு.

தி.மு.க.ஆட்சியில் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே ‘தமிழ் நில வரலாறு’ என்கிற நூலை வெளியிட்டது அதன் பதிப்பாசிரியர் கோ.தங்கவேலு. சோழர் கால ஆட்சி உழைக்கும் மக்களுக்கு எப்பேர்ப்பட்ட பொல்லாத காலமாக விளங்கியது என்பதை அக்குவேறாக அலசியது அந்த நூல். பிற்பாடு தி.மு.க.ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு இது ‘பிரம்மதேய ஆலோசகர்’ குழுவால் தடை செய்யப்பட்டது.

மன்னர் காலத்தில் ஏன் மார்க்சீயம் வரவில்லை? ராஜராஜ சோழன் ஏன் பின் நவீனத்துவம் பற்றிப் பேசவில்லை? என்பது போன்ற கேள்விகளல்ல நமது கேள்விகள்.

ஈழம் வென்றதும்... கடாரம் சென்றதும்... வெற்றிக்கொடி நாட்டியதும் மகிழத்தக்கதுதான் ஆனால்... தனது குடிமக்களுக்குள்ளேயே ஏன் பாகுபாடு காட்டினான்? ஒரு பக்கம் சுகத்தையும்... ஒரு பக்கம் சுமையையும் ஏற்றியது ஏன்? இந்தக் கேள்விகள் நிறைகளைப் பற்றி சிலாகிக்கும் வேளையிலும் நெஞ்சில் உறுத்தும் கேள்விகள் அல்லவா?.

சோழர்கள் என்றில்லை பல்லவ மன்னர்களும், நாயக்க மன்னர்களும் இன்னபிற இத்யாதி மன்னர்களும்தான் என்ன கிழித்தார்கள்?

நாம் மன்னர் காலத்தை விட்டு வெகு நூற்றாண்டு வந்தாயிற்று. அப்புறம் எதற்கு அரசு செலவில் விழா?

என்பதுதான் நமது வினா.

இது...

‘கோயில்கள் கூடாதென்பதல்ல. கோயில்கள் கொள்ளையர்களின் கூடாரம் ஆகக் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை.’

என்று இன்றல்ல... ஐம்பத்தி எட்டு ஆண்டுகளுக்கு முன்பே முழங்கியவருக்குத் தெரியாதா...?

சோழர்கள் காலத்தில் கோயில்கள் யாருடைய கூடாரங்களாக இருந்தன என்பது?



# தமிழர் வழியே தலைவர் வழி!

எதுவுமே இன்னமும் முடியவில்லை எவையுமே இன்னமும் அழியவில்லை போர் ஓய்ந்தது பிரச்சினைகள் முடிந்தன என்று சொல்ல ஏதுமில்லை. இது இன்னுமொரு போரின், போராட்டத்தின் தொடக்கம். போராட்ட முறைமையில் ஒரு மாற்றம் வந்தாகி விட்டது என்பதை தவிர போர் ஓயவில்லை.

இலங்கைத் தீவு சுதந்திரமடைந்து 62 வருடங்கள் ஆகிவிட்டன சுமார் 30 ஆண்டுகள் அகிம்சைப் போராலும் அடுத்த 30 ஆண்டுகள் ஆயுதப் போராலும் எங்களுக்கான உரிமைகளைக் கேட்டோம். சேர் பொன் அருணாசலம், ஜி.ஜி.பொன்னம்பலம், தந்தை செல்வா, சி.சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம் என்று வந்த தமிழ்த் தலைவர்கள் அகிம்சை ரீதியில் ஈழத்தமிழரின் உரிமையைக் கேட்டனர். உளத் தூய்மையுடன் இதில் ஈடுபட்டோர் சேர்.பொன் அருணாசலம், மற்றும் தந்தை செல்வா.

மீதி முப்பது ஆண்டுகளில் ஆயுதப் போர் முகிழ்த்தது. சமகாலத்தில் ஆயுதப் போருக்குத் தலைமை தாங்கியோர் பலர். எல்லோர் பெயரும் இங்கு எதற்கு ? ஆனால் விட்டுக் கொடுத்தவர்களும், காட்டிக் கொடுத்தவர்களும், விலை போனவர்களும், நெறிபிறழ்ந்தவர்களும் என்று தான் அனைத்து ஆயுதத் தலைவர்களும் இருந்தனர். ஆனால் ஒரேயொருவர் தான் உறுதியாக இருந்தார். திடமாக நின்றார். நெறி வழுவவில்லை, ஓர்மம் தணியவில்லை வீரம் செறிந்து விளங்கினார். அதனால் தமிழீழம் என்ற தேசம் அமைக்க அவரால் முடிந்தது. எட்டுக் கோடி எனச் செறிந்த உலகத் தமிழினம் அவரை நம்பியது. அவர் பின்னால் நின்றது. உலகத் தமிழனினத்தின் ஒப்பற்ற ஒரேயொரு தலைவர் அவர் தான் எனும் நாமம் பெற்றார்.

யாருக்கும் அஞ்சியதில்லை, எவரிடமும் அடிபணிந்தது இல்லை, வேருக்குள் உறுதிகொண்ட வேம்பாய் நிமிர்ந்தார். எத்தனை அவச்சொற்கள். எத்தனை, பழிச்சொற்கள், அத்தனையையும் புறங்கையால் தட்டிவிட்டு அடுத்த அடி எடுத்து வைத்தார். ஏற்றம் மிக்க தலைமை ஒன்றை நமக்குத் தந்தார். அவர் காலடி தொட்டு அவர் கண்ணசைவு கண்டு திரண்டனர் உலகத்தமிழர். உறுதிபட எழுந்தனர். இத்தனை வல்லவம் வேறு எவர்க்கு வாய்க்கும்?

நான் ஒன்றே சொல்வேன் அதனையும் உறுதியாகச் சொல்வேன் சொல்வதற்கு அஞ்ச எதுவுமில்லை சோர்வும் இல்லை எங்கள் அடையாளம் எங்கள் ஆதர்சம் எங்கள் உறுதி எங்கள் உணர்வு எங்கள் உயிர் எங்கள் மூச்சு யாவும் ஒன்று தான். ஒருவர் தான். அவர் தமிழ்தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன். அவர் தன் சொல்லாலும் செயலாலும், பணியாலும் பண்பாலும் அதனை எமக்கு உணர்த்தி விட்டார். அவருக்கு முன்னும் எவருமிலர் அவருக்கு பிறகும் யாருமிலர்.

நாம் செய்ய இருப்பது ஒன்றே ஒன்று தான். அண்ணன் பெயர் சொல்வோம் உடன் அணிவகுத்து நிற்போம். அப் புனிதரின் நாமம் சொல்லி பயனம் தொடர்வோம். இலக்கை அடைவோம் எங்கள் முன்னால் இருக்கக்கூடிய மந்திரச்சொல் அதுவொன்றே. எம்மையறியாமல் எம்மையுணராமல் எம்மை எம்பி எழச் செய்யும் ஓர்மம் அது ஒன்றே. இல்லையெனில் அனைவரும் அவர் பின்னால் எப்படி அணிவகுத்தனர்? சொல்லில் அடங்காச் சுமைகளை எவ்வாறு சுமந்தனர்? செயற்கரிய செயலை எவ்வாறு எவ்வாறு செய்த முடித்தனர்? காற்று புகமுடியா ஒன்றுக்குள் கரும்புலிகளால் எப்படிப் புகுந்தனர்? உலகில் எங்கேனும் இத்தகைய தியாகம், இத்தகைய வீரம், இத்தகைய ஓர்மம், என்று ஏதேனும் கேட்டீரோ? இத் தியாகத்தையும் வீரத்தையும் ஓர்மத்தையும் விவேகத்தையும் தமிழ்ப் போராளிகள் எங்கனம் தம் நெஞ்சுள் கட்டிவைத்துக் கொண்டோடினர். தகுதி மிக்க தலைவன் ஒருவன் இருக்கிறான் அவனுள் தர்மம் குடி கொண்டிருக்கிறது என்ற ஒற்றை நம்பிக்கை அன்றி வேறு ஒன்று உண்டா?

இவ்வாறெல்லாம் ஏது என்னை எழுதத் தூண்டுகிறது எதுவென்றால் ஒரு கவிஞர் சொன்னார். *'பிறத்தியான் எல்லாம் உள்நுழையும் காலம்'* என்று. அந்தக் காலம் இப்பொழுது வந்திருக்கிறது. இதுவரை காலமும் போராட்டத்தின் மீதும் போராளிகள் மீதும் அறம் பாடிய இணையத் தளமொன்று ' மாவீரர் தியாகம் வீண் போகக் கூடாது' என்கிற மாதிரி சுருதி மாற்றிப் பாடுகிறது. அது திருந்திவிட்டது காரணம் என்பதல்ல. இந்த 'வெளியை' தனக்குச் சாதகமாக்க அந்த இணையத் தளம் முயல்கிறது.

அதே மாதிரி வேறொன்று இதுவரை காலமும் ஒன்றும் பேசாது ஊமையாக இருந்த ஐயர் என்பவர் அதே இணையத்தளத்தில் ஒரு தொடர் கட்டுரை எழுதி முடித்துள்ளார். அக்கட்டுரை தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்ற காலத்தையும் அதில் நமது தேசியத் தலைவரின் செயற்பாடுகளையும் தங்கள் போன்றோரின் அதாவது ஐயர் போன்றோரின் செயற்பாடுகளையும் தெரிவித்திருக்கிறது. ஐயர் என்னவோ தலைவர் மீது சேறு பூசத்தான் முயன்றிருக்கிறார். ஆனால் உள்ளார்ந்த சுயவிருப்பு வெறுப்புக்களைத் தவிர்த்து அக்கட்டுரையை வாசிக்கும் எவரும் தலைவரை நேசிக்காமல் இருக்க முடியாது மாத்திரமில்லை வியக்காமலும் இருக்க முடியாது.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

அக்கட்டுரை தலைவர் மீது மேலும் ஒளியைப் பாய்ச்சியிருக்கிறது என்பேன் நான். ஒன்றை நாம் உணரவேண்டும். மக்கள் முட்டாள்கள் அல்லர். நமது தலைவரும் அவர் சார்ந்த குழுவினரும் மக்களை நம்பவில்லை சுத்த இராணுவக் கண்ணோட்டம், தனிநபர் பயங்கரவாதம் என்பது மாதிரி அக்கட்டுரை மேற்செல்கிறது. மறுபுறத்தில் ஐயர் போன்றோர் மக்களை நம்பி சுத்த இராணுவக் கண்ணோட்டத்தை வெறுத்து தனிநபர் பயங்கரவாதத்தை ஒதுக்கி நடக்க முற்பட்டதாக காட்டப்படுகிறது. கட்டுரை முடிவில் ஐயர் ஒன்று சொல்கிறார். எண்பதுகளின் முற்பகுதியில் எல்லாம் தங்கள் கையை விட்டுப் போன தாக்கத்தில் கடற்கரையில் நின்று தமிழ் நாட்டுக்கு வள்ளம் ஏறுவதாக கட்டுரை துக்கத்துடன் தன்னை முடித்துக் கொண்டது.

ஆனால் காலம் என்ன செய்தது ? கடற்கரையில் வள்ளத்தில் ஐயர் போன்றோரை ஏற்றி அனுப்பி விட்டு தலைவரிடமும் அவர் குழுவினரிடமும் தன் கரங்களைக் கொடுத்தது தன்னைக் கரையேற்று என்றது. பாருங்கள் பிறகு நடந்த புதினங்களை அதே எண்பதுகளின் இறுதிப் பகுதியில் தேசம் அமைக்கும் கருக் கட்டலுடன் தலைவரும் அவர் தம் தளபதிகளும் போராளிகளும் காட்டிலிருந்து புறப்பட்டனர். வல்லாதிக்க இந்திய இராணுவத்தை புறமுதுகிட்டு ஓடச் செய்து விட்டு விழுது விட்ட விருட்சமான இயக்கமாக தலைவர் வருகிறார். இது எப்படிச் சாத்தியமாயிற்று எங்ஙனம் இது நிகழ்ந்தது.

மக்களை நம்பிய ஐயர் போன்றோரை அகற்றிவிட்டு மக்களை நம்பாத தலைவரை மக்கள் நம்பியது எங்ஙனம். இலட்சோப லட்சம் மக்கள் அவர் பின்னால் அணி திரண்டது எவ்வாறு ? விமர்சனம் சுய விசாரணை செய்யத் தெரிந்தோர் இதற்கான பதிலைத் தேடுதல் அவசியம்.

இறுதியாக என் கருத்து மக்கள் போராட்டம் முக்கியம். சுத்த ராணுவக் கண்ணோட்டம் தனிநபர் பயங்கரவாதம் மோசமானது. ஆனால் அத்தனையையும் இடம் மாற்றி விளங்க முயன்றது தான் பெரும்பாவம். தமிழர் வழியே தலைவர் வழி.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
***(ஒரு பேப்பருக்காக)***

அழகிய மரங்கள் கொண்ட கலிபோனியா.



சிறு வயதில் பனை மரம் நாற்பது முழம்வரை அதாவது 60 அடிவரை வளரும் என்பதை வியப்புடன் படித்தோம். பின் 100 அடி உயரம்வரை வளர்ந்த பனை மரங்களைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. அண்மையில் எனக்கு கிடைத்த தகவல் ஒன்றின்படி அதே பனை தென்னைக் குடும்பத்தைச் சார்ந்த wax palm (Ceroxylon quindiuence) என்னும் கொலம்பியாவின் தேசிய மரம், 300 அடிகளுக்க மேல் உயர வல்லது. அவுஸ்திரேலியாவின் ரஸ்மேனியாவில் உள்ள நீலகிரித் தைல மரமொன்று (Eucalyptus regnans) 326 அடி உயரமுடையது. என்னும் தகவலும் கிடைத்துள்ளது.

இன்று உலகின் உயர்நத மரம் எதுவென்ற கேள்வி எழும்போது கலிபோனிய மாநிலத்தில் வளரும் Redwood என்று அழைக்கப்படும் Sequoia Sempervirens என்னும் மரத்தையே கூறவேண்டும். கலிபோனியாவின் தேசிய வனப் பாதுகாப்பு வலயம் ஒன்றில் 379 அடி உயரம் கொண்ட இவ்வகை மரமொன்று அவதானிக்கப் பட்டுள்ளது. இதன் இன்னொரு பிரிவான sequoidiadendran gigganteum என்னும் இன மரமொன்று 326 அடி உயரம்வரை வளர்ந்திருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது. இந்த மரத்திற்கு இன்னமொரு பெருமையும் உண்டு. அதன் அடிப் பாகத்தில் 29 அடி சுற்றுக் கொண்ட இந்த மரம் 50,000 கன அடி பருமன் கொண்டது. கலிபோனியா செல்பவர்கள் அதன் தேசிய வனப் பாதுகாப்பு வலயங்களில் ஆயிரக்கணக்கான இவ்வகை Sequoia மரங்களைக் கண்டு களிக்கலாம்.

ஐக்கிய அமெரிக்காவில் 400 வரையான தேசிய வனப் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. கலிபொனிய மாநிலத்தில்தான் கூடுதல் எண்ணிக்கையான வனப் பாதுகாப்ப வலயங்கள் உள்ளதாக எண்ணுகிறேன். போகுமிடங்கள் எல்லாம் அழகிய மரங்களும் நீர்த் தேக்கங்களும் மலைகளும் கண்கொள்ளாக் காட்சியகத் திகழ்கின்றன. அது மட்டுமல்ல பழங்களை உற்பத்தி செய்யும் பழத் தோட்டங்கள்தான் எத்தனை !

ஒக்டோபர் மாதத்தில் இங்கு இன்னுமொரு காட்சியும் எல்லோரையும் கவரும். கடலில் இருந்து வரும் சமன் மீன்களை இங்குள்ள ஆறுகளில் காணலாம். எங்கோ கடலில் வாழும் இம்மீன்கள் தம் இறதிக் காலத்தை தாம் பிறந்த ஆற்றை நோக்கி பிரயாணம் செய்வதில் செலவிடுகின்றன. அப்படி மேல் நோக்கி வரும் அம்மீன்களை சில பொறிகளைப் பயன்படுத்தி அவற்றை தடுத்து, அவை ஒவ்வொன்றினதும் வயிற்றினுள் உள்ள ஆயிரக் கணக்கான முட்டைகளை வெளியே எடுத்து குஞ்சு பொரிக்க வைத்து. சிறிது காலம் வளர விட்டு பின் திரும்பவும் ஆற்றில் அவைகள் கடல் நோக்கிய பயணம் தொடர ஆற்றிலேயே கொட்டுகிறார்கள். மிகவும் அனுபவம் மிக்கவர்களே இப்பணியை கையாளுகிறார்கள். உரிய நேரம் பார்த்து முட்டைகளை வெளியே எடுக்காவிட்டால் பொரித்தல் விகிதம் குறையும்.

தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு

விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா

காலத்தின் பதிவாய்

இனத்தின் குரலாய்...



ponguthamil.com

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 31, 5'7", working as Project Manager in a leading company in UK, British Citizen, seeking a suitable bride. Ref: 575.

2. வயது 28, 5'4", Medical sector, இந்திய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1565.

3. வயது 34 5'5", BA Graduate, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1480.

4. Age 35 5'7", self employed, French Citizen, seeking a suitable bride. Ref: 1444.

5. வயது 40, 5'7", Accountant, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1457.

6. துபாயில் வசிக்கும் வயது 28, 5'5", மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1602

7. வயது 32, 6'0", UK PR, looking for a suitable bride. Ref: 1526.

8. வயது 30, 5'6", Accountant, அவுஸ்திரேலியன் PR பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார் Ref: 1413.

9. வயது 31, 6'0", Post-Study Work Visa in UK, MSc in Bio Technology, seeking a bride. Ref: 1152.

10. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

11. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

12. Age 35, height 5.11" British Citizen, Engineer woking in a company looking for a suitable bride Ref: 1332

13. Age 30, height 5.5" Engineer working in UK with Work permit visa looking for a suitable bride Ref: 1355

14. Age 38, height 6.0" living in Canada, looking for a suitable bride Ref: 1407

15. Age 28, height 5.9" Canadian Citizen, Graduate is looking for a suitable bride Ref: 1339

16. Age 32, height 5.11" Marine Engineer currently studying in Cyprus looking for a matching bride Ref: 1356

17. Age 36 height 5.8" Canadian citizen, graduate, self employed looking for the suitable bride. Ref: 1409

18. 28 வயது, 6'2", Canadian Citizen, well employed, மணமகன் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றார். Ref: 1203

19. 24 years, 5'9", working in a CCTV Company in malaysia, is looking for a suitable bride in Europe. Ref: 1202

20. 31 years, 5'9", Indian Nationality, BA Physicology, seeks a suitable bride. Ref: 1271

21. 37 years, 5'10", British Citizen, Accountant, looking for a matching bride. Ref: 678

22. British citizen 37 years, 5'10", self employed in IT, looking for a suitable partner. Ref: 1199.

23. 40 வயது, 5'9", கனடா பிரஜாவுரிமை பெற்ற, வங்கியில் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1231

24. 55 வயது, 5'6", இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Heathrow Airport இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref:1235.

25. 42 வயது, 5'6", British Citizen, இலண்டனில் IT Company ல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1213.

26. 42 வயது, 5'6", Swiss Citizen, Engineer தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1167.

27. 49 years, 6', living in France, looking for a suitable bride. Ref: 271

28. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 27 வயது, 6" உயரம், Financial Sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 587.

29. British citizen, age 29, 5' 4" Accountant, looking for a suitable groom. Ref: 1130.

30. NHS இல் வேலை செய்யும் 26 வயது, 5'7" உயரம் மணமகன் தகுந்த மணமகளை இலண்டனில் தேடுகின்றார். Ref: 1096.

31. MSC in Civil Engineer, 29 வயது, 5'6" உயரம் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர் Ref:1091.

32. கனேடிய, இலண்டன் பிரஜாவுரிமைகளைப் பெற்ற வயது 36, உயரம் 5'9" Auto Mobile Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1084.

33. Age 31, tall 5'7", Living in UK, seeks a bride in UK. Ref: 686.

34. ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற 35 வயது, 5'5" உயரம் உடைய மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1055.

35. Age 27, tall 5'4", Living in Colombo, speaking disablity, seeks a suitable bride. Ref: 1137.

36. இந்தியாவில் வசிக்கும் 26 வயது, 6'5" உயரம் உடைய மணமகன் இலண்டனில் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1090.

37. Self-Employed, 41 age, 5'7" tall, seeks a suitable bride. Ref: 1092.

38. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 43 வயது, 5'6" உயரம், Financial sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1135.

39. Age 33, tall 5'9", seeks a suitable bride with Europe citizenship. Ref: 1148.

40. Swiss Citizen, Engineer, 42 age, 5'6" tall, looking for a suitable bride. Ref:1167

41. இலண்டனில் பிறந்து வளர்ந்த வயது 33, உயரம் 5.11" Doctor மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1006.

42. Age 27, 5.7", Vegetarian, Engineer is looking for a suitable vegetarian bride. Ref: 1013

43. American Citizen, Age 32, Tall 5.8", doing network & security final year, working as a Supervisor in a compony in USA, seeks for a educated bride. Ref: 1020

44. Age 37, Tall 5.9" living in UK, is looking for a suitable bride. Ref: 972.

45. British citizen, doctor, divorced, age 45, 5.10" looking for suitable bride. Ref: 454.

46. வயது 33, உயரம் 5.6" மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை தேடுகின்றனர். Ref: 880.

47. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, வயது 35, உயரம் 5.8, Export Business செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 948.

## மணமகன் தேவை

1. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

2. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

3. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1531.

4. வயது 27, 5'1", Doctor, German Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1512.

5. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார. Ref: 1596

6. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

7. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

8. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

9. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

10. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246.

11. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

12. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

13. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

14. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

15. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

16. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

17. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

18. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

19. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

20. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka looking for a suitable Groom Ref:1406

21. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

22. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

23. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

24. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

25. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

26. 38 வயது, 5'4", Doctor, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார்.Ref: 1232

27. 46 வயது, 5'4", B.Sc. in Science, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1667.

28. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

29. 46 வயது, 5'2", British Citizen, divorcee, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

30. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

31. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

32. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

33. Nowagien Citizen, 27 age, 5'4" tall, is looking for a suitable groom. Ref: 1104.

34. Royal Scottish Bank Team Leader ஆக இருக்கும் 28 வயது, 5'5" உயரம் கொண்ட மணமகள் Accountant அல்லது IT Qualified மணமகனைத் தேடுகின்றார். Ref: 871

35. British Citizen, 34 age, 5'2" tall, working as a Information Technology, seeks a well educated & employed groom. Ref: 1076.

36. Australian PR, Accountant, 30 age, 5'10" tall, is looking for a educated groom. Ref: 1120.

37. Living in Sri Lanka, a widow, 36 age, 5'3" tall, seeks a matching groom in UK or Sri Lanka. Ref: 1166

38. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Case Progress Officer ஆக Majestic Courtஇல் வேலை செய்யும் வயது 28, உயரம் 5.2" கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 963.

39. British Citizen, Age 21, Tall 5.5" LLB finished, Looking for a well educated groom. It's better if the groom was born in UK or brought up in UK. Ref: 992.

40. Age 26, Tall 5.3", Finished her MA in French and English, is seeking an educated groom in UK. Ref: 897

41. UK PR, பல்கலைக் கழகத்தில் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கும், வயது 22, உயரம் 5" பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1008

42. Working in a Audit Firm in Sri Lanka, Age 29, Tall 5.3" ,is looking for a Roman Catholic groom age between 30 – 36. Ref: 913.

43. இலங்கையில் வசிக்கும் வயது 21, உயரம் 5.2" உடைய பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா குடியுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 956.

44. வயது 34, உயரம் 5.3" Sun TV இல் Web Designer ஆக வேலை செய்யும் பெண்ணுக்கு Europeஇல் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 991.

45. வயது 26, உயரம் 5.2" IT field இல் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். prefer in UK, Canada & Australia. Ref: 1007.

46. வயது 40, உயரம் 5.5" இலங்கையில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 819

47. Age 37, Tall 5.3", doing Administrative Managementin UK, is looking for a groom in Europe. Ref: 1026

48. இலங்கையில் வசிக்கும் வயது 47, உயரம் 5.6" செவ்வாய் தோஷம் கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1027

49. 27 வயது, 5.8" உயரம், Engineer பெண்ணுக்கு, இலண்டன் பிரஜாவுரிமையுடைய நன்கு படித்த மணமகனை அவருடைய பெற்றோர் தேடுகின்றனர். Ref: 865

50. British Citizen, Age 28, tall 5", Pharmacist is looking for a well educated groom. Ref: 866

51. Age 26, tall 5.3", completed BSC Microbiology and doing MBA now in India, looking for a well educated groom in Europe. Ref: 882

52. வயது 26, உயரம் 5', இலங்கையில் ஆசிரியை ஆக பணிபுரியும் செவ்வாய்க் குற்றம் உடைய பெண்ணுக்கு படித்த UK இல் வசிக்கும் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 607

53. Age 35, tall 5.2", Finished her LLB Master Degree, looking for a well educated groom with UK, Canadian or Australian citizenship. Ref: 887

54. French Citizen, Age 52, tall 5.4" is looking for a suitable groom. Ref:891

55. British Citizen MSc in IT, Age 37, tall 5.3" is looking for a well educated groom. Ref: 895.

56. Age 40, 5.2", doing MSC in formulation science, is looking for a suitable groom UK PR or citizenship. Ref: 899

57. English teacher in Sri Lanka, Age 28, tall 5.5" seeks a suitable groom in UK. Ref: 910

58. Age 34, tall 5'6", living in Sri Lanka, self employed, looking for a matching groom. Ref:- 822

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# வாசகர் கருத்து

## பலர் அறிந்ததும் சிலர் அறியாததும்

கடந்த இருவாரங்களுக்கு முன் தங்கள் ஒரு பேப்பர் பூராயம் பகுதியில் மாதவி என்பவர் எழுதிய விடயம் வேதனைக்குரியதும் அறியாமையும் ஆகும். கலைஞர் கருணாநிதி நடாத்திய செம்மொழி மாநாட்டை மாசுபடுத்தி அதற்குச் சென்ற திரு. சிவாப்பிள்ளை உள்ளிட்ட தமிழறிஞர்களை குற்றம் கூறி எழுதியிருந்தார்.

கடந்த பல வருடங்களாக இங்கு வாழும் எம் தமிழர்களால் சாதிக்க முடியாத சாதனையாக தமிழ் மொழியை ஐரோப்பிய மொழிகளுக்கு இணையாக ASSET language பட்டியலில் இணைப்பதில் திரு. சிவாப்பிள்ளை அவர்கள் அரிய பணி ஆற்றியுள்ளார்.

எமது மாணவர்களும் தமிழ் கற்பதன் மூலம் பல்கலைக் கழக அனுமதிக்கு தேவையான UCAS புள்ளிகளைப் பெறும் அரிய வாய்ப்பினைத் தேடித் தந்திருக்கும் திரு சிவா பிள்ளை அவர்கள் OCR, EDEXEL ஆகிய பரீட்சை சபைகளின் தமிழ் மொழிக்கான தலைமைப் பரீட்சகரும் மொழி ஆய்வாளரும் ஆவர்.

அவரது முயற்சியால் தமிழ் மொழியை மாணவர்கள் மூன்று நிலைகளில் கற்கலாம் மூன்று நிலைகளும் பின்வருமாறு

1. Breakthrough - 12 UCAS Points
2. Preliminary (Foundation GCSE) - 34 UCAS Points
3. Intermediate ( Higher GCSE) - 55 UCAS points

March/June/November போன்ற மாதங்களில் நடைபெறும் OCR, ASSET தமிழ்மொழி பரீட்சைக்கு தோற்ற முடியும்.

இவ்வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்தி பிரித்தானியாவில் தமிழ் மொழியை வளர்ப்போம்.

- *நிதர்சனா*

## ஒரு சின்ன விளக்கம்

'என்ன சொல்ல வருகிறார் இந்தச் சேயோன்' எனற தலைப்பில் சுந்தரி அவர்கள் தனிநபர் தாக்குதலாக எழுதியிருந்தார். இதயச்சந்திரனும் அதையொட்டி தன் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். தனிநபர் தாக்குதலுக்கு பொதுவாக நான் பதிலளிப்பது இல்லை. கருத்தை கருத்தால் எதிர் கொள்வோருக்கு மாத்திரமே என் கைகள் பேனாவை ஆயுதமாகத் தூக்கும் என்றாலும் சில விளக்கங்கள் சொல்லும் சந்தர்ப்பம் கிடைப்பதனால் பேனாவைத் தூக்கினேன்

யாவற்றுக்கும் மறுமொழி கூறுவது என் நோக்கம் அல்ல ஒன்றுக்கு மாத்திரமே சிறுவிளக்கம். கே.பி கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பதில் எனக்கு கிஞ்சித்தும் சந்தேகம் கிடையாது. அவர் அரசியல் கைதியாயும் சூழ்நிலைக் கைதியாகவும் இருக்கிறார் என்பதும் மகா உண்மை. இதை யாரும் மறுப்பார்களானால் அது அவரவர் அபிப்பிராயம். அதில் நான் தலையிட விரும்பவில்லை விரும்பியோ விரும்பாமலோ தெரிந்தோ தெரியாமலோ அறிந்தோ அறியாமலோ கே.பி நாய் வேஷம் கட்டியிருக்கிறார். அவர் குரைத்துத் தான் ஆகவேண்டும். அவர் நாய் வேஷம் கட்டியதை வேண்டுமானால் விமர்சிக்கலாம் வேஷம் கட்டியபின் ஏன் குரைக்கிறார் என கேட்க முடியாது.

கே.பியை நம்புங்கள் என்று சொல்ல மாட்டேன். நமபுவதும் நம்பாததும் அவரவர் விருப்பம். சிங்களத்தின் கைதியாக இருக்கும் ஒருவரை நான் நம்ப மாட்டேன். ஆனால் அவரை விளங்க முயல்வேன். அத்தோடு கருணா டக்கிளஸ் போன்றோரோடு கே.பியை ஒப்பிட மாட்டேன். டக்கிளசும் கருணாவும் சுதந்திரமான 'வெளியில்' இருந்தவர்கள். அவர்கள் சூழ்நிலைக் கைதிகள் அல்ல. அவர்கள் சிங்களத்துடன் ஒத்துப் போவதும் தமிழ்த் தேசியத்தை காட்டிக் கொடுப்பதும் எந்த வகையில் நியாயமானது

சுந்தரி, அதே வாதந்தான் லண்டன் மருத்துவருக்கும் பொருந்தும் அவர் லண்டனில் சுகதேகியாகவும் சுதந்திர மனிதராகவும் வாழ்கிறார். முள்ளிவாய்க்கால் அழிவின் பிறகு அவர் என்ன செய்கிறார். லண்டனில் உள்ள சிறீலங்காவின் துணைத் தூதரைச் சந்திக்கிறார். இனிச் சிங்கள அரசுடன் தான் வேலை செய்யப் போகிறேன் என்று பிரகடனப் படுத்துகிறார். அறுபது வருடங்களாக எம்மைக் கசக்கிப் பிழிந்து வாய்க்கரிசி போடுகிற சிங்களமா எமக்கு அறுகரிசி போடும் என நம்புவது? நான் அறிய 25 வருடங்களாக தீவிர அரசியலில் ஈடுபடும் அம் மருத்துவருக்கு இதுவொன்றும் தெரியாதா, புரியாதா? அதனால் தான் கேட்டேன் அம் மருத்துவர் யாருக்கு பணி புரியப் போகிறார் என்று

போதும் சுந்தரி நான் புழுங்கிக் கிடக்கிறேன் அதுதான் உண்மை அந்தப் புழுக்கம் தான் என் பத்தி. 2009 மே மாதத்திற்கு முன்னதாக எனது பத்திகள் நம்பிக்கை நாரினால் கட்டப்பட்டிருந்தன. அந்த மே மாதத்து துக்கங்களின் பிறகு விரக்தி என்னை விழுங்குகிறது. அதுதான் இப்படியான பத்திகளை தருகின்றன. கொஞ்சம் பொறுங்கள் சுந்தரி எல்லாத் தமிழர்களையும் போல இன்னும் ஒரு வருடத்தில் நானும் எழும்பி விடுவேன் அது வரை என்னை சகித்திருங்கள்.

- *சேயோன்*

## குரங்கிற்கு வந்த சோதனை.




## இந்தியாவின் கொமன்வெல்த் கேம்ஸ்















Miaamy Global



Professional quality voip phone service for Small businesses uk and europe

VOIP SOLUTIONS FOR BUSINESS
RESELLER SOLUTIONS

UNLIMITED CALLS FREE TO LOCAL & EUROPE £7.99

Its Quick and easier than you think.

Call tel : 020 3004 8097 or 07940014908



Miaamy global, london, United Kingdom.
web : www.miaamyglobal.com

Miaamy Global Miaamy Global

# ஆஸ்கார் தேர்வில் கேவலப்பட்ட தமிழ்சினிமா



நான் ஆஸ்கார் வாங்கி விடுவேன், என்னை உலக சினிமா அங்கீகரிக்க வில்லை, விருது கமிட்டி சரி இல்லை, வட இந்தியர்கள்நம்மைபுறக்கணிக்கிறார்கள், என்று வாய்சவடால்மட்டுமேவிடும் தமிழ்சினிமாவுக்கு ஒருகேவலமான வருடமாக இந்த வருடமும் இருந்திருக்கிறது.

ஆஸ்காருக்கு பரிந்துரைக்க தமிழ் சினிமா தேர்வுக்குழு மத்திய குழுவுக்கு பரிந்துரைத்த படங்களைப்பார்த்தால் தமிழ் சினிமா பிரகஸ்பதிகளைப் பார்த்து நமுட்டு சிரிப்பு சிரிப்பதைத் தவிர வேறு வழி தெரிய வில்லை.

வருடம் ஏறக்குறைய 130 படங்களைத் திரைக்குக் கொண்டுவருகிறது தமிழ் சினிமா. ஆஸ்காருக்கு அனுப்ப இதிலிருந்து 5 படங்கள் தேர்ந்தெடுக்க முடிய வில்லை. திரையில் சமூக சிந்தனை இல்லை, தீர்க்கமான காட்சிகள் இல்லை, தெளிவான கதை இல்லை, புதிய காட்சி அமைப்பு இல்லை. இப்படி இல்லை? இல்லை? இல்லைகளுக்கு மத்தியில் தமிழ் சினிமா வளர்கிறது என்ற வசனம் பேசுபவர்களுக்கு பஞ்சமே இல்லை.

இந்த வருடம் ஆஸ்காருக்கு, நம்ம தமிழ் சினிமாவினர் பரிந்துரைத்த தமிழ் படங்களின் பெயர்களை சிரிக்காமல் படிக்க கேட்டுக்கொள்கிறேன்.

*1) ராவணன்*

*2) மதராஸப்பட்டிணம்*

*3) விண்ணைத்தாண்டி வருவாயா*

*4) அங்காடித்தெரு*

*5) சிங்கம்*

என்ன கொடுமை சார்னு நீங்க கேட்கிறது எங்க காதுலயும் விழுது? இந்த படங்களை கொஞ்சம் அலசலாம்.

*ராவணன்*

இந்த படம் வந்து தமிழ் சினிமா ரசிகர்களால் பெரிதாக கிழிக்கப்பட்ட படம். தெளிவில்லாத கதையும், மகா மட்டமான வசனமும் இந்த படத்தின் தரத்திற்கு சான்று. இந்த படம் ஒளிப்பதிவிலும், மேக்கிங்கிலும் இந்திய சினிமாவின் அடுத்தகட்டம்னு சொல்லிக்கொள்ளலாம். ஆனால் இதை ஆஸ்காருக்கு போய் பரிந்துரைக்கிறோம்னு சொன்னால் ஆஸ்கார் விருது கமிட்டி இந்தியாவை பார்த்து சிரிக்காது???

அதிலும் கார்த்திக்கின் கதாபாத்திரம் படத்தின் எதார்த்தம் என்கிற விஷயத்தை கொன்ற விசயம் அல்லவா அது? இந்த படம் பார்த்த நம்ம ஊர் தெருக்கோடி ரசிகனுக்கு கூட கேள்வி ஏன் இதை இந்த இயக்குனர் இப்படி பண்ணி இருக்கார்னு கேட்பாங்க, அப்படி இருக்கும் போது இந்த படத்தை எப்படி ஆஸ்காருக்கு பரிந்துரைக்க சொல்கிறீர்கள்? மனிரத்னம் பெரிய டைரக்டர் என்பதாலா?? பெரிய இயக்குனர் நல்ல படம் மட்டும் தான் எடுப்பாரா? அவரும் ராவணன் எடுப்பார் அப்படின்னு உலகத்துக்கு சொல்லிட்டார்.

*மதராஸபட்டிணம்*

நல்ல பொழுதுபோக்கு படமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட படம். ஆனால் இந்த படம் பார்த்த அத்தனை பேருக்குமே டைட்டானிக் ஞாபகம் வந்து போயிருக்கும். இது தமிழ் சினிமாவின் டைட்டானிக் என்றுதான் படத்தின் இயக்குனரே விளம்பரம் செய்திருக்கிறார். ஆனால் ஒரிஜினல் டைட்டானிக் பார்த்தவங்களுக்கு நீங்க பொம்மை டைட்டானிக் காட்டணும் நினைச்சிருக்கீங்களே??

*விண்ணைத்தாண்டி வருவாயா*

போன வருடம் தமிழ் சினிமா மற்றும் தெலுங்கு சினிமா காதலர்களுக்கு நல்ல தீனி போட்ட படம். இதே அளவு மொக்கை என்று விமர்சனம் வாங்கிய படம். இந்த படத்தை எப்படி விருதுக்கு பரிந்துரைத்தார்கள் என்பது மில்லியன் டாலர் கேள்வி? விருதுக்கு உரிய தன்மைகள் இந்த படத்துல பூஜியம்.

விருதுக்கு செல்லும் படம் எப்படி இருக்கனும்னு ஒரு அடிப்படை அறிவு இல்லாதவன் கூட இந்தப்படத்தைத் தேர்வு செய்ய மாட்டான். ஒரு வேளை சிம்பு பேசும் அந்த 4 எழுத்து கெட்ட வார்த்தை வெள்ளைகாரர்களுக்கு ரொம்ப பிடிக்கும் என்று நினைத்திருப்பார்களோ என்ற சந்தேகம் தான் வருகிறது.

*அங்காடித்தெரு*

நம்ம ஊர் விருதுகளுக்கு சற்று பொருத்தமான படம் என்றால் இது மட்டுமே. அதுவும் நம்ம ஊர் விருதுகளுக்கு மட்டுமே. உலகளவிய விருதுகளுக்கு பொருத்தமானதாகத் தெரியவில்லை. காரணம் படத்தின் கதை சொல்லும் பாங்கு, ஒரே கண்ணோட்டம் இந்த படம் முழுவதும் விரவி கிடக்கும். யாதார்த்தம் என்ற பெயரில் யதார்த்தமே இல்லாமல் இருக்கிறது இந்த படம்.

யதார்த்தம் இப்படிப்பட்டதுதான் என்று சொன்ன டைரக்டர் படத்தில் டுயட் வைத்தது எந்த ஊர் யதார்த்தம் என்று தெரியவில்லை. ஆனாலும் உழைக்கும் மக்களின் கஷ்டங்களும் துன்பங்களும் சற்று மிகைப்படுத்தியேனும் சொல்லப்பட்டதற்கு இயக்குனரை கண்டிப்பாக பாராட்டலாம்.

*(அ) சிங்கம்*

தமிழ் சினிமா படைப்பாளிகளை இதைவிட யாரும் கேவலப்படுத்த முடியாது. ஒரு மசாலா குப்பையை ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்க சொன்ன நம்ம சினிமாதுறையை என்ன சொல்வது ? சிங்கம் சூர்யாவின் வெற்றிப்படம்தான்? ஹரியின் மசாலா வரிசையில் இதுவும் ஒன்று. இந்த படத்துக்கு ஆஸ்கார் என்றால்?? கில்லிக்கு 10 ஆஸ்கார், தூள்க்கு 10 ஆஸ்கார், தில் க்கு ஒரு 15 ஆஸ்கார், ஏன் குருவி, சுறாவுக்கு கூட ஆஸ்கார் கொடுக்கலாம்.

என்னயா உங்க ரசனை, எதை எதை எங்க வைக்கணும்னு தெரிய வேண்டாமா ? இதை எல்லாம் விருதுக்கு பரிந்துரைக்கிறதா சொல்லி தமிழ் சினிமாவில் நல்ல படம் எடுக்க ஆளே இல்லன்னு இந்தியா முழுக்க போஸ்டர் அடிச்சு ஒட்டி இருக்கீங்க??. ஆனது ஆயிடுச்சு இன்னும் ஒரு வாரம் வெயிட் பண்ணா எந்திரன் வந்துடும் அதையும் சேர்த்தே ஆஸ்காருக்கு அனுப்புங்க?

இனிமே சிங்கம் சன்டீவில உலகதொலைக்காட்சியில் முதன் முறையாக வெளி வருபோது விளம்பரத்துல ஆஸ்கார் விருது பெற்ற என்று சொன்னாலும் சொல்லுவார்கள் தமிழ் சினிமாவில் தரமான சினிமா குறைந்ததற்கு இதைவிட ஒரு பெரிய சான்று தேவை இல்லை.

தரமான படம் எடுத்து, இது படம் என்று மார்தட்டி ஆஸ்கார் சென்றிருக்கும் பீப்லி லைவ் படம் வெற்றி பெற வாழ்த்துவோம்

- *நறுமுகை*

# The Town

## திரை விமர்சனம்



அமெரிக்காவின் வரலாற்று சிறப்பு மிக்க பாஸ்டன் நகருக்கு, மற்றொரு பக்கமும் உண்டு. கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 300க்கும் மேற்பட்ட வங்கிக் கொள்ளைகள் இந்த நகரில் மட்டும் நடப்பது உண்டு. பொதுவாக அமெரிக்க நகரங்கள் இரு பிரிவாக பிரிந்து கிடக்கும் - அப்டவுன் (Up Town) மற்றும் கெட்டோ (Ghetto). இதில் பாஸ்டனில் உள்ள சார்ல்ஸ்டவுன் இரண்டாம் பிரிவில் சேர்த்தி. அதனால் தான் இவ்விடம் வங்கி கொள்ளையர்களின் புகலிடமாகவும் இருக்கிறது. 'தி டவுனின்' கதை அங்கு இருக்கும் ஒரு வங்கிக் கொள்ளை கும்பலை சுற்றி நிகழ்கிறது.

மெக் க்ரே (Ben Affleck), ஜேம்ஸ் (Jereme Renner) இருவ்ரும் தேர்ந்த வங்கி கொள்ளையர்கள். ஒரு வங்கிக் கொள்ளையின் போது வழக்கத்திற்கு மாறாக அந்த வங்கி மேலாளர் க்ளேரை (Rebecca Hall) உடன் கடத்தி செல்கின்றனர். அவளை விடுவித்தாலும், இறுதியில் கொள்ளையர்கள் வாழும் அதே பகுதியில் க்ளேரும் வசிக்கிறாள். சட்டத்தின் காவலர்களிடம் ஏதேனையும் உளறிக் கொட்டிவிடுவாள் எனும் அச்சத்தில், மெக் க்ரே அவளை பின் தொடர்வது போல் சென்றாலும், இறுதியில் க்ளேரிடம் காதல் வயப்படுகிறான். எனினும் சிறுவயதில், தன்னையும், தன் தந்தையும் தவிக்க விட்டு பிரிந்து சென்ற தன் தாய் குறித்த ஏக்கம் அவனுள்ளே ஒட்டிக் கொண்டே இருக்கிறது. அதேபோல் இளம் பருவத்தில் அவன் கண்ட எதிர்காலக் கனவுகள் சிதைந்து போனதால் அவன் குற்ற வாழ்க்கைக்குள் நுழைந்தது அவனுடன் ஆறாத வெப்பமாகவே பயணிக்கிறது. கிளேய்ருடன் சேர்ந்து ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்க விரும்பும் அவன், கொள்ளை அடிப்பதை நிறுத்துவது எனும் முடிவிற்கு வருகிறான்.

இதற்கிடையில் இவர்களை எப்படியாவது பிடித்தே தீருவேன் என்று கங்கனம் கட்டிக் கொண்டு திரியும் எப்.பி.ஐ அதிகாரி (Jon Hamm). மெக் க்ரேவின் காதல் என்னவானது, அவர்கள் எப்.பி.ஐயிடம் பிடிபட்டார்களா என்பது தான் மீதிக் கதை.

பொதுவாக வங்கிக் கொள்ளை திரைப்படங்கள் கொஞ்சம் ஆக்‌ஷன் வகையில் தொகையுறும். இருப்பினும், Heat போன்ற திரைப்படங்கள் சிறிது ட்ராமா கலந்த ஆக்‌ஷனில் சுவாரசியமூட்டும். தி டவுன் இரண்டாம் வகை. எனக்கு தெரிந்தவரை 'Heat' திரைப்படத்தை பிடிக்காதவர்கள் கூறிய காரணம், திரைப்படத்தின் நீளம். அந்த வகையில் 'டவுன்' 120 நிமிடங்களே ஓடுகிறது. சொல்லப் போனால் 'Heat' திரைப்படத்திற்கு அடுத்து எனக்கு பிடித்த வங்கி கொள்ளை படங்களில் 'டவுனு'ம் ஒன்று.

'தி ஹர்ட் லாக்கர்' படத்தில் நடித்த Jereme Renner திரும்பவும் இந்த படத்தில் தனது மெத்த ஆக்டிங்கை அருமையாக வெளிபடுத்தியுள்ளார். மனிதருக்கு இந்த வருடம் ஆஸ்கர் நாமினேசன் கிடைக்கவில்லையென்றால் தான் ஆச்சர்யப்படுவேன். திரைப்படத்தின் இறுதியில் சிறிது வழக்கமான ஃபார்முலா வகையை தூவியது போல் ஒரு தோற்றம்.

அசர வைக்கும் சஸ்பென்ஸ், எதிர்பாராத திருப்பங்கள், அதிரடி துப்பாக்கி மோதல்கள், நெகிழ வைக்கும் முடிவுகள் என திரைப்படத்தின் இறுதி 30 நிமிடங்களிலும் தேர்ந்த அனுபவம் கொண்ட ஒரு இயக்குனர் போல் பார்வையாளனை அணுங்கவிடாது திரை வசியம் செய்கிறார் இயக்குனர் பென் அஃப்லெக். ஒரு நல்ல நடிகன் என்பதைவிட ஒரு சிறந்த இயக்குனராக அவர் வழங்கியிருக்கும் The Town கண்ணியமான ஒரு படைப்பு ஆகும். டக்ளஸ், கிளேய்ரை ஏதாவது ஒரு கரையில் காண்பானோ இல்லையோ, பென் அஃப்லெக்கின் அடுத்த இயக்கத்தின் வரவிற்காக ரசிகர்கள் நிச்சயம் காத்திருப்பார்கள்

- *அம்பலவாயன்*



NAG & Co.
SOLICITORS

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# எந்திரன்

## திரை விமர்சனம்



*நடிப்பு : ரஜினி,ஐய்வர்யா பச்சன், சந்தானம்*

*இசை: ஏ.ஆர். ரகுமான்*

*ஒளிப்பதிவு: ரத்னவேலு*

*இயக்கம்: ஷங்கர்*

இதுவரை இந்திய படங்களுக்கு இல்லாத எதிர்ப்பார்ப்புடன் வந்திருக்கும் படம் எந்திரன். காரணம் இவர்கள் சேர்த்த மெகா கூட்டணி என்றால் கண்டிப்பாக மிகையல்ல. ஷங்கரின் 10 வருட கனவை ரஜினி எவ்வித குறையும் இல்லாமல் நிறைவேற்றியுள்ளார். இவ்வளவு பணம் போட்டு ஒரு மசாலா படம்தான் எடுக்கணுமான்னு கேள்வி கேட்கிறவர்களையும் இந்த மசாலாவை எடுக்கலாம்னு சொல்ல வச்சிருக்கார் ஷங்கர். பேருக்கு விஞ்ஞான படம் என்றிருந்தாலும் நம்ம ஊர் மசாலாவை சரியாகவே பயன்படுத்தி தமிழ் சினிமா ரசிகர்களை திக்குமுக்காட வைத்திருக்கிறார் ஷங்கர் என்றோ சொல்லவேண்டும்.

ரஜினி தி பாஸ், இவர்தான் இத்தகைய எதிர்ப்பார்ப்பின் மையப்புள்ளி, இவரின்றி ஒரு அணுவும் அசைந்திருக்காது எந்திரனில். எந்திரனில் 3 வேடம் விஞ்ஞானி ரஜினியை தவிர மற்ற 2 ரஜினி கேரக்டர்கள் தூள் பரத்தி இருக்கிறார்கள், காதல் காட்சிகளில் அந்நியன் ரெமோ கொடுத்த பூரிப்பை தருகிறார் ரஜினி. ஐஸ்வர்யா ராய் மீது அவர் காதல் வயப்படுவதும் அவர் அதை விவரிப்பது என அட போட வைக்கிறார் ஷங்கர். கதநாயகனாக நீண்ட நாட்களுக்கு பிறகு ரஜினி நடித்த ஒரு படம் இதுவாகத்தான் இருக்கும். படத்தில் மூன்றாவதாகவும் ஒரு ரோபோ இருக்கிறார்.

படத்தின் நாயகி ஐஸ்வர்யாராய், சகல முகபாவங்களிலும் வெளுத்துக்கட்டுகிறார். இவருக்கு வயதாகிவிட்டது என்று இன்னும் 30 வருடத்துக்கு சொல்ல முடியாது. அதகளப்படுத்துகிறார் ஐஸ். அதும் சிட்டி தன் காதலை சொல்லியவுடன் அவரின் நடிப்பு அடுத்த பரிமாணம்.

படம் முழுக்க ரஜினியும் ஐஸ்வர்யா ராயுமே இருப்பதால் படத்தில் வில்லனுக்கு வேலை இல்லை என்றே சொல்லலாம். வந்து ஷங்கர் சொன்ன வேலையை செய்து விட்டு சென்றிருக்கிறார் ஹாலிவுட் வில்லன் டானிக்.. படத்தில் கருணாஸும், சந்தானமும் எதற்கு என்றே தெரியவில்லை. ஹனீபாவும் கலாபவன் மணியும் ரசிக்க வைக்கிறார்கள். படத்தில் மற்ற பாத்திரங்கள் எதுமே மனதில் இல்லை. முழுக்க ரஜினி, ஐஸ் மட்டுமே!

ஆரம்பத்தில் காமடியாக நகர்ந்த ஷங்கரின் திரைக்கதை இடைவேளையின் பின்னர் சூடுபிடிக்க தொடக்கி இறுதி காட்சிகளில் சரவெடியாக மாறி படத்தின் பெரும் பலமாக அமைந்தது. சுஜாதாவின் கதைக்கு உயிர்கொடுத்த ஷங்கர் சுஜாதாவின் வசங்களுடன் மதன்கார்க்கின் வசனங்களையும் தனது வசனங்களையும் படத்தின் தேவைக்கேற்றால்போல பயன்படுத்தியுள்ளார். சிட்டி ஐஸ்வர்யாவை விரும்புவதாக கூறுமிடத்தில் சிட்டியும் வசீகரனும் ஐஸ்வர்யாவும் பேசும் வசனங்கள், இறுதியாக சிட்டி பேசும் வசனங்கள், கடைசியில் படம் முடியும்போது 'சிந்தித்ததால்' எனவரும் ஒருவரி வசனம் உட்பட வசனங்கள் படத்தின் தரத்தை உயர்த்தியிருக்கின்றதென்றே சொல்லலாம்.

இந்த படத்தில் எல்லாமே இந்திய படங்களுக்கு புதுமைதான் இந்திய சினிமாவுக்கே க்ராபிக்ஸ் காட்சிகளை அறிமுகப்படுத்தி இருக்கிறார் ஷங்கர். இதுவரை இந்திய சினிமாவில் இப்படிப்பட்ட கிராபிக்ஸ் இல்லை, படு யதார்த்தமாக அமைந்திருக்கிறது க்ராபிக்ஸ் காட்சிகள் எது உண்மை எது க்ராபிக்ஸ் என்றே அறிய முடியாத வண்ணம் அருமையாய் செய்திருக்கிறார் ஷங்கர்.

இசை எற்கனவே பட்டி தொட்டி எல்லாம் பறக்கும் பாடல்கள், படத்திற்கான அதிகபட்ச ஒத்துழைப்பை ரஹ்மான் கொடுத்துவிட்டார். பிண்ணனி இசை படத்திற்கு பெரும் பலம்.

கேமரா ரத்னவேலு , வழக்கமாக ஷங்கர் படத்தில் கேமரா மேன் வேலை பார்ப்பதற்கு தொழிலை விட்டு விடலாம். அன்னியன் ப்டத்தில் குங்பூ பைட்டில் 360 டிகிரிக்கு கேமராவை கேட்டு கொடுமைப்படுத்தியவர் ஷங்கர், பாய்ஸ் படத்தில் ஸ்டில்ஸ் கேமராவை பயன்படுத்தி படம் எடுத்தவர், ரத்னவேலுவை விட்டுவிடுவாரா என்ன?, காட்சி விறுவிறுப்பாக இருக்க பெரிது உதவி இருக்கிறது கேமரா, முக்கியமான விசயம் வயசான ரஜினியும், ஐஸ்ம் அழகாக தெரிய காரணம் இவர்தான்.

படத்தொகுப்பாளர் அன்டனி ஆரம்பத்தில் சீரானவேகத்தில் சென்று கொண்டிருந்த எந்திரனை இறுதி 30 நிமிடங்களுக்கும் மின்னல்வேகத்தில் நகர்த்தவும் ரசிகர்களை கதிரையின் நுனிவரை கொண்டுவரவும் உதவியிருக்கிறார். ஆனாலும் சிட்டி நுளம்புடன் பேசும் காட்சி, ரயில் சண்டை என்பவற்றில் இன்னும் கொஞ்சம் கத்திரி போட்டால் நன்றாக இருந்திருக்கும்.

சாபுசிரில் ஷங்கருக்கு பக்க(கா) துணையாக இருந்திருக்கிறார்கள். 150கோடியில் பிரமாண்டத்தை கொடுத்திருக்கிறார்கள். சாபுசிரிலின் உழைப்பு ஒரு மசாலா படமாக இருந்தாலும் வியப்பிற்குரியது. அலெக்ஸ் மார்டினை வைத்து இதுவரை இல்லாத அளவுக்கு சண்டைக்காட்சிகளை அமைத்திருக்கிறார். இந்த படத்தில் வேலை பார்த்த இறுதி தொழிலாளி வரை அவர்களது சிறப்பான பணிக்காக பாராட்டை தெரிவிக்க வேண்டியது நம் கடமை.

அப்படியானால் படத்தில் என்னதான் மைனஸ்?

ஐஸ்வர்யா காரில் இருக்கும்போது கூட இருக்கும் ரோபவை போலீசார் சரமாரியாக சுடுவது, அனைத்து வாகனங்களையும் மிதித்துத்தள்ளும் ரோபோகூட்டம் வசீகரனின் காரை மட்டும் மிதிக்காமல் துரத்துகிறது என ஓரிரு இடங்களில் லாஜிக் மீறல்கள் இருந்தாலும் மசாலாப் படமொன்றை லாஜிக் மீறல்கள் இல்லாமல் எடுப்பது சாத்தியமில்லை என்பதால் இதுவொரு பெரியகுறையல்ல.

*எந்திரன்! திரையில் ஒரு தீபாவளி*

*- இணையம்*

# சினித்துளி

## ஹாலிவூட்டில் படமெடுக்கும் மிஷ்கின்!



தமிழ் சினிமா,பாலிவுட்,அப்படியே ஹாலிவுட் இதுதான் தமிழில் படம் செய்து கொண்டிருக்கும் பல இளம் இயக்குனர்களின் கனவு. ஆனால் தான் நேரடியாக ஹாலிவுட்டுக்கு தாவ உள்ளேன் என்று மிஷ்கின் அறிவித்துள்ளார். மிஷ்கின் இயக்கத்தில் வெளிவராமலிருக்கும் நந்தலாலா, டகாஷி கிட்டானோவின் கிக்கு ஜிரோ படத்தின் அப்பட்டமான தழுவல். விரைவில் வெளிவரவிருக்கும் யுத்தம் செய், மெமரிஸ் ஆஃப் மார்டர் படத்தின் தழுவல்.

அந்த வகையில் உலக சினிமாவை மிஷ்கின் ஏற்கனவே இயக்கிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். இவரது நண்பர் ஒருவர் இவரது இயக்கத்தில் ஹாலிவுட்டில் படமெடுக்கத் தயாராக இருக்கிறாராம்.

## லிங்குசாமியின் வேட்டை!



மாற்றம் ஒன்றுதானே மாறாதது. விஜய்க்கு சொன்ன கதையை ஆர்யா பக்கம் திருப்பி அவருடன் வேட்டையாட போகிறார் லிங்குசாமி. லிங்குசாமி அடுத்து இயக்கப் போகும் படத்திற்கு பெயர் வேட்டை. கதாநாயகனாக ஆர்யா ஒப்பந்தமாகியுள்ளார். கதை, திரைக்கதை, இயக்கத்தை லிங்குசாமி கவனித்துக் கொள்ள பிருந்தா சாரதி வசனம் எழுதுகிறாராம். யுவன்ஷங்கர் ராஜா இசை, நீரவ்ஷா ஒளிப்பதிவு என கூட்டணியுடன் இந்த 'வேட்டை' யை ஆடப்போகிறாராம் லிங்குசாமி!

## வாய்ப்பிழந்த அங்காடித்தெரு!



அமீர்கான் தயாரிப்பில் உருவான பீப்ளி லைவ் படத்தால் ஆஸ்கருக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தது வசந்தபாலனின் அங்காடித் தெரு. சென்னையின் மாபெரும் அடுக்குமாடி ஜவுளிக் கடைகளில் வேலைக்கு சேர்ந்து, கொத்தடிமைகளாய் அவதிப்படும் பதின்ம வயது இளைஞர்களின் வாழ்க்கையை காட்டிய படம் இது. இந்தியாவின் சார்பில் ஆஸ்கர் விருதுக்குச் செல்லும் படங்களில் ஒன்றாக அங்காடித் தெருவை தேர்வு செய்திருந்தனர்.

அமீர்கானின் பீப்ளி லைவ் படத்துக்கும் அங்காடித் தெருவுக்கும்தான் கடும் போட்டி நிலவியது. இறுதியில், வறுமையில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் அவலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய பீப்ளி லைவ் படத்துக்கு ஆஸ்கர் செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

## காவலனை நம்பும் விஜய்!



விஜய்யின் 51வது படமாக உருவாகி வருகிறது காவலன். சித்திக் இயக்கத்தில் 80 சதவீத படப்பிடிப்பு முடிந்துள்ளது. பாடல் காட்சிகள் ஐரோப்பிய நாடுகளில் படமாக்கப்பட உள்ளன.

இந்தப் படக் குழு சமீபத்தில் படத்திற்க்கான அறிமுக விழாவுக்காக பத்திரிகையாளர்களைசந்தித்தது. அதில் விஜய் கூறியதாவது 'அசின், வடிவேலு, சித்திக் என என்னுடைய ஹ்ட் கூட்டணி இதில் அமைந்திருக்கிறது. சித்திக் இயக்கத்தில் ப்ரண்ட்ஸ் படம் வெற்றி பெற்றதைப் போல் இந்தப் படமும் வெற்றி பெறும் என்றார். இது நிச்சயம் ஒரு கமர்ஷியல் ஹ்ட்டாக இருக்கும்' என்றார்.

அனைத்து வகையான இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், மளிகைப்பொருட்கள் பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள் நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்








கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்....
020 8905 7765

MARUTHI CASH & CARRY

15 - 17 Queensbury Station Parade Queensbury HA8 5NR

Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

## உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

**உங்களுக்கு கிடைக்கும்**

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

**இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.**

**020 7243 1417**

## முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

**020 7243 1417**



## Cheque Line

*31, Queens Way, London, W2 4QJ.*

## Select

**Estate & Lettings**

*Eastam, Lewisham, Hanger lane, Newbury Park* இன்னும் லண்டனில் பல பகுதிகளில் *Grocery & off Licence, Chicken Shop, A3* அனுமதியுடனான கடைகள் *Leasehold, Freehold*-க்கு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் கண்டிக்குளி, ஆரியகுளம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் வெறுங்காணி, வீட்டுடனும் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதியில் 5 பரப்பு, ஹோட்டல், மருத்துவ விடுதி போன்றவற்றுக்கு உகந்தது.

லண்டனில் வீடுகள் வாங்க, விற்க, வாடகைக்கு விடவும் நம்பிக்கையான, நாணயமான சேவைக்கு நாட வேண்டிய நிறுவனம்.

**0208 470 1500**

**07956 150 580**

www. select.gb.com



## R.S. Finance

**Commercial Mortgages & Business Loans**

Contact: **Sri**
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**



**Re-Mortgages**
(Raising Funds to Start Own Business and Other Needs)
**Secured Loans**

**Commercial Loans**

- Shops (Pharmacies)
- Petrol Stations
- Restaurants & Hotels
- Care Homes Etc.

Loans will be arranged for lease hold and free hold businesses

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

**Whatever your needs, Regarding your Commercial Loans**

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7. நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொ[illegible]ர்பு கொள்ள[illegible]ம்.
- ✓ வி[illegible]க்கு உ[illegible]ரஷ்தம். [illegible]லையில் எங்க[illegible]ருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Ca[illegible]tre open 2[illegible]*

# 0844 855 8017

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ABTA 80626

ATOL PROTECTED 5551